337

337

Approved by the Text-Book Committee, Madras.

# NEW
# TAMIL READER
## FIFTH BOOK

# புதிய
# ஐந்தாம் பாட புத்தகம்.

OFFICE OF THE R...
17 OCT 1933
MADRAS

E. M. GOPALAKRISHNA KONE,

MADURA & MADRAS.

...med] 1933. [*Price* 6 *As.*

...ior Power Press, Madura.

TB
031(5)
N33
86192

## சிவிக்ஸ் துரைத்தன விளக்கம் என்னும்

# இராஜாங்கமுறை நூல்.

## நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப்பொருட்பாடம்.

E. கோவிந்தசாமி ராவ் அவர்கள் எழுதியவை.

**துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.**

**மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் மிகவும் அவசியமானவை**

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடமாக ஏற்பட்டுள்ள (சிவிக்ஸ்) துரைத்தன விளக்கம் என்னும் இராஜாங்கமுறை நூல் இயற்கைப் பொருட்பாட சம்பந்தமான புத்தகங்கள் அநேகம் ஏற்பட்டிருப்பினும்; அவையாவும் நுண்ணறிவுடையோரன்றி ஏனையோர் அதன்விஷயங்களை நன்குணர்தலரிதாயிருப்பது பற்றியும், உபாத்தியாயர்கள் மாணவர்கட்குப் போதிக்கும் சிரமம் பெரிதாயிருப்பது பற்றியும் உபாத்தியாயர்கட்குச் சிரமமின்றி மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்தமாத்திரத்தில் இலகுவாய் விஷயங்கள் தெரியும் வண்ணம் பரீக்ஷாதிகாரிகளின் விளக்கங்களையனுசரித்தே இனிய எளிய தமிழ்நடையில் எழுதி, வெளிப்படுத்தி இருக்கின்றோம். இதனைக் கண்ணுற்ற நண்பர்கள் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம். தனித்தனி விலை அணா 4.

---

## தமிழ் அச்சுக்காப்பிப் புஸ்தகங்கள்

A. நாராயணசாமி ஆச்சாரியார் செய்தது.

1 நிர். காப்பி, 2 நிர் காப்பி, 3 நிர் காப்பி, ஷெ A காப்பி 4 நிர் காப்பி, 5 நிர் காப்பி, தனித்தனி விலை அணா 1.

## செய்யுட் பாடப் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| உலகநீதி மூலமும் உரையும் | .... | பை | 9 |
| ஆத்திசூடி மூலமும் உரையும் | .... | பை | 9 |
| கொன்றை வேந்தன் மூலமும் உரையும் | .... | பை | 9 |
| வெற்றிவேற்கை மூலமும் உரையும் | .... | பை | [illegible] |
| மூதுரை அல்லது வாக்குண்டாம் உரையுடன் | | அணா | [illegible] |
| நன்னெறி மூலமும் உரையும்.... | .... | அணா | 1[illegible] |

இவை மூலச்செய்யுள்கட்கேற்ற பதவுரையும் கருத்துரையும் இலக்கணக்குறிப்பும் பாடசாலைச் சிறுவர்கட்கு ஏற்றவாறு இலகுவான நடையில் எழுதப்பெற்றுள்ளன.

# புதிய

# ஐந்தாம் பாடப் புத்தகம்.



OFFICE OF THE REGISTRAR
17 OCT 1933
MADRAS

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருள் ஒருவரும்,

புத்தக வர்த்தகருமாகிய,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

வெளியிட்டது.

ரிஜிஸ்தர் செய்தது]     1933.     [விலை அணா ௬.

PRINTED AT THE
EXCELSIOR POWER PRESS.
MADURA.

TB
031(5)
N33
1391
494.81186
86192

# முகவுரை.

---

இப்புத்தகத்திலுள்ள பாடங்கள் முற்றிலும் துரைத்தனத்தாருடைய விதிகளை அனுசரித்துப் புதியதோர் முறையில் எழுதப் பெற்றுள்ளன.

இதில் இதிகாசம், சுகாதாரம், அரசியல், பூமி சால்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணி சால்திரம், நீதிக்கதைகள், விவசாய சால்திரம், தாவர சால்திரம், சரித்திர சம்பந்தம் ஆகிய பாடங்களாகவே அமைக்கப்பெற்றுள்ளன.

இதில் சிற்சில பாடங்கள், கதைகளுக்கேற்ற இனியபாடல்களாகவும், நாடகமாகவும் நன்கு இயற்றப்பெற்றுள்ளன.

பாடங்கள் ஒவ்வொன்றும் படிக்கும் மாணவரின் மனத்தை உற்சாகப்படுத்துமாறும், நல்லொழுக்கம், தெய்வபக்தி, ராஜ பக்தி, குருபக்தி, பெற்றோரைப் பேணுதல், பெரியாரைக் கனம் பண்ணுதல், ஜீவகாருண்யம், அன்புடைமை, தீமை செய்யாமை முதலிய நற்குணங்கள் அவர்கள் மனத்தில் பதியுமாறும் வரையப்பெற்றுள்ளன.

பாடங்களின் கருத்தமைந்த சித்திரப் படங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தைப் படிப்பதால் நம் நாட்டு முற்கால தற்கால அரசியல், முற்காலத்துப் பெரியோரது சரித்திரம் முதலியவற்றை மாணவர் நன்குணர்ந்து, நமது தாய்மொழி யாகிய தமிழ்ப் பாஷையில் மிகத் தேர்ச்சியுறுவார்கள் என்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தைக் கண்ணுறும் போதனை ஆசிரியர் இதனை நன்கு ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

நூலாசிரியன்.

# பொருளடக்கம்.


| எண். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | நமது இளவரசர் | 9 |
| 2. | சிங்கம் | 13 |
| 3. | காப்பி | 16 |
| 4. | உண்மை உயர்வைத் தரும் I | 20 |
| 5. | ஷை II | 23 |
| 6. | பட்டுப்பூச்சி | 25 |
| 7. | மீன் | 29 |
| 8. | மார்க்கண்டேயர் | 33 |
| 9. | சுத்தமான தண்ணீர் | 36 |
| 10. | தேனும், தேனீயும் | 40 |
| 11. | பாம்பு | 45 |
| 12. | கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு கம்பர் I | 48 |
| 13. | ஷை கம்பர் II | 52 |
| 14. | பருந்து | 55 |
| 15. | விதையும், விதைமுளைத்தலும் | 59 |
| 16. | நட்பின் பெருமை | 63 |
| 17. | ஷை பாட்டு | 68 |
| 18. | முள்ளம் பன்றி | 70 |
| 19. | நமது ராஜதானியில் நிலங்களும் அவற்றைப் பண்படுத்தலும் | 73 |
| 20. | ஷை II | 76 |
| 21. | சங்கராச்சாரியார் | 78 |
| 22. | காய்ச்சல் | 81 |
| 23. | ஐக்கிய நாணயசங்கம் | 84 |
| 24. | பாண்டித்துரைத் தேவரும் மதுரைத் தமிழ்ச்சங்கமும் I | 89 |
| 25. | ஷை II | 91 |
| 26. | தசை நார் | 94 |
| 27. | திருமலைநாயக்கரும், மதுரை நகரமும் | 96 |
| 28. | திணை, பால், எண், இடம், வேற்றுமை | 101 |
| 29. | மாகாண அரசாட்சி | 105 |
| 30. | சாரணச்சிறுவர் | 108 |
| 31. | பெரியோரைப் பழியேல் I | 112 |
| 32. | ஷை இரண்டாங்களம் | 118 |
| | வாக்குண்டாம் | 121 |
| | அறப்பளீசுரசதகம் | 125 |
| | திருப்புகழ் | 126 |
| | தாயுமானவர் | 127 |
| | ஆசாரக்கோவை | ,, |
| | கையெழுத்து. | 128 |

## கடவுள் துதி.

'மாரபாக மானவா' என்ற பாடலின் சந்தம்.

கண்ணிகள்.

ஆதி ஜோதி யானவா
வானவா வந்தனம்
ஆனந்த மோனச மான கான ஞானவா
அன்பர்கள் - நம்பிேனும்
ஆதரிக்கவா (ஆ)

பாலர் பணிந்து போற்றினோம்
பண்ணிசைகள் சாற்றினோம்
பகரரிய-கல்விநலம்-பத்திநலம்-அருள்புரிவாய்
பாரையாளும் ஜார்ஜ்மன்னர்
பாரி மேரி மைந்தரும்
பாங்குடனே வாழ்க வாழ்க
பாக்யம் யாவும் தந்தருள் (ஆ)

# நமது இந்திய சக்ரவர்த்தியாகிய

# ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் மீது

## வாழ்த்துப் பாடல்கள்.

'நாடெங்கும் புகழும்' என்ற பாடலின் சந்தம்.

கண்ணிகள்.

ஆட்சி முறையினில் மாட்சி மிகவுற்ற
  ஐந்தாம ஜார்ஜு மன்னன் (ஆ)
அன்புதயைகுணம் ஆன்ற பொறுமை
  அருமை பெருமை நிறைந்த மன்னன்
அஞ்சாமை ஈகை அறிவூக்க மிந்நான்கும்
  ஆர்ந்து நிறைந்து சிறந்த மன்னன் (ஆ)
தானே முயன்று தகைய நற்கல்வியும்
  தக்க கைத்தொழிலும் கற்ற மன்னன்
தன்னுயிர் போலவே தரணியில் மன்னுயிர்
  தம்மையே காக்கும் காருண்ய மன்னன் (ஆ)
இந்தியர் கல்வியில் ஏற்றம் பெறநாளும்
  எண்ணிப் பெருநிதி ஈய்ந்த மன்னன்
எத்திசையும் புகழ் என்றும் நிலவிட
  இவ்வுலகில் நனி வாழியவே (ஆ)
மேன்மைமிகும் இந்திய சக்கரவர்த்தியாய்
  விளங்கிடும் ஆங்கில தேயமன்னன்
மேரி அன்னைராணி மிக்க நலம்பெற்று
  மேலும் மக்களுடன் வாழியவே (ஆ)



நமது சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினியார்.



நமது இளவரசர்.

புதிய

# ஐந்தாம்பாடப்புத்தகம்.

## 1. நமது இளவரசர்.

1. உலகத்தையும், அதிலுள்ள சகல பொருள்களை யும், ஜீவராசிகளையும் படைத்துக் காப்பவர் கடவுள். அக் கடவுளை நாம் கண்கொண்டு காண்பது அரிது. ஆயினும் அவருக்குப் பிரதிநிதியாக நாம் பார்க்கும் தெய்வங்கள் நமது பெற்றோர்களும், அரசனுமேயாவர். நம்மைப்பெற் றோர்கள், நமக்கு வேண்டிய உண்டி, உடை முதலியன அளித்தும், கல்வி பயிற்றுவித்தும், நம்மை நல்வழியில் நடத்தியும், நாம் அடையும் இன்ப துன்பங்களைத் தாம் அனுபவிக்கும் இன்ப துன்பங்களாகப் பாவித்தும், நம் மைக் காப்பாற்றி வருகின்றனர். அரசர்கள் மன்னுயிர் களையெல்லாம் தம்முயிராகவும், அவற்றின் சுக துக்கங் களையெல்லாம் தம்முடையனவாகவும், பாவித்துத் தம்மா லும், கள்வர்களாலும், பகையரசர்களாலும், மற்றெவ்வகை யாலும், தம் நாட்டுக் குடிகளுக்கு யாதொரு தீங்கும் நேரா வண்ணம் காத்து வருகின்றனர். ஆனதுபற்றியே, 'புதல் வர்க்குத் தந்தையும் தாயும் தெய்வம்' என்றும், 'அனை வோர்க்கும் தெய்வம் இலைமுகப் பைம்பூண் இறை' என்றும் ஆன்றோர் கூறியுள்ளார்கள். அத்தகைய அருமையும்பெரு மையும் வாய்ந்த குணங்களையுடைய நமது தாய் தந்தை யரையும், அரசனையும் தெய்வமாகவே வணங்கி, வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும்.

2. பக்கத்திலுள்ள படத்தில் காண்பவர் நமது இள வரசர். இவர் பெயர் எட்வர்ட். இப்பொழுது நம்மை அன் புடன் ஆண்டுவரும் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ்

சக்கரவர்த்தியவர்களின் மூத்த குமாரர். இவர் 1894-ஞ ஜூன் மாதம், 23-ந்தேதி லண்டன் மாநகரில் பிறந்தவர்.

3. இவரது தந்தை, 1910-ஞ இங்கிலாந்தின் அரசரானபோது, இவர் "இளவரசர்" என்ற பட்டஞ் சூட்டப் பெற்றார். இவருடைய தாயாகிய மேரிமஹாராணியாரிடம் தம் குழந்தைப் பருவத்தில், கிண்டர்கார்ட்டன் போதனமுறைப்படி கல்வி பயின்றார்; அன்றியும் படிக்கவும், எழுதவும் பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளைப் பேசவும் கற்றுக்கொண்டார். பின்னர் இவர் 8 வயது முதல் 13 வயது வரை, ஒரு ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார்.

4. இவர் சிறு வயதிலேயே தச்சு வேலையிலும், தோட்ட வேலையிலும், தண்ணீரில் நீந்துவதிலும் நன்கு பயின்றார். பதினைந்தாம் வயதில், படகு ஓட்டவும், யானையை நடத்தவும், குதிரைச் சவாரி செய்யவும், துப்பாக்கியால் சுடவும் பழகிக்கொண்டார். இவருக்குப் பிராணிகளிடத்திற் பிரியம் மிகுதி; மிருக சாலையை அடிக்கடி போய்ப் பார்த்து வருவார். அதனால் இவர் பிராணி சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து அறிந்திருக்கிறார்.

5. 1907-ஞ ஆஸ்போர்னிலுள்ள ராயல் கப்பற்படை காலேஜிலும், 1909-ஞ டார்ட்மௌத் என்றகப்பற்படை காலேஜிலும் பயின்றார். தாம் படித்த விஷயங்களை அனுபவத்தில் அறிவதற்கு, 'இந்துஸ்தான்' என்ற கப்பலில் மத்திய வாலிப உத்தியோகஸ்தராயமர்ந்தார். அதிலிருந்து படிப்படியாய் உயர்ந்து, 'காப்டன்' என்னும் பதவியைப் பெற்று, ஒரு யுத்தக் கப்பலையும் நடத்தினார். ஜர்மனியரோடு நடந்த பெரும் போரில், பிரஞ்சுதேசத்தின் போர்முனையில், இவருமிருந்து யுத்தவீரர்களின் கஷ்டத்தைத் தாமுமனுபவித்துத் தமது உயிரையும் பெரிதா

கப் பாராட்டாமற் போர் புரிந்து, சேனையிலுள்ளவர்களுக்குத் தைரியத்தையும், ஊக்கத்தையும் உண்டுபண்ணினர்.

6. 1921-ஆ நமது தேசத்தைச் சுற்றிப் பார்க்க வந்தார். இவர் இந்தியாவில் விஜயமான பொழுது ஆங்காங்குள்ள பல சிற்றரசர்களும், கௌரவ கனவான்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மிக்க மரியாதையுடன் வரவேற்றார்கள். இவரே நமது தேசத்திற்குப் பிற்காலத்தில், சக்கரவர்த்தியாக வரக்கூடியவர். இவர் மிகச் சாந்தமும், குடிகளிடத்து அன்பும், தயை, பொறுமை, இரக்கம் முதலிய அரிய குணங்களும் ஒருங்கே அமைந்தவர். இவற்றிற்கு உதாரணமாக, இளமைப் பருவத்திலேயே இவர் காட்டிய இரண்டொரு விஷயங்களை இங்கே கூறுவோம்.


7. நமது சக்கரவர்த்தியார் இளவரசராய் இருந்தபோது நமது தேசத்தைக் கண்டு களிக்கப் புறப்பட்டார். அக்காலத்தில் இவரையும், இவருடைய சகோதர சகோதரிகளையும், இவரது அன்னையார், பிரிந்துசெல்ல வருந்தினர். அச்சமயம் இவர், 'அம்மா! ஏன் வருந்துகிறீர்கள்? சகோதரர்களைப் பார்த்துக் கொள்கிறேன். தாங்கள் கவலையின்றிச் சென்று வாருங்கள்' என்று முகமலர்ந்து இன்சொற் கூறியனுப்பினர்; அவர்கள் திரும்பிவரும்வரை, சகோதரர்களை அதிக அன்புடனும், கவனத்துடனும் பார்த்து வந்தார். அவர்கள் திரும்பி வந்ததும், உடன் பிறந்தோரை அவர்களிடம் அழைத்துப் போய், தாம் அவர்களை அன்புடன் நடத்திய விதத்தைக் கூறினர். அவர்கள் அளவில்லா ஆனந்தம் அடைந்தனர்.

8. இவரது குழந்தைப் பருவத்தில், இவரிடம் ஒரு தாதி எப்பொழுதும் சமீபத்தில் இருப்பாள். ஒரு நாள் இவருக்குத் தேகம் சிறிது அசௌகரியமாயிருந்தது. அச்-

சமயம் இவர் தாதியிடம் கோபமாய்ப் பேசினர். அதற்கு அவள், 'அரசே! நான் சொல்வதைக் கவனியுங்கள். ஒரு சமயம், நான் ஒரு ஏழைப் பையனைப் பார்க்க நேரிட்டது. அச்சமயம் அவன் அசௌகரியமாக இருந்தான். அவனுக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை, படுப்பதற்குப்பாயுமில்லை. என்செய்வான் பாவம்; சிலபழையகாகிதங்களைச்சுருட்டித் தலையணையாக வைத்துப் படுத்துக் கொண்டான். தங்கள் அரண்மனையிலோ காண்பதற்கினிய பொருள் அநேகம் உள்ளன. அவற்றையெல்லாம்பார்த்துக்களிப்படையாமல் நீர் ஏன் மனச்சலிப்பு அடையவேண்டும்?' என்றாள்.

9. இம்மொழியைக் கேட்டதும் இளவரசர், 'நமது தேசத்தில் இப்படியும்பிள்ளைகள் இருக்கின்றார்களா?' என வருத்த முற்றுத் தம்மிடத்திலுள்ள சில பொருள்களைத் தாதியிடம்கொடுத்து, அப்பையனுக்குக்கொண்டுபோய்க் கொடு' என்றார். அதற்குத் தாதி, 'அரசே! இவ்வளவு சிறந்த பொருள், அப்பையனுக்கு வேண்டாம்; குறைந்த பொருள்கள், ஏதேனு மிருந்தால் கொடுங்கள்' என்று கூறினள். அவள் கூறியது, நமது இளவரசருக்குத் திருப்தியாக இல்லை. 'தாதி! குறைந்த பொருளைப் பிறருக்குக் கொடுப்பது சரியன்று; நமக்கு அருமையான பொருளைப் பிறருக்குக்கொடுப்பதே கொடையாகும்' என்றார். இளம் பருவத்திலேயே அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந் நான்கும் எஞ்சாமை, வேந்தற்கு இயல்பு' என்னும் முதுமொழிக்கிணங்க இவர் இருந்தனராயின், இவர் அரசு புரியும் காலத்தில், குடிகளிடத்து எவ்வளவு பேரன்பு உடையவராக இருப்பார் என்று யோசியுங்கள்.

10. இத்தகைய அருமைக் குணங்கள் வாய்ந்த இவரும், இவரது தாய் தந்தையர்களும் நீடூழி வாழ இறைவன் திருவருள் புரிவானாக.



## 2. சிங்கம்.

1. சிங்கம் விலங்கினங்களில் மிக்க கம்பீரமும், பராக்கிரமமும் பொருந்தியது. அது புலியைப்போல் ஒதுங்கிப் பதுங்கி இரைதேடாமல், நேர் நின்றுபோர்புரிந்து, மிருகங்களைக் கொன்று தின்னும், நாயைப்போல் எக்காலத்திலும் பசியுடன் அலைந்து திரியாது; தகுதியான இரை கிடைக்கும்வரை பசியைத்தாங்கி இருக்கும். பசி தணிந்தால் மிகச் சாந்தமாய் விடும். அப்பொழுது எந்தச் சிறு பிராணியும் அதை எவ்வளவு தொந்தரவு செய்தாலும் அவற்றை ஒரு பொருட்டாக நினையாது. பசி தீர்ந்தபின் தான் அருந்திய ஆகாரம் மீத மிருந்தால் அதனைப் புலி முதலியனபோல் நாளைக்கு வேண்டுமென்று சேமித்து வைக்காது; வேறு எந்தப் பிராணியும் புசிக்கும்படி விட்டு விடும். கம்பீரம், பராக்கிரமம், துணிவு, பெருந்தன்மை, பொறுமை, காருண்யம் முதலிய அரிய குணங்கள்நாட்டில்

வாழும் அரசர்களுக்கே உரியவை. இத்தகைய குணங்கள் காட்டில் வாழும் இந்தமிருகத்திற்கும் அமைந்திருப்பதால், இதற்கு 'மிருகேந்திரன் எனப்பெயர் வழங்குகிறது.

2. சிங்கம், ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள அடர்ந்த வனங்களிலும், ஆசியாக் கண்டத்திலுள்ள அரேபியா, பாரசீகம், வடமேற்கு இந்தியா முதலிய தேசங்களிலுள்ள பெரிய காடுகளிலும் மிகுதியாய்ச் சஞ்சரிக்கின்றது. நன்ருய் வளர்ந்த சிங்கம், ஐந்தடி உயரமும், எட்டு ஒன்பது அடி நீளமு மிருக்கும். இது மங்கலான மஞ்சள் நிறமுள்ளது. சில சிங்கங்களின் நிறம், அதுவசிக்கும் காட்டிலுள்ள மண்ணின் நிறம் போலவே இருக்கும்; ஆனால் விலாப்புறம் மட்டும் சிறிது வெளுத்திருக்கும்.

3. இது, பூனை இனத்தைச் சேர்ந்தது, இதுவும் மாமிச பக்ஷணியே. சிங்கம் பகல் முழுதும்குகையில் படுத்திருந்து இரவில் இரைதேடப் புறப்படும். இதன் கர்ஜனையைக் கேட்ட மிருகங்கள் திடுக்கிட்டுத் தாங்கள் பதுங்கி இருக்கும் இடத்தை விட்டு நாலாபக்கத்திலும் ஓடும். அச்சமயம் அவற்றைப் பிடித்துப் புசிக்கும். யானையின் மத்தகத்திற் பாய்ந்து, பிடரியைப் பிளந்து, அதன் இரத்தத்தைக் குடிப்பதில் இதற்கு, விருப்பம் அதிகம்; மனிதர் அகப்பட்டாலும் கொன்று தின்று விடும்.

4. சிங்கத்தின் வாயில் முன்பக்கத்தில், கூர்மையான பற்கள் மேல்வாயில் ஆறும், கீழ்வாயில் ஆறும் இருக்கின்றன. இதற்குப் பூனையைப் போலவே முகத்தில் நீண்ட மீசை மயிர்கள் உண்டு. இதன் கண்கள் பகலில் ஒடுங்கி ஒரு பிளவுபோல் காணப்படும்; இரவில் விரிந்து, வட்ட வடிவமாய்ப் பளபளவென்று பிரகாசிக்கும். ஆகையால் இது, இரவில் எதையும் நன்ருய்ப் பார்க்கும். இதன்


நாக்குச் சிறுத்து நீண்டு, அரம்போல் சொறசொறப்பா யிருக்கும். அதனால், சிங்கம், எலும்புகளில் ஒட்டியுள்ள மாமிசத்தையும் சிறிதும் விடாமல், நக்கித் தின்று விடும்.

5. இதன் காது, வட்டமாயும், நுனியில் சிறிது நீண்டு மிருக்கும். இதன் கன்னம் மிகவும் உறுதியானது. ஆண் சிங்கத்திற்குமட்டும் பிடரியில் கறுத்து அடர்ந்த மயிர்கள் உண்டு. இவை நீண்டு பிடரியிலிருந்து முழங்கால் வரை தொங்கும். இவற்றிற்குப் பிடரிமயிர் என்று பெயர். பெண் சிங்கத்திற்குப் பிடரிமயிர் இல்லை.

6. சிங்கத்தின் இடை, சிறுத்தும், மார்பு அகன்று மிருக்கும். இதன் கால்கள் மிகவும் உறுதியானவை. பாதங் களில் கூர்மையாக நீண்டு வளைந்த நகங்கள் உண்டு. பூனை யைப் போலவே இதுவும் அந்நகங்களை நீட்டவும், சுருக்க வும் கூடும். நகங்களின் நீளம், ஏறக்குறைய ஒரு அங்குல மிருக்கும். இதன் உள்ளங்கால்கள், பஞ்சுபோல் மெத் தென்றிருக்கும். ஆகையால், இது நடக்கும்போது, இதன் காலடி ஓசை ஒருவருக்கும் கேட்காது.

7. இதன்வால், சற்றேறக்குறைய நான்கு அடி நீள மிருக்கும். வாலின் நுனியில், அழகாக அடர்ந்த மயிர்க் குஞ்சம் தொங்கும். இது வாலைப் பலமாக வீசி அடித் தால், திடசரீரமுள்ள மனிதனும் இதன் அடியைத் தாங்க முடியாமல் கீழே வீழ்ந்துவிடுவான்.

8. பெண் சிங்கம்; ஆண் சிங்கத்தைக் காட்டிலும் உருவத்தில் சிறிதாயிருக்கும். இது தடவைக்கு ஒன்று முதல் நான்குகுட்டிகள்வரை போடும். மற்ற பிராணிகளைப் பிடிப்பதுபோல் சிங்கத்தை வேட்டையாடிப் பிடிப்பது கஷ்டம். இதைத் தந்திரமாய்ப் பிடித்துச் சிற்சில காட்சிச் சாலைகளில் வைத்து வளர்க்கிறார்கள்.




## 3. காப்பி.

1. ஒருநாள் கோபாலனும், அவன் தந்தையும் ரயில்வண்டியிற் பிரயாணமானார்கள். ரயில்வே ஸ்டேஷனில் கோபாலன் தந்தை, ஒரு அணுக்கொடுத்து ஒரு கோப்பை காப்பி வாங்கிக் கோபாலனுக்குக் கொடுத்தார். காப்பி குடித்த கோபாலன், தகப்பனாரைப் பார்த்து, 'அப்பா! இது மிகவும் சுவையாக இருக்கிறதே! நான் இதுவரையில் குடித்ததே இல்லை. காப்பி எவ்விதம் செய்கிறார்கள்? இது எப்படி உண்டாகிறது?' என்று கேட்டான்.

தந்தை:—கோபாலா! காப்பிக் கஷாயம், காப்பிக் கொட்டையிலிருந்து செய்யப்படுகிறது. அக் கொட்டை, காப்பிச் செடியி லிருந்து எடுக்கப் படுகிறது. காப்பிக் கொட்டை, நமது நாட்டிற்கு அரேபியா தேசத்திலிருந்து கொஞ்ச காலத்திற்கு முன்புதான் கொண்டுவரப்பட்டது.

கோ:—அப்பா! காப்பிச் செடி எவ்வாறிருக்கும்? அது எப்படிப் பயிர் செய்யப்படுகிறது?

தக:—குழந்தாய்! சொல்லுகிறேன் கேள். காப்பிச் செடி, மஞ்சணத்திச் செடி போலிருக்கும். தானுகவே வளரவிட்டால், அது பதினைந்தடி உயரம் வரையில் வளரும். ஆனல் அதை அவ்வாறு வளரவிடாமல் நாலைந்தடி வளர்ந்ததும், அதன் நுனியை வெட்டிக் கொண்டே வருகிறுர்கள். அப்படிச் செய்வதால் பூமியின் சாரம், முழுதும் மரம் வளர்வதற்கு ஆகாமல், நாலா பக்கங்களிலும் கிளைகளாகத் தளிர்த்தும், தாழங்குடை வடிவமாய்ப் படர்ந்தும், பலன் அதிகமாயும் தருகிறது.

3. இனிக் காப்பிச் செடியைப் பயிர் செய்யும் விதத்தையும் சொல்லுகிறேன். இது முக்கியமாக மலைப் பிரதேசங்களிலேயே சாகுபடி செய்யப் படுகிறது. அதிலும் அதிக உயரமில்லாததும், சூரிய வெப்பம் படக் கூடியதும், ஈரப்பசையுள்ளதும், மலையருவிகளின் சமீப முள்ளதும், ஆகிய இடங்களே இதன் சாகுபடிக்கு ஏற்ற நிலமாய் இருக்கின்றன. நமது ராஜதானியில், மேற்கூறிய நிலப்பாங்கு பொருந்திய, நீலகிரி, பழனி மலைத் தொடர் களிலும், சேலம் ஜில்லா, குடகு, திருவாங்கூர் ராஜ்ஜியங் களில் உள்ள மலைகளிலும் காப்பி பயிரிடப்படுகிறது.

4. மே மாத ஆரம்பத்தில் இரண்டொரு மழை பெய்தவுடன் பூமியைப் பண்படுத்தி, 8 அடி நீளம், 4 அடி அகலம், 1 அடி ஆழமுள்ள குழிகள் வெட்டி அவை களில் ஆட்டுப் புழுக்கை, சாம்பல் முதலிய எருக்களை இட்டுப் பாத்திகள் கட்டிப் பின்பு, அப்பாத்திகளில் நன் ருய்ப் பழுத்த காப்பிப்பழத்தின் வித்துக்களை அரையடித் தூரத்திற்கு ஒவ்வொன்ருக வரிசைப்படி ஊன்றி, தினந் தோறும் தண்ணீர்விட்டுக்கொண்டு வருவார்கள்.

5. முப்பது நாட்களுக்குள் முளை கிளம்பும். முளைத்த ஆறு மாதத்திற்குள், பயிர் தளிர் சிம்புகள் விட்டு ஓரடி உயரம் வளரும். பின்னர் அந்த நாற்றுக்களைப் பிடுங்கித் தோட்டங்களில் நன்றாய் உழுது, ஒன்றுக் கொன்று 6 அடி இடைவெளிவிட்டு, ஒன்றரை; அடி அகலம் ஒன்றரை அடி நீளம், ஒன்றரை அடி ஆழமுள்ள குழிகள் தோண்டி, அக்குழிகளில் வரிசையாய் நடுவார்கள்.

6. நட்டபின் இரண்டு மாதத்திற்கு ஒருதடவை செடியைச் சுற்றிலுமுள்ள களைகளைப் பிடுங்கித் தரை கெட்டிப்படா திருக்கும் பொருட்டுப் பூமியைக் கிளறிப் புழுதியாக்கி வருவார்கள். மூன்றும் வருடத்தில் செடியில் இருந்து, ஒரு அடி இடத்தை விட்டு, சுற்றிலும் ஓரடிக்குழி வெட்டி, எலும்புத்தூள், பிண்ணாக்கு முதலிய உரங்களைப் போட்டு மூடிவிடுவார்கள். இவ்வாறு செய்துவந்தால் செடி, அவ்வருடத்தில் பலன் தர ஆரம்பிக்கும். மார்ச்சு மாத முதல் ஜூலை மாதத்திற்குள் அரும்புகள் விடும். காப்பிச் செடியின் புஷ்பங்கள், மல்லிகைப்புஷ்பம்போல் வெண்மை நிறமாயும், ஒருவகை நறுமணமுள்ளனவாயும் இருக்கும்.

7. பூத்த பூக்கள், மூன்று நாட்களில் உதிர்ந்து விடும். பின்னர்ப் பிஞ்சுகள் தோன்றும். அவை முற்றிப் பருத்துக் காய்களாகிப் பழுக்கும். பழுத்த பழங்கள், சிவப்பு நிறம் அல்லது மங்கலான நீல நிறமாய் இருக்கும். பழங்களின் மேல் தோல் சுருங்க ஆரம்பித்தால் பழங்கள் தாமாகவே உதிர்ந்துவிடும். அச்சமயம் தோட்டக்காரர் கள், உதிர்ந்த பழங்களைப் பொறுக்கியும், உதிராத பழங் களைச் செடியில் இருந்து பறித்துஎடுத்தும் சேர்ப்பார்கள்.

8. சேர்ந்த பழங்களை ஒருவகை இயந்திரத்தில் இட் டாவது, காலால் மிதித்தாவது மேல்தோலை நீக்கிக்

கொட்டைகளை வேறாகப் பிரிப்பார்கள். ஒவ்வொரு பழத்திலும், பசுமை நிறமான இரண்டு கொட்டைகளிருக்கும். பிறகு அவைகளை வெய்யிலில் உலர்த்திப் புடைத்துச் சுத்தி செய்து, விற்பனைக்குப் பல ஊர்களுக்கும் அனுப்புவார்கள். பழம் பறித்து நான்கு மாதங்களானதும், பலன் கொடுத்த கிளைகளைத் தறித்துவிடுவார்கள். இதற்குத்தான் "கவாத்து அல்லது சிம்பெடுப்பு' என்று பெயர். காப்பிச் செடிக்கு அப்போதைக்கப்போது உரமிட்டுக் களைபிடுங்கிக் கவனத்துடன் பாதுகாத்து வந்தால், முப்பது நாற்பது வருடம் வரை பலன் தரும்.

கோ:—அப்பா! காப்பிக் கொட்டையைப் பற்றியும் காப்பிச் செடி பயிர் செய்யும் விதத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். ஆனால் நான் இப்போது குடித்த காப்பிக் கஷாயம் எப்படிச் செய்கிறார்கள்?

தங்:—அதையும் சொல்லுகிறேன் கேள். காப்பிக் கொட்டையைப் பொன்னிறமாக வறுத்து, நல்ல வாசனை வந்ததும் எடுத்துப் பொடியாக்கிக் காற்றுப்படாமல் மூடிவைத்துக் கொள்வார்கள். காப்பி வேண்டும்போது ஒரு பாத்திரத்தில் வேண்டிய அளவு தூளைப்போட்டு, நன்றாய்க் கொதித்த வெந்நீரை விட்டுச் சிறிது நேரம்வரை மூடிவைப்பார்கள். அப்பால் வடிகட்டிக் கஷாய வாசனை கெடாதபடி வேண்டிய அளவு காய்ச்சின பாலும், சர்க்கரையும் அதில் கலந்து சாப்பிடுவார்கள்.

கோ:—அப்பா! காப்பி சாப்பிடுவதால் உள்ள குணம் என்ன?

தங்:—காப்பி, சாப்பிட்ட சிறிது நேரம்வரை உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும்; தலைவலியுள்ளோர் சாப்பிட்டால் தலைவலி நீங்கும். அதிகமாகச் சாப்பிட்டால் இரவில் சரியான நித்திரை வராது, பசியும் மந்

தித்துவிடும். தினமும் காப்பி சாப்பிடுவோர் ஒருவேளை சாப்பிடாவிடில் அவர்கள் தேகத்தில் சோர்வு ஏற்படும். குளிர் தேசங்களில் வசிப்பவர்களுக்குக் காப்பி ஏற்றதே யொழிய, உஷ்ண தேசங்களில் வசிப்பவர்களுக்கு ஏற்ற தல்ல. ஆதலால் உஷ்ண தேசங்களில் வசிப்பவர்கள் இதைப் பருகப் பழகிக் கொள்ளாமல் இருப்பதே நலம்.

---

## 4. உண்மை உயர்வைத் தரும். 1

1. 'உண்மை' என்பது நாம் பார்த்தல், கேட்டல், சொல்லல், நினைத்தல் முதலிய விஷயங்களில் உள்ளதை உள்ளவாறே உரைப்பதாம். இதுவே 'வாய்மை, மெய்' எனவும் வழங்குகிறது. உண்மை உரைப்போர்களுக்குச் சில சமயங்களில் துன்பங்கள் ஏற்படலாம். அப்பொழு தும் உண்மையைக் கடைப்பிடித்து நடப்போர் நல்ல புக ழும், பலவித நன்மைகளும் பெற்றுச் சிறந்த பதவியை யும் அடைவார்கள்.

2. உண்மை உரைப்பதையே விரதமாகக் கொண்ட தால், உலகமுழுதும் புகழ்பெற்று விளங்கும் ஒரு மன்ன வன் கதையை இதற்கு உதாரணமாகக் கூறுவோம். முற் காலத்தில், அயோத்தியை அரிச்சந்திரன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் வாய்மையிற் சிறிதும் தவறா தவன்; குடிகளிடத்தில் அன்பு மிகுந்த கொற்றவன்.

3. ஒரு சமயம் தேவேந்திரன், தன் சபையோரை நோக்கிப் 'பூவுலகில் பொய் புகலா மன்னவன் யாரேனும் உளனோ?' என்று கேட்டான். வசிட்டமுனிவர் 'அயோத் தியையாளும் அரிச்சந்திரனே, என்றார். வசிட்டருக்கு விரோதியான விசுவாமித்திரர் சினந்து, 'அரிச்சந்திரன் பெரும் பொய்யன்' என்றார். 'அரிச்சந்திரன் ஒரு பொய் யாவது சொல்வானானால், நானடைந்துள்ள பதவியை

இழந்து புலையனுவேன்' என்ருர் வசிஷ்டர். 'அவன் பொய்யன் என்பதைக் காட்டாவிடில், யான் எனது தவத்தில் பாதியை அவனுக்கே கொடுத்து விடுகிறேன்' என்று விசுவாமித்திரர் சபதம் கூறி, அயோத்திக்கு வந்து சேர்ந்தார்.

4. விசுவாமித்திரர், அரிச்சந்திரனைப்பார்த்துத்தாம் செய்யப்போகும் வேள்விக்குப் பொருளுதவி புரியவேண்டுமெனக் கேட்டார். அவனும் அவ்வாறே உதவி புரிவதாக வாக்களித்தான். முனிவர், அதைப் பின்னர் வந்து பெற்றுக் கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டார்.

5. தம் எண்ணம் நிறைவேற விசுவாமித்திரர், அவனைப் பலவிதத்திலும் துன்புறுத்தத் தொடங்கினுர்; முதன் முதல் பல விலங்கினங்களை ஏவி, அவன் நாட்டிலுள்ள பயிர்களை அழிக்கும்படி செய்தார். அரசன், அவ்விலங்குகளையெல்லாம்வேட்டையாடிக்கொன்றுன். பின்னர் அவர் அழகிய மாதர் இருவரைச் சிருட்டித்தார்; அம்மாதர்களை நோக்கி, நீங்கள் உடனே அரசனிடம் சென்று, உங்கள் ஆடல் பாடல்களால் அவனை மகிழச்செய்யுங்கள். பரிசாக அவனிடமுள்ள பூச்சக்கிரக் குடையைப் பெற்று வாருங்கள், அல்லது அவனை மணஞ்செய்து வாருங்கள்' என்று அனுப்பினுர். அவர்கள் அரசனிடம் சென்று தங்கள் சாமர்த்தியங்கள் எல்லாம் காட்டியும், தமது எண்ணம் பலிக்காமல் துரத்தப்பட்டு வந்தனர்.

6. இஃதறிந்த முனிவர், அரசனிடம் வந்து 'அம்மாதர்களை மணஞ்செய்தே தீரவேண்டும்' என்று வற்புறுத்தினுர். மன்னவன் நடுங்கி, சுவாமி! யான் எனது கண்ணை வேண்டினும் ஈவேன்; யான் காக்கும் மண்ணை வேண்டினும் மனமுவந் தளிப்பேன்; இந்த ஈனமாதரை மணம்புரிய மட்டும் ஒருபொழுதும் இணங்கேன்' என்றுன்

7. 'அப்படியானால் நீ கூறியபடியே உனது நாடு அனைத்தையும் எனக்குத் தத்தம் செய்வாயாக' என்றார் முனிவர். அக்கணமே மன்னவன் தாரைவார்த்து நாட்டை ஈந்தான், ஈதலும் முனிவர், 'முன்னர் வாக்களித்த பொருளை இப்பொழுது கொடு' என்றார். மன்னவன் நாற்பது நாட்களில் தருவதாக ஒப்புக்கொண்டு நாட்டைவிட்டு அகன்றான்.

8. விசுவாமித்திரர், இவனுடன் சென்று தமக்குரிய பொருளை வாங்கிவர, நட்சத்திரையர் என்பவரை அனுப்பினார். அரசன், தன் மனைவி, சந்திரமதியையும், அருமைப் புதல்வன் தேவதாசனையும் அழைத்துக் கொண்டு அவ்வந்தணருடன் காசியை நோக்கிக் கானகத்தின் வழியே ஏகினான். அமைச்சன் சத்தியகீர்த்தியும் பின் தொடர்ந்தான். செல்லும் வழியில் கானகத்தைக் கடப்பதற்கு அடைந்த கஷ்டத்திற்கும், அந்தணர் படுத்திய துன்பத்திற்கும் ஓர் அளவில்லை. கடைசியாக மலை காடுகளைக் கடந்து யாவரும் காசிமா நகரை அடைந்தனர்.

9. நாட்களும் நாற்பது ஆயின. நட்சத்திரையர் 'இன்றோடு தவணை நாள் தீருகிறது. உடனே பொன்னை வைத்துவிட்டு அப்புறம் போ, என் சிரமத்திற்கும் கூலியைக் கொடு' என்றார். அரசன் மனங்கலங்கி எவ்விதத்திலாவது கடன் தீர்க்கக் கருதி, மனைவியையும் மைந்தனையும் அங்கேயுள்ள காலகண்டையரிடம் விற்று முனிவர் கடனைத் தீர்த்தான். பிறகு அரசன், அக்காசியின் மயானகாவலனை, வீரபாகுவினிடம் அடிமையாகிப்பொருள் பெற்று, நட்சத்திரையருக்கு வெகுமதியளித்து அனுப்பினான். அடிமையாகிய அரசன் வீரபாகுவின் கட்டளைப்படி காசிமாநகர்ச் சுடலையைக் காத்து வந்தனன்.

## 5. உண்மை உயர்வைத் தரும் II

1. அந்தணரிடம் அடிமையாகிய சந்திரமதியும் அவள் மைந்தனும், தாம் எக்காலத்திலும் செய்தறியாத குற்றேவல்களை எல்லாம் செய்து, அவரிடம் அளவிலாத துன்பங்களை அனுபவித்தனர். ஒரு நாள் தேவதாசன், காட்டுக்குச் சென்று, தருப்பை கொய்யும்போது ஓர் அரவம் தீண்டி உயிர் துறந்தான். அச்சங்கதி அறிந்த சந்திரமதி, மனங்கலங்கிக் கண்ணீர் சொரிந்து, அந்தணரிடம் கஷ்டத்துடன் விடைபெற்றுக் காட்டை அடைந்தாள். இறந்து கிடந்த குழந்தையைக் கண்டு, வாரி எடுத்து மடியிலிட்டு, மனம் உடைந்து, விம்மி விம்மி அழுது, மைந்தனைத் தோளின்மீது சுமந்து, தகனம் செய்ய மயானம் சென்றாள்.

2. அங்கே காய்ந்து கிடந்த கட்டை முட்டைகளைப் பொறுக்கி அடுக்கி, அதில் தேவதாசனை வைத்துத் தீ மூட்டினாள். மயானங் காக்கும் அரிச்சந்திரன், இருளில் தீயின் வெளிச்சத்தைக் கண்டு, ஓடி வந்து தடுத்து, மயானம் காப்போனுக் குரிய வாய்க்கரிசியும், காற்பணமும், முழத்துண்டும் கொடுக்கும்படி கேட்டான்.

3. அதற்குச் சந்திரமதி 'என் கையில் காசு ஒன்றும் இல்லை, நான் திக்கற்றவள்' என்றுரைத்தாள், 'உன் தாலி ஒன்றே உலகத்தையும் விலைமதிக்கக் கூடியதாய் இருக்கின்றதே? நீ கையில் ஒன்றுமில்லையெனக் கூறுவதென்ன? என்று அரிச்சந்திரன் கேட்டான்.

4. ஆ! கணவனன்றி வேறு எவரும் காணமுடியாத தாலியை இன்று பறையனும் காணலாயிற்றே' எனச் சந்திரமதி பரிதவித்தாள். இதனைக் கேட்ட அரிச்சந்திரன், சற்றுத் திகைத்தான். ஏனெனில் சந்திரமதி பிறக்கும் பொழுதே கணவனன்றி எவரும் காணமுடியாத தெய்வீ

கத் தாலியோடு பிறந்தவள். அவன் அவளை உற்றுப் பார்த்துத் தன் மனைவி என்றறிந்து அலறிவீழ்ந்தான்; பிறகு மைந்தன் இறந்தமைக்கு வருந்தித் தன் எஜமானனுக்குச் சேரவேண்டியகாற்பணமும் முழத்துண்டுமாவது அந்தணரிடம்சென்றுவாங்கிவருமாறுசந்திரமதியை அனுப்பினான்.

5. சந்திரமதியும்காலகண்டையர்வீட்டைநோக்கிப் புறப்பட்டாள். அச்சமயம் விசுவாமித்திரர் சூழ்ச்சியாற் சில கள்வர்கள், காசிராஜன் குழந்தையைக்கொன்று, அவ்வழியிற் போட்டு விட்டுப் போயினர். சந்திரமதி, அதைத் தன் குழந்தையெனக் கருதி எடுத்துக் கதறி அழுதாள்.

7. அதுகண்ட ஊர்க் காவலர், 'இவளே இக்குழந்தையைக் கொன்றவள்' என எண்ணிப் பிடித்து அரசனிடம் சேர்ப்பித்தனர். அரசன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான். அரிச்சந்திரனே அவளை வெட்டும்படி நேர்ந்தது. இதுகண்ட அரிச்சந்திரன், மீண்டும் கலங்கி 'எல்லாம் இறைவன் செயல்' என்றுசந்திரமதியை வாளால் ஓங்கி வெட்டினான். அவ்வாள், மலர் மாலையாய் அவள் கழுத்தில் வந்து வீழ்ந்தது.

7. உடனே தேவர்களும், முனிவர்களும், அவன் முன் தோன்றி, 'அரிச்சந்திரா! நீயே சத்தியவான். வாய்மையில் உனக்கு நிகராவார் மூன்றுலகங்களிலும் இல்லை' எனப்புகழ்ந்து, ஆசி கூறினார்கள். அச்சமயம் விசுவாமித்திரர், தேவசபையில் நடந்த விஷயங்களை எல்லாம் அரிச்சந்திரனிடம் கூறித் தன் தவத்திற் பாதியையும் அவனுக்குக் கொடுத்து, இறந்த குழந்தைகளையும் எழுப்பித் தந்து, நாட்டையும் அவனிடம் ஒப்புவித்தார். அரிச்சந்திரன் இனிதாகச் செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தான். அவனுடைய புகழ் மூன்று உலகங்களிலும் பரவி நின்றது.



## 6. பட்டுப்பூச்சி.

1. நாம் அணிந்துகொள்ளும் ஆடைகள் பலவற்றுள்ளும் சாலச்சிறந்தது பட்டு. இது மிக்க பளபளப்பாயும், மிருதுவாயும் இருக்கும். நமது தேகத்தில் அணிந்துகொள்வதால் ஒருவிதமான, அழகாயும், மனத்திற்கு இன்பத்தைத் தரக்கூடியதாயும் இருக்கும். இது எவ்வாறு கிடைக்கின்றது என்பதைப்பற்றி ஆராய்வோம். பட்டு ஒருவகைப் பூச்சியினால் நூற்கப்படும் நூலேயாகும். இப்பூச்சிக்குப் 'பட்டுப் பூச்சி, எனப் பெயரிட்டிருக்கிறார்கள்.

2. முற்காலத்தில், சீன தேசத்தில் மட்டும் இப் பூச்சியை வளர்த்து, இதன் நூலைப் பட்டாடையாக நெய்து உபயோகப் படுத்தி வந்தனர். சில நூற்றுண்டுகட்கு முன்னர் அங்கே சென்றிருந்த ஐரோப்பியப் பாதிரிமார் ஐரோப்பாவிலுள்ள கான்ஸ்டாண்டிநோபிள் என்ற இடத்திற்கு இப்பூச்சிகளைக் கொண்டு வந்து வளர்த்து விருத்தி செய்தனர். அவ்விடமிருந்து, ஐரோப்பா, ஆசியா கண்டங்களில் உள்ள பல இடங்களிலும் இப்பூச்சிகள் பரவலாயின. இப்பொழுதோ, உலகத்தில் இப்பூச்சிகளை வளர்க்காத தேசங்களில்லை. நமது தேசத்தில் வங்காளம், மைசூர், அஸ்ஸாம், காஷ்மீரம், பர்மா ஆகிய பாகங்களில் நன்ருய் இவற்றை வளர்த்து, நல்லபலனை அடைந்து வருகிருர்கள்.

3. இப்பூச்சியின் உற்பத்தியைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் கவனிப்போம். படத்தில் அநேக விதமான உருவங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அடியில் காணப்படும் உருவம், பட்டுப்பூச்சியானது முசுக்கட்டைச்செடியின் இலையில் முட்டையிட்டிருக்கும் மாதிரியைக் காட்டுகிறது. அம் முட்டைகள் ஆயிரக்கணக்காக இருக்கும். அவைகள் கடுகுபோல் சிறிதாய் இருக்கின்றன. முட்டையிட்டதும் பூச்சியானது இறந்து விடும்.

4. அப்பால் முட்டைகள் எல்லாம் சூரியவெப்பத்தால் பொரியும். ஒவ்வொரு முட்டையிலிருந்தும் ஒவ்வொரு புழு வெளிப்படும். புழுவின் உருவத்தையும் படத்தில் காணலாம். இப்புழு, முட்டையிலிருந்து வெளிப்படும்போது, ஒரு அங்குலத்தின் இருபதில் ஒருபாக நீளமிருக்கும். இப்புழுவின் உடல் நீளமாயும், மிருதுவாயும், சாம்பல் நிறமாயுமிருக்கும். பிறகு எட்டு நாள் வரை முசுக்கட்டை இலையை ஆகாரமாகக்கொண்டு, சீக்கிரத்தில் பருத்து வளரும். உடனே தன் தோலை உரித்துக்கொண்டு இப்புழு,

வெண்ணிறத்தை அடையும். இவ்வாறு வாரம் ஒரு முறையாக, நாலைந்து தடவை தன் தோலை உரித்துக்கொள்ளும். இவ்விதம் தோலை உரிக்கும் சமயத்தில், வெளுப்பாயிருந்த புழு, மஞ்சள் நிறத்தையடைகிறது. பின்பு நன்றாய்வளர்ந்து இவ்விதம் தோல்கள் உரிந்த பின்னர் இப்புழு பசுமை நிறமாய் மாறும்.


5. இச்சமயம் இப்புழுவின் நீளம் இரண்டங்குலம் இருக்கும். இது முசுக்கட்டை இலையை உண்பதை நிறுத்தித் தனக்கு ஒரு கூடு கட்டிக் கொள்வதற்கு, முசுக்கட்டைச் செடியின் கிளையிற் போய்ச்சேரும். சேர்ந்ததும் தன் வாயினால் நூல் நூற்றுத் தன் உடம்பு முழுதும் மறைந்து போகும்படியாக நூலைச் சுற்றிச் சுற்றி ஒரு கூட்டை உண்டாக்கும். அக்கூடு கட்டுவதற்கு மூன்று நான்கு தினங்கள்செல்லும். முழுதும் கட்டினகூடு,முட்டைவடிவமாயிருக்கும். அக்கூட்டினுள்ள பட்டுப்புழு, தன் தோலை மறுபடியும் உரித்துப் பொன்னிறமாய் மாறுகிறது.

6. இது கூடு கட்ட நூற்கும் நூலே பட்டாகும். அப்போது அது மிகப் பளபளப்பாயும்; தொட்டால் ஒட்டிக்கொள்ளும் தன்மையாயும் இருக்கும். இக் கூட்டை அப்படியே எடுத்து நன்றாய்க் கொதிக்கும் வெந்நீரில் போட்டுப் புழுக்களைக் கொன்று, பட்டு நூலை எடுத்துக் கொள்வார்கள். பட்டு நூலில் கலந்துள்ள பசையைச்சவுக்காரம் கலந்த தண்ணீரால் கழுவிப் போக்கி விடுவார்கள். பின்னர்ச் சுற்றப்பட்டுள்ள அந்நூலின் நுனியைக் கண்டு பிடித்துக் கட்டைகளில் கவனமாகச் சுற்றுவார்கள். ஒவ்வொரு கூட்டினின்றும் எடுக்கும் நூல் ஏறக்குறைய 300, 400 கஜ நீளமிருக்கும். இந்நூல் பல தேசங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப் படுகின்றது. இதனைப் புடவைகளாகவும், வஸ்திரங்களாகவும் ஆங்காங்கு நெய்கிறார்கள்.

7. பட்டுப் பூச்சியின் கூட்டை நாம் எடுத்து வெந்நீரில் போட்டு, அவைகளைக் கொல்லா விட்டால் அப்புழு கூட்டியிலிருந்து இறக்கை முளைத்துத் தானாகவே பறந்து வெளியிற் போய்விடும். 'அவ்வாறு பறந்துபோன பிறகு நாம் ஏன் பட்டை எடுக்கக்கூடாது? ஏன் அப்புழுக்களைக் கொல்லவேண்டும்?'' என்று நீங்கள் கேட்கலாம். பூச்சி பறந்தபின் எடுக்கும் பட்டு, நமக்குப் பயன்படாது.ஏனெனில் பூச்சி வெளியே பறந்து செல்லும் பொழுது, நூல் உருண்டை சின்னாபின்னமாக அறுந்துபோம்.

8. இப்புழுவின் உருவ அமைப்பைப் பற்றிக் கவனிப்போம். இது பருத்து உருண்டு சுமார் ஒன்றரை, இரண்டு அங்குல நீளமுள்ளதாய்க் கணுக்கால் இணைக்கப் பட்டதுபோல் இருக்கிறது. தலையின் முன்புறத்தில்வாயும், இரண்டு கண்களும் இருக்கின்றன. தலையின் பின் மூன்று வரைகள் கொஞ்சம் பருத்துத் தோன்றும், அவைகள் அதன் மார்பாகும். அவ்வரைகளுக்கு அடியில் வரை ஒன்றுக்குச் சோடி ஒன்றாக, மூன்று சோடி கால்களுள்ளன. இதற்குப் பின் உள்ள ஐந்துவரைகள் சேர்ந்துள்ள பாகமே உடலாகும். அவ்வரைகளிலும், முற் கூறிய வண்ணம் வரை ஒன்றுக்கு ஒருசோடி கால்கள் அமைந்துள்ளன. இவ்வரைகளுக்குப்பின், வாலுக்குப் பதிலாகத் தலை போன்ற இரண்டொரு வரைகளிருக்கின்றன. அவ்வரைகளுக்குக் கால்கள் கிடையா.

9. இதுஒருஅற்பப்பூச்சியாயினும். இதினின்றுஉண்டாகும் பிரயோஜனத்தைக் கவனிக்குங் கால், கடவுளின் சிருஷ்டித் தொழிலின் பெருமை நன்கு விளங்குகின்றது.



## 7. மீன்.

1. நாம்வசிக்கும் இப்பூமி, மூன்றில் ஒருபாகம் தரையாகவும், மற்ற இரண்டு பாகம் நீராகவுமிருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். இது வரை நீங்கள் படித்த பாடங்களில் அநேகமாய்த் தரையில் வசிக்கும் பிராணிகளைப்பற்றியே படித்திருப்பீர்கள். தரைப்பாகத்தில் எண்ணிறந்த ஜீவராசிகள் வசிப்பது போலவே, நீர்ப்பாகத்திலும் அளவிறந்த ஜீவராசிகள் வசிக்கின்றன. மீனும் நீரில் வாழும் வகையைச் சேர்ந்ததென்பது உங்களுக்குத் தெரியும்.

2. தரையில் வசிக்கும் பிராணிகளுக்கும் நீரில் வசிக்கும் பிராணிகளுக்கும் முக்கியமாய் இருவகை வித்தியாசமுண்டு. தரையில் வசிக்கும் ஜந்துக்கள் காற்றோடு கலந்துள்ள பிராணவாயுவை உட்கொண்டு ஜீவிக்கின்றன. நீரில் வாழும் ஜந்துக்கள், பெரும்பாலும் நீரோடு கலந்துள்ள பிராணவாயுவையே உட்கொண்டு ஜீவிக்கின்றன. தரையில்

வசிக்கும் பிராணிகள் 'மாமிசபக்ஷிணிகள்' என்றும் 'சாகபக்ஷிணிகள்' என்றும் இருவகைப்படும். இவ்வித வித்தியாசம் நீரில் வாழும் ஜந்துக்களுக்கு இல்லை. இவற்றில் சிறிதாயுள்ள ஜந்துக்களைப் பெரிதாயுள்ள ஜந்துக்கள் பிடித்துத் தின்று ஜீவிக்கின்றன.

3. சாதாரணமாக, மீன்களை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். படத்தில் மீன்களின் உருவங்களைக் காட்டியிருக்கிறோம். இவற்றின் தேகத்தின்மீது விசிறி போன்ற சில அவயவங்களைக் காணலாம். அவற்றிற்குச் 'சிறகுகள்' என்று பெயர். இவை முதுகில் இரண்டும், மார்பில் ஒன்றும், அதற்குக் கீழே ஒன்றும், அடிவயிற்றில் ஒன்றும், வாலில் ஒன்றும் ஆக ஆறு சிறகுகளிருப்பதாகப் படத்தில் காணப்படுகின்றன. படத்தில்காணப்படாத மற்றிரண்டு சிறகுகளும் இவற்றிற்கு உண்டு. அவை மார்பிலும் காலிலும் இருப்பன.

4. தண்ணீரில் நீந்துவதற்கு ஏற்றவாறு இதன் சிறகுகள் உதவுகின்றன. இதன் மார்பின் இருபுறங்களிலும் கீழேயுள்ள கால்சிறகுகளும், வயிற்றின் அடியிலுள்ள சிறகும், இது நீந்தும்போது சாய்ந்துவிடாமல் சரீரத்தை நிலைநிறுத்தி, மிதக்கும்படி செய்கின்றன. படகு ஓட்டுபவன், எவ்வாறு படகைச்செலுத்துகிறானோ, அவ்வாறே, மீனும் தன் முதுகின் மீதுள்ள சிறகுகளை வளைத்துத் தன் இஷ்டப்படி தன்னைச் செலுத்துகிறது. படகு ஓட்டுபவன், தன் துடுப்பால் எவ்வாறு தண்ணீரைத் தள்ளிப் படகை ஓட்டுகிறானோ அவ்வாறே, மீன் தன் வால் சிறகினால் தண்ணீரைப் பலமாய் அடித்து அங்குமிங்கும் நீரைத்தள்ளி, நீந்திச்செல்லுகிறது. இவ்வாறு இதன் சிறகுகள் யாவும் துடுப்புகள் போல இதற்கு உபயோகப்படுகின்றன.

5. இதன் தலையின் முன்புறத்திலுள்ள வால் எவ்வளவு அகலமாயிருக்கிறது பாருங்கள். அது ஆகாரத்தை மென்று தின்னுமல் விழுங்குவதற்கு ஏற்றவாறு இவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் வாயினுள் வரிசையாய்ப் பற்களுள்ளன. அப்பற்களெல்லாம தொண்டையை நோக்கிச் சற்று வளைந்து கூர்மையாயிருக்கின்றன. இப்பற்கள் ஆகாரத்தைக் கடித்துத் தின்பதற்கு ஏற்றவாறு இல்லை. உட்கொண்ட ஆகாரத்தை வெளியே விடாமல், தடுத்துக் கொள்வதற்குமட்டும் ஏற்றவையாய் அமைந்திருக்கின்றன.

6. இதன் கண்களைப்பாருங்கள். அவை இமை கொட்டாமலெப்பொழுதும் திறந்தவண்ணமாகவே இருக்கின்றன. இதுவும் மீனிடம் காணப்படும் ஒரு விசேடம். கண்கள் இரண்டும் பெரியவையாகவும், அகன்ற மணிகளுடனுமிருக்கின்றன. மீனுக்குக் காதுகளேனும் காதுக்குப் பதிலாக ஏற்படும் ஐவ்வுகளேனும் வெளியிற் காணப்படா.

7. தலையின் முன்புறத்தில் அமைந்துள்ள இரண்டு துவாரங்களே இதன் நாசித்துவாரங்கள் என்பர். ஆயினும் அத்துவாரங்களின் மூலமாக இவை சுவாசிப்பதில்லை. மீன்களுக்குக் கழுத்தின் இருபுறங்களிலும் செவுள்கள் என்று சொல்லப்பட்ட இரண்டு அவயவங்களுண்டு. அச் செவுள்களில் மயிரிழைபோன்ற அநேக இரத்தக்குழாய்கள் பரவி இருக்கின்றன. மீன், தண்ணீரில் திரியும்போது அடிக்கடி வாயைத் திறப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அச்சமயங்களில் தண்ணீர் அதன் வாய்க்குள் செல்லுகிறது. ஆனால் அத்தண்ணீரை அது குடிப்பதில்லை. வாயினுள்ளே சென்றதண்ணீர்செவுள்களின் மீதுபரவிச்செல்லும்போது மீன் தண்ணீரிலுள்ள பிராணவாயுவை ஏற்றுக்கொண்டு தன்னிடத்துள்ள கரியமில வாயுவைத் தண்ணீரில்விட்டுத் தண்ணீரைச்செவுள்களின்வழியாய் வெளியேவிடுகின்றது.

இதன்மூலமாகவேமீன் சுவாசிக்கும். மீனை நீரினின்றுவெளி யே எடுத்தால், வெளியிலுள்ள காற்றைச் சுவாசிக்கமுடியா மல் இறந்துபோம். கொதித்து ஆறின நீரில்போட்டாலும் அதில்பிராணவாயுஇல்லாமையால் அம்மீன் இறந்துபோம்.

8. இதன் தேகம், நீண்டும், முன்பாகமும் பின்பாக மும் குவிந்தும் நடுப்பாகம் பருத்துமிருக்கின்றது. இது பார்ப்பதற்கு வெள்ளியைப்போல் பளபள வென்று மின் னும். இவ்வாறு மின்னுவதாலேயே இதற்கு மீன் என்று பெயர் வந்தது. இதன் மேல்தோல், வட்டமான தகடு போன்ற செதில்களால் மூடப்பட்டிருக்கிறது. இச்செதில் கள்யாவும் தலையின்பக்கமாகச்சாய்ந்திருக்கின்றன. ஆகை யால் இதன் தேகத்தைத் தலைப்பக்கமிருந்து வால்பக்கமா கக் கீழ்நோக்கித் தடவினல் சொறசொறப்பாகக் காணப் படும். செதில்களின் அடியிலுள்ள தோலிலிருந்துஒருவகை யான எண்ணெய்ப்பசை கசிந்து செதில்களின்மீது பரவு கின்றது. இதனுல் மீனைக் கையிற் பிடிக்கும்போது வழுக் கிக்கொண்டுபோய்விடும். அன்றியும் இப்பசை, தண்ணீரில் வேகமாய் நீந்துவதற்கும் சாதகமாயிருக்கிறது.

9. இதற்கு நீண்ட முதுகெலும்பு உண்டு. அது பல சிறிய எலும்புகளால் சேர்க்கப்பட்டு, இப்புறமும் அப்புற மும் அசையக் கூடியதாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

10. மீன்கள் ஆயிரக்கணக்கான முட்டைகளிடும். இம் முட்டைகள்நீர்மட்டத்திற்குமேல்மிதக்கும். அப்பொழுது சூரிய வெப்பத்தால் பொரியும். அதிலிருந்து குஞ்சுகள் வெளிப்பட்டவுடனேயேநீரில்நீந்தும். நீரில் வாழும் பூச்சி புழுக்கழும், அழகிய நீர்ப்பூண்டுகளும், நீரிலுள்ள அழுக்கு களும் மீனுக்கு ஆகாரமாக உதவுகிறன. பெரியமீன்கள், சிறியமீன்களை நீரில் துரத்திச்சென்று பிடித்துத்தின்னும். அன்றியும் தம்முட்டைகளிற் சிலவற்றைப் புசித்துவிடும்.



## 8. மார்க்கண்டேயர்.

1. முன்னொரு காலத்தில், வடக்கே நர்மதா நதி தீரத்தில், மிருகண்டு என்ற முனிவர் ஒருவர் இருந்தார். ஒரு சமயம், இவரைக் கண்டு பேசுவதற்கு முனிவர்கள் மூவர் இவரது இல்லத்திற்கு வந்து சேர்ந்தனர். அச்சமயம் மிருகண்டு வெளியிற் சென்றிருந்தார்.

2. மிருகண்டு முனிவரது மனைவி மருத்துவதியம்மையார், மிக்க அன்புடன் அம்முனிவர்களுக்கு நல்வரவு கூறி, அவர்களை உபசரித்து, உண்டு செல்லுமாறு வேண்டினர். அம்முனிவர்கள் 'சிவ சிவ! மக்கட்பேறில்லா மனையில் உண்ணுவது மஹாபாவம்' எனக்கூறி அகன்றனர். இம்மொழிகேட்ட மருத்துவதி அம்மையார், மிகவும் துக்கித்துத் தம் கணவர் வந்ததும், நடந்தவற்றை எல்லாம் உரைத்துப் 'புத்திரப்பேறில்லா இப்பெருங்குறை, என்று தீருமோ' எனக் கண்ணீருகுத்து நின்றனர்.

3. பின்னர் இருவரும், மகப்பேறடைய வேண்டிய விரதத்தை அனுட்டித்தனர். சிவபெருமான் முனிவரது கனவிற்றோன்றி. 'அன்பா! நற்குணங்களிலும் நற்செய்கைகளிலும் சிறந்து விளங்கி, மூவுலகமும் கொண்டாடும்படியான, பதினறுவயது வரை ஜீவித்திருக்கும் ஒரு புதல்வன் வேண்டுமா? அன்றேல் தீயகுணங்களோடு தீர்க்க ஆயுளுள்ள நூறு புத்திரர்கள் வேண்டுமா?' என்று வினவினர்.

4 'கருணையங்கடலே! அற்ப ஆயுளுடையவனுயினும், எங்கள் குலத்தை விளக்கவரும் சற்புத்திரன் ஒருவனே போதும்' என்று மிருகண்டு முனிவருரைத்தார். சிவபெருமானும் 'அவ்வாறே தந்தோம்' எனத் திருவருள் புரிந்து மறைந்தார். பின்னர் மருத்துவதி அம்மையார் கருப்பமுற்று, ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்து மகிழ்ந்தார். பெரியோர் அக்குழந்தைக்கு நாராயணன் என நாமஞ்சூட்டினர். மிருகண்டுவின் புத்திரன் ஆனதுபற்றி மார்க்கண்டேயன் எனவும் பெயர் வழங்கலாயிற்று.

5. அப்புதல்வன் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். இளம்பிராயத்திலேயே சகல சாஸ்திரங்களையும் குற்றமறக்கற்று, நற்குணம் நற்செய்கைகளில் சிறந்து விளங்கினன். இவனது அறிவையும், அரிய குணங்களையும் கண்ட, பெற்றோர், அளவிலா ஆனந்தம் அனுபவித்து வந்தனர்.

6. இவ்வாறு பதினைந்து ஆண்டுகள் கழிந்தன. இவனது ஆயுளின், முடிவுநெருங்கிவிட்டதை அறிந்த பெற்றோர் ஒருநாள் பெருங்கலக்கமுற்று வாடியிருந்தனர். இதைக் கண்ட, மைந்தன் "உங்கள் துக்கத்திற்கு யாதுகாரணம்?" என்று வினவினன். மிருகண்டு முனிவர் புதல்வனைப் பார்த்து, 'என் அருமை மகனே! நாங்கள் புத்திரனில்லாமல் வருந்திச் சிவபெருமானைக் குறித்துத் தவம்புரிந்து,

அவரருளினால் உன்னைப் பெற்றோம். அவர் உன்னை எங்களுக்குக் கொடுக்கும்போதே, உனக்கு வயது பதினாறுதான் என்று கூறிவிட்டார். அந்தத் தவணை இன்னும் ஒரு வருடந்தான் இருக்கிறது. ஆகையால் நாங்கள் இவ்வளவு துக்கத்தை அடைந்திருக்கிறோம். உன்னைப்பிரிந்து எவ்வாறிருப்போம்?' என்றார்.

7. மார்க்கண்டேயன், "என் அருமைத் தாய் தந்தையரே! வருந்தாதீர்கள். 'எந்த ஈசன் என்னை உங்களுக்குக் கொடுத்தானோ, அந்த ஈசனே என்னுடைய ஆயுளைப் பெருக்க வல்லவன் அல்லனோ? என் தவ மகிமையால் அந்த ஈசனிடமே ஆயுள் விருத்தியைப் பெற்று அதிவிரைவில் திரும்புகிறேன். கவலையை விடுங்கள். என்னை ஆசீர்வதித்தனுப்புங்கள்'' என்று கூறி, அவர்களிடம் விடைபெற்றுத் தவத்திற்குச் சென்றான்.

8. பின்னர் மார்க்கண்டேயன், சிவஸ்தலங்கடோறும் சென்று, சிவலிங்கப் பெருமானைப் பூசித்து, முடிவில் திருக்கடவூர் என்னும் திருப்பதியை அடைந்து, அங்கே ஒரு சிவலிங்கத்தை அல்லும் பகலும் பூசித்துவந்தான். பதினாறும் ஆண்டு நிறைவுற்றது. உடனே கால தூதர்கள் மார்க்கண்டேயனிடம் வந்தனர். இவனது தவமகிமையால் அவர்கள் சமீபத்தில் நெருங்க முடியவில்லை. இது அறிந்த இயமன், பயங்கரமான உருவத்துடன் தனது வாகனமாகிய எருமைக்கடாவின்மீது ஏறிக்கொண்டு, கையில் பாசக் கயிற்றுடன் மார்க்கண்டேயன் முன்னர்த் தோன்றினான்.

9. மார்க்கண்டேயன் பயந்து, இலிங்க சொரூபியாய் விளங்கும் சிவமூர்த்தியிடம் ஓடி, 'சுவாமி! நீரே கதி என்று, சிவலிங்கத்தை இறுகத்தழுவிப் பற்றிக்கொண்டான். அப்பொழுதும் இயமன் விடாமல், மார்க்கண்டேயனை இழுக்கப் பாசத்தை வீசினான். பாசம் சிவலிங்கத்தை

யும் சேர்த்து இழுத்தது. அக்கணமே இலிங்கத்தினின்று சிவபெருமான் கோபாக்கினியுடன் தோன்றி, இயமனைக் காலாலுதைத்துத் தள்ளிச் சூலாயுதத்தினால் குத்தினார்.

10. மார்க்கண்டேயனைப் பார்த்து, 'பக்த சிரோமணியே! ஊக்கத்தின் உறைவிடமே! நீ என்றும் பதினாறு வயதாகச் சிரஞ்சீவியாய் வாழ்வாயாக; உன் புகழ் மூவுலகத்திலும் ஓங்கிவளர்க' என்று அருளி மறைந்தார். இவ்வாறு வரம்பெற்ற மார்க்கண்டேயன், தன் பெற்றோரிடம் சென்று, அவர்கள் மனங்களிக்க ஒரு மங்கையை மணம் புரிந்து, இல்லத்தில் இருந்து இன்புடன் வாழ்ந்துவந்தான்.

"முயன்றால் முடியாததில்லை"


## 9. சுத்தமான தண்ணீர்.

1. தண்ணீர் என்பது 'குளிர்ந்த நீர்' எனப்பொருள் படும். சுத்தமான தண்ணீர் என்பது அழுக்கு முதலிய அசுத்தங்களில்லாமல், மனிதர்கள் உபயோகப்படுத்தும் போது, யாதொரு தீங்கையும் விளைவிக்காத தன்மையுடைய நீரேயாகும். இதுவே நல்ல தண்ணீர்.

2. தெளிந்த நீரையெல்லாம் நல்ல தண்ணீர் என்று சொல்வது தவறு. தண்ணீருக்கு ஏற்படும் அசுத்தங்கள் இருவகைப்படும். ஒன்று, கண்ணுக்குத் தெரியக்கூடிய இலை, மண், தூசி இவைகள்; மற்றொன்று நமது கண்ணுக்குத் தெரியாமல் தண்ணீரோடு தண்ணீராய்க் கலந்திருப்பவை. இந்நீரில் உப்பு முதலிய சில பதார்த்தங்கள் கரைந்து, நமது கண்ணுக்குப் புலப்படாமலிருக்கலாம். இந்நீரில் கலந்த பதார்த்தம், நமது சரீரத்துக்கு உடனே கெடுதியை உண்டுபண்ணாது. ஆயினும், நாளடைவில் நமது

சரீரத்தில் சிறிது சிறிதாகச் சேர்ந்து, பின்னர் நமக்குப் பல தீமையை விளைவிக்கும்.

3. இவ்வாறு நீரில் மறைந்து கலந்திருக்கும் அசுத்தங்களை நீக்கிவிட்டால்தான், சுத்தத் தண்ணீர் என்ற பெயர் அதற்குப் பொருந்தும். சாதாரணமாக, ஆறு குளம், கிணறு போன்ற நீர் நிலைகளிலுள்ள தண்ணீர் சுத்தமான தண்ணீர் அன்று. இயற்கையிலேயே சுத்தமாக உள்ள தண்ணீர், மழைத்தண்ணீர் ஒன்றுதான். மழைத் தண்ணீரை நாம் எக்காலத்திலும் அதிகமாய் அடையமுடியாது. சுத்தத் தண்ணீர் வேண்டுமென்றால் நாமே சுத்தஞ்செய்துகொள்ள வேண்டும். அதைச் சுத்தஞ் செய்யும் வழிகள் அநேகம் உள்ளன. அவற்றில் இரண்டொருவிதங்களைக் கூறுவோம்.



4. நல்லதண்ணீரை அடைவதற்கு ஆறு குளங்களிலிருந்து கொண்டு வரும் தண்ணீரை வடிகட்டுவது சுலபமான முறை. நீரில்கண்ணுக்குப் புலப்படும்படி கலந்துள்ள அசுத்தங்கள் மேலே நிற்குமாறு சுத்த வஸ்திரம், மை ஒற்றும் தாள் கடற் பஞ்சு இவைகளைக் கருவியாக உபயோகப்படுத்தி வடிகட்டலாம்.

5. இப்படத்தில் காட்டியிருக்கும் தண்ணீர் வடிகட்டும் கருவியை, நீங்கள் பார்த்திருப்பீர்கள். இது செங்குத்தான மூன்று சட்டங்களால் கால்கள் போல நிறுத்தப்பட்டு, அம்மூன்று கால்களுக்கும் இடையில், 'மூன்று பானைகள் வைக்கும் படி மூன்று சட்டங்களால் தட்டுகள் போல இணைக்கப்பட் டிருக்கிறது. ஒவ்

வொரு தட்டிலும் ஒவ்வொரு மண்பானை வைத்திருப்பார்கள். மேலே பானையின் அடியில் சிறு துவாரங்களிருக்கும். அத்துவாரங்களில் குழாயுள்ள வைக்கோல் துரும்புகளைச் சொருகி இருப்பார்கள்.


6. அப்பானையுள் தண்ணீரைச் சுத்தம் செய்வதற்கு அடுப்புக்கரித் துண்டுகளையும், சிறு பருக்கைக் கற்களையும் கலந்து, பாதியளவு போட்டு வைப்பார்கள். பானைநிறையும்படி தண்ணீரை ஊற்றிப் பானையின்வாயைமூடிவிடுவார்கள். அதனுள்ளிருக்கும் தண்ணீரில் கலந்துள்ள அசுத்த பதார்த்தங்களையும், தண்ணீருக்கு நிறத்தையும், வாசனையையும் உண்டாக்குகிற பதார்த்தங்களையும், தண்ணீரில் கரையாது கலந்துள்ள காற்றையும், பானையிலுள்ளகரியும் கல் துண்டுகளும் கவர்ந்து விடுகின்றன.

7. இவ்வாறு கொஞ்சம் சுத்தம் செய்த தண்ணீர், ஒவ்வொரு துளியாக வைக்கோல் துரும்பின் வழியாய், அதற்குக் கீழேயுள்ள இரண்டாவது பானையின் மூடியில் விழும். இப்பானையின் மூடியிலும் மூன்று சிறு துவாரங்களுள்ளன. அத்துவாரங்களின் வழியே மேல் பானையிலிருந்து விழுந்த தண்ணீர், கீழ்ப் பானையில் நிரம்புகிறது. கீழ்ப்பானையின் அடியிலும் மேல் பானையிலிருப்பதுபோல மூன்று துவாரங்களுள்ளன. இத்துவாரங்களிலும் வைக்கோல் சொருகி இருக்கும். இப்பானையில் பாதியளவு சலங்கைமணல் நிரப்பி இருக்கும். இம்மணல், மேல்பானையிலிருந்து விழுந்த தண்ணீரில் எஞ்சியுள்ள அசுத்தங்களையும் எடுத்துவிட்டு, அதற்கு அடியில் வைத்திருக்கும் மூன்றுவது பானையில் அத்தண்ணீரை விட்டுவிடுகிறது.

8. மூன்றுவது பானையின் மூடியிலும் மூன்று துவாரங்களுண்டு. இத்துவாரங்களின் வழியே, இந்தப் பானைக்

குள் இறங்கிய தண்ணீரே நல்ல தண்ணீர். இந்த நீரே பருகுவதற்கு ஏற்றதாகும்.

9. மேற்கூறிய இரண்டுவித சோதனைகளும், தண்ணீரில் கரையாமல் கலந்துள்ள அசுத்தங்களைப் போக்குவதற்கு ஏற்பட்டவை. நீரில் கண்ணுக்குத் தெரியாமல் கலந்துள்ள அசுத்தங்களைப் போக்குவதற்கு மற்றொரு சோதனை பின்வருமாறு:—கீழேயுள்ள படத்தில் காட்டிய மாதிரியான கருவிகள் அப்பரிசோதனைக்கு அவசியமானவை.



10. தண்ணீரை இம்மாதிரியான ஒரு அகன்ற கண்ணாடிப் பாத்திரத்தில் ஊற்றி, அதன் வாயை மூடி, ஒரு திராவக விளக்கின் மீது வைத்துக் காய்ச்ச வேண்டும். அப்பொழுது இதிலுள்ள தண்ணீரானது கொதித்து நீராவியாக மாறும். அந்த நீராவியை வெளியில் விடாமல், ஒரு கண்ணாடிக் குழாயின் வழியாய் வேறு அகன்ற கண்ணாடிப் பாத்திரத்தில் வந்து தங்கும்படி செய்ய வேண்டும்.

11. நீராவிவந்து தங்கிய கண்ணுடிப்பாத்திரத்தைத் தண்ணீரில் அமிழ்த்தியோ, அல்லது அடிக்கடி இக்கண்ணுடிப் பாத்திரத்தின்மீது தண்ணீரை ஊற்றியோ, குளிரும்படி செய்தோமானல், அந் நீராவி, திரும்பவும் தண்ணீராய் மாறும். அப்பொழுது முதலில் தண்ணீர் விட்டுக் காய்ச்சிய கண்ணுடிப் பாத்திரத்தைப் பார்ப்போமானல், அதன் அடியில் ஏராளமான அசுத்தங்கள், தங்கி இருப்பதைக் காணலாம். இவ்வாறு காய்ச்சி அடைந்த தண்ணீரைத் தான், சுத்தமான தண்ணீர் என்று சொல்லலாம். இத்தண்ணீரையே வைத்திய சாலைகளில், பொதுவாக எல்லாவித மருந்துகளிலும் கலப்பதற்கும், புண்களைக் கழுவுவதற்கும் உபயோகிக்கிருர்கள்.

12. கப்பல் பிரயாணம் செய்வோர், கடலில் பல நாள் தங்கிச் செல்ல நேரிடும். கடல்நீரோ முழுதும் உப்பாயிருப்பதால், பருகுவதற்கு உதவாது. ஆதலால், தண்ணீர் வேண்டும்போது, கடல் நீரை எடுத்து மேற்கூறிய விதமாய்க் காய்ச்சிச் சுத்தமான தண்ணீராக்கிப்பருகுவார்கள்.

13. சுத்தமான தண்ணீருக்கு அடியில் கூறிய தன்மைகள் உண்டு. 1. அதற்குச் சுவை இல்லை. 2. வாசனையும் கிடையாது. 3. ஆறு, குளம், கிணறு இவைகளில் கிடக்கும் தண்ணீரின் நிறத்தைப்போல் அல்லாமல், கண்ணுடியின் நிறத்தை ஒத்திருக்கும். 4. வண்டல் படியாது.

## 10. தேனும் தேனீயும்.

1. தேனினும் இனியது வேறெதுவும் இல்லை. தேன் மனிதர்க்கும், பிற பிராணிகளுக்கும் இனிய பானமாகும். மருந்து சாப்பிடுவதற்கும் அனுபானமாகவும், சில நோய்களுக்கு மருந்தாகவும் இது உபயோகப்படும். இதை


நமக்கு அளிப்பன அற்ப ஜந்துக்களாகிய ஒருவகை ஈக்களே. தேனைச் சேகரித்துக் கொடுப்பதால் இவைகளுக்குத் 'தேனீக்கள்' என்று பெயர்.

2. தேனீக்கள் தனித்தனியாக வசியா. பல ஈக்கள் ஒன்று சேர்ந்து கூடு கட்டி வசிக்கும். இவை சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கவாறு, அதிகமாகவோ, குறைவாகவோ முட்டையிடும். அம்முட்டைகளிலிருந்து ஐந்து தினத்தில் புழுக்கள் வெளிவரும். அப்பொழுது அவை சிறிதாகவும், வெண்ணிறமாகவும் இருக்கும். எட்டு நாள்களில் அவற்றிற்குச் சிறகு முளைக்கும்; இருபது தினங்களில் பருத்து, வெளியே செல்லச் சக்தியடைகின்றன. அது வரை, முன் வளர்ந்த தேனீக்களால், தேன் பூந்தாது முதலிய உணவுகள் கொடுத்துக் காப்பாற்றப் பட்டு வருகின்றன. இவற்றுள் 'ராணி ஈ' 'வேலைக்கார ஈ' 'சோம்பேறி ஈ' என மூன்று வகை உண்டு.

3. ராணி ஈ, மற்ற ஈக்களைக் காட்டிலும் நீண்டும், பருத்து மிருக்கும். இது பதின்மூன்று தினங்களில் வளர்ந்து பெரிதாய்விடும். ராணி ஈ, இல்லாத கூட்டில் ஒரு ஈயும் வசியாது. ராணி ஈயின் இறகு, சிறிதாயிருக்கும். ஆனதுபற்றியே இது வெளியிற் பறந்து செல்லாது. இதன் ஆகாரத்திற்காகச் சிறு ஈக்கள், தேனிலிருந்து ஒருவகைப் பாகு செய்து கொடுக்கும். இது மூன்று அல்லது நான்கு வருடம் உயிரோடிருக்கும்.

4. வேலைக்கார ஈக்கள், எக்காலத்திலும் சுறு சுறுப்புடன், பூக்கள் இருக்கும் இடங்களை நாடிச்சென்று, தேன் சேகரிப்பதே தொழிலாக உடையன. ஆனது பற்றியே இவைகளுக்கு வேலைக்கார ஈக்கள்' என்றுபெயர். இவையாவும் அலி ஈக்களே. இவை சோம்பேறி ஈக்களைத் துரத்தும்.

5. ஆண் ஈக்கள், யாவும் சோம்பேறி ஈக்கள். இவைகளுக்குக் குஞ்சு குழந்தைகள் என்ற ஞாபகமே கிடையாது; வெளியில் கொய் என்று, சப்தம் செய்து பறந்து போய்ப் பூக்களின்மேல் உட்கார்ந்து, மதுவை அருந்தித் தம் வயிற்றைமட்டும் நிரப்பிக்கொள்ளும். இவைகளுக்கு உரிய தொழில் எல்லாம் சந்ததிவிருத்தி செய்வதுதான்.




6. தேனீயின் உடம்பு, மூன்று பாகங்களாயுள்ளது. முன் பாகமாகிய தலையில் இரண்டு கண்கள் இருக்கின்றன. 'தும்பிகள்' என்று பெயர்கொண்ட இரண்டு கொம்புகள் தலையின் முன் பக்கத்தில் காணப்படுகின்றன. இத்தேனீக்கள் எதையும் உணர்ந்தறிய அவை உபயோகப்படுகின்றன. இதன் நாக்கு, நீளமாய்க் கயிறுபோல் இருக்கும். அதை இது நீட்டவும் சுருக்கவும் செய்யும்.

7. நடுப்பாகத்தில் பக்கத்திற்கு இரண்டாக இரண்டு ஜோடி இறகுகள் உள்ளன. இறகுகள் மெல்லியனவாய்ப் பளபளவென்றிருக்கும். உடலின் அடிப்பாகத்தில், பை போன்ற உறுப்பு ஒன்று இருக்கிறது. அதற்குள் ஊசி போன்ற இரண்டு முட்கள் இருக்கின்றன. அவற்றிற்குக் 'கொடுக்கு' என்று பெயர். இவைகளுக்கு இடர் செய்யும் பிராணிகளை, இவை கொடுக்கால் கொட்டும்.

8. பக்கத்திற்கு மூன்றாகத் தேனீக்கு, ஆறு கால்கள் இருக்கின்றன. அவற்றின் முனையில் கூரிய சிறிய நகங்கள்

உள்ளன. அவைகளின் உதவியால், தேனீ மரங்களின் மேல் ஏறும். தேனீயின் பின்னங்கால்கள், நீண்டு பைபோலிருக்கும். பூக்களின் மீது உட்காரும்போது இவற்றின் தேகத்திலும் கால்களிலும் ஒட்டிக் கொள்ளும். மகரந்தப் பொடியை, வாயினால்திரட்டி, பின்னங்காலிலுள்ள பைகளில் சேர்த்துக் கொள்ளும்.




9. ஓங்கிவளர்ந்த பெரியவிருக்ஷங்களிலும் மரப் பொந்துகளிலும் உயர்ந்தகட்டிடங்களின் வளைவுகளிலும், மலைப் பிளவுகளிலும் தேனீக்கள், 'படத்தில்காட்டியவாறு' கூடு கட்டி வசிக்கும். கூடு எவ்வாறு கட்டப்படுகிறதென்பதையும், எதனால் கட்டப்படுகிறதென்பதையும் கவனிப்போம்.

10. பல ஈக்கள், ஓரிடத்திற்கூடி ஒன்றின்மேல் ஒன்றாய் மொய்த்துக் கொண்டிருக்கும். அச்சமயம் ஏற்படும் புழுக்கத்தால், இவற்றின் உடம்பிலிருந்து மெழுகு வெளிப்படும். இவ்வாறு வெளிப்படும் மெழுகை, இவை உடனுக்குடனே சேர்த்துத் திரட்டும். திரட்டின மெழுகைத் தன் உமிழ்நீரால் நனைத்துப் பக்குவப்படுத்தி, ஓரிடத்தில் சுவர் எழுப்பி விடுகின்றன. நாலா பக்கங்களிலும் மெழுகுச் சுவர் அடைத்த இடத்திற்கு அறை என்று பெயர். அதனை அடுத்தடுத்து இவை, பல அறைகளைக் கட்டி முடிக்கும். இதுவே 'தேன்கூடு' எனப்படும். அறை ஒவ்வொன்றுக்கும் ஆறுபக்கங்களுண்டு. சிற்சில அறைகளில் பறக்க முடியாத சிறு தேனீக்கள் இருந்து வளர்ந்து வரும். கூட்டின் அடியில் தொங்கும் பெரிய அறையில், ராணி ஈ வசிக்கும்.

11. தேனீக்கள், பூக்களிலுள்ள தேன் ரசத்தைக் குடித்துத் தம் இரப்பைகளில் செலுத்துகின்றன. செலுத்திய ரசம், தேனாக மாறுகிறது. தேன் அகப்படா மாரி காலத்திலும், தாம் கஷ்டப்படாமலிருக்கும் பொருட்டே இவை கோடை காலத்தில் தம் கூடுகளில் உள்ள பல அறைகளில், தேனை நிரப்பி அதை மெழுகினால் மூடிவைக்கின்றன. தேனில் மலைத்தேன், கொம்புத்தேன், புற்றுத் தேன், என மூன்று வகை உண்டு.

12. மனிதர்கள் தேன்கூடு இருக்குமிடங்களுக்கு அடியிற் புகைபோட்டு, ஈக்களைத் துரத்துவார்கள். அப்புகையால் சில உயிர் தப்பி ஓடும். பல இறந்துபோகும். பின்னர்க்கூடுகளை எடுத்து மெழுகுவேறு, தேன் வேறாகப் பிரிப்பார்கள். தேன் மெழுகும் பலவகையில் உபயோகப்படும்.

13. தேனீக்கள், சிறிய ஜந்துக்களாயிருப்பினும் அவைகளிடமிருந்து அறியக்கூடிய நற்குணங்கள் அநேகம் உள்ளன. தேனீக்கள், தம் உற்றாருடன் கூடிவாழ்வதையும், சுறுசுறுப்புடன்தேனைச்சேகரிப்பதையும், சோம்பேறிஈக்களைத் துரத்துவதையும் கவனித்தோமானால், நாமும் ஒற்றுமையாய்வாழவேண்டுமென்பதும், சோம்பேறிகளுடன் சேரக் கூடாதென்பதும், சுறுசுறுப்புடன் எந்த வேலையையும் செய்ய வேண்டுமென்பதும் புலப்படும். கோடைகால முழுதும், தேனைச் சேகரித்து அவற்றை முழுதும் உண்டு விடாமல் சேர்த்து வைத்து வருகின்றன அல்லவா? 'மழை காலத்தில் உணவு அகப்படா விடில், பட்டினி இருக்க நேரிடும்' எனப் பயந்து, இவ்வாறு செய்கின்றன. நாமும் தேடும் பொருள்களை எல்லாம் உடனே செலவு செய்து விடாமல், நாம் தளர்வுறும் காலத்திலும் உதவும்படி, சிறிது சிறிதாயினும் சேர்த்து வைத்துக் கொண்டு வரவேண்டும்.



## 11. பாம்பு.

1. பாம்பைப்பாராதவர் யார்? பாம்பென்றால் பயப்படாதவர் யார்? பாம்பை நேரில் கண்டுவிட்டாலோ உள்ளம் பதறி நடுநடுங்காதவர் யார்? இப்படியும் ஒரு கொடிய ஜந்துஇருக்கிறதல்லவா? இதுபற்றியே'பாம்பைக்கண்டால் படையும் கலங்கும்' என ஒரு முதுமொழி வழங்குகிறது.

2. பாம்பு, சாதாரணமாய் எல்லாத் தேசங்களிலும் காணப்படும். ஆனால் குளிர்ந்த தேசத்திலுள்ள பாம்புகளுக்கு விஷம் இல்லை. பாம்பு மரத்திலும், மலையிலும், தரையிலுள்ள பொந்துகளிலும், செடிகொடிகள் அடர்ந்த புதர்களிலும், புற்றுக்களிலும் வசிக்கும்.

3. பாம்பின் சரீரம், பளபளப் பாயிருக்கும். அதன் மேல் கையையோ காலையோ தெரியாமல் வைத்து விட்டால் வழுவழுவென்று இருக்கும். இதன் தலை, உருண்டு தட்டையாயிருக்கும்; கண்கள், சிறியனவாயும் வட்டமாயுமிருக்கின்றன. அவை எப்பொழுதும் திறந்த வண்ணமாகவே இருக்கும். ஏனெனில் நமக்கிருப்பதுபோல் இதற்குக் கண்களில் இமைகள் இல்லை.

4. பாம்பிற்குச் செவி இருப்பதாக நமது கண்ணுக்குத் தெரியவில்லை. இக்காரணத்தினால் சிலர் இதற்குச் செவியே கிடையாதென்றும், கண்களால் கேட்கிறதென்றும் சொல்லுகிறார்கள். ஆதலால் பாம்பிற்குக் 'கட்செவி' என்றும் ஒரு பெயர் வழங்குகிறது. ஆனால் பிராணிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள், இதற்குச் செவிகள், உள்ளன என்றும், இதன் கண்களுக்குப் பின் செவிகள், ஐவ்வோடு கூடிய இரு துவாரங்களா யிருக்கின்றன என்றும் சொல்லுகிறார்கள். அச்செவிகள் செதில்களால் மூடப்பட்டிருப்பதால் நமக்குத் தெரியவில்லை.

5. பாம்பின் நாக்கு, மெல்லியதாயும் நீளமாயும் சற்றுக் கறுப்பாயு மிருக்கும். நாக்கின் நுனி இருபிளவாக விரிந்திருக்கிறது. பாம்பு, அடிக்கடி நாக்கை வெளியே நீட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம். அது எதற்காக அவ்வாறு நீட்டுகிறதென்று தெரியுமா? நாம் கையினால் வஸ்துக்களைத் தொட்டு உணர்வதுபோல், பாம்பும் நாக்கினால் வஸ்துக்களைத் தொட்டு அறிகிறது.

6. இதன் மேல்வாயிலும், கீழ்வாயிலும் வரிசை வரிசையாகக் கூர்மையானபற்கள்உள்ளன. அவைஉட்பக்கம் வளைந்து இருக்கும்; அப்படி வளைந்திருப்பதால் எதையும் கெட்டியாய்ப் பற்றிக்கொள்வதற்குச் சாதகமாயிருக்கிறது. இதன் பற்கள் உணவை மென்று தின்பதற்கு ஏற்றவையல்ல. ஆகையால் பாம்பு இரையை மெல்லாமலே விழுங்கும். இது தன் வாயளவிலும் சற்றுப் பெரிய அளவுள்ள பிராணிகளையும், பிடித்துத் தின்னும்படி இதன் வாய் அமைந்திருக்கிறது. ரப்பர்போன்ற தோல் இதன் வாய்க்குள் இருப்பதால், பார்வைக்குச் சிறிதாகத் தோன்றக்கூடிய அவ்வாய், இரை தின்னும்போது விரிந்து கொடுக்கும்.

7. சில பாம்புகளுக்கு, மேல் வாயில் நீண்டு வளைந்த இரண்டு பற்கள் உண்டு. அவை ஒவ்வொன்றின் நடுவிலும் அடிமுதல் நுனிவரை குழாய்போன்ற சிறு துவாரமிருக்கிறது. அப் பற்களின் அடியில் விஷப்பைகள் இருக்கின்றன. பாம்பு, ஏதேனும் ஒரு பிராணியைத் தீண்டும்போது அந்தப் பற்களால் கடித்து, விஷப்பைகளை அழுத்தும். அப்பொழுது அப் பைகளிலுள்ள விஷம், பற்களிலுள்ள துவாரங்களின் வழியாய்ச் சென்று கடியுண்ட பிராணியின் இரத்தத்துடன் கலந்து உடலெங்கும் பரவி மரணத்தை விளைவிக்கும். இப்பற்களுக்கு இயற்கை விஷமில்லை என்றாலும் இப்பற்களின் வழியாய் விஷம்வருவதால் இவற்றை 'நச்சுப்பற்கள் அல்லது விஷப்பற்கள்' என்பர்.

8. பாம்பின் தேகம் முழுவதும், மீன் முதலியவற்றிற்கிருப்பது போலவே செதில்களால் மூடப்பட்டிருக்கிறது. இச்செதில்கள் ஒவ்வொன்றும், அந்தந்தப் பக்கத்து விலா எலும்புகளுடன் இசைந்திருக்கின்றன. பாம்பிற்குக் கால்கள் இல்லை. இதன் அடிப்பாகத்துச் செதில்கள் கால்களாக உபயோகப்படுகின்றன.

9. பாம்பு, உஷ்ணமான இடங்களில் முட்டையிடும். இது அடைகாப்பதில்லை. சில நாட்களுக்கப்பால் அம் முட்டைகள் தாமாகவே பொரியும். அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும். எலி, தவளை குழிமுயல் முதலிய ஜந்துக்களே பாம்புகளுக்கு ஆகாரம்.

10. பாம்புகளில் சாரைப்பாம்பு, மலைப்பாம்பு, கட்டுவிரியன், தண்ணீர்ப் பாம்பு எனப் பலவகையுண்டு. தண்ணீர்ப் பாம்பிற்கு விஷம் சிறிதும் கிடையாது.

11. பாம்புகளில் அதிக விஷமுள்ளது நாகப்பாம்பு. இதற்குத் தான் நல்லபாம்பு என்று பெயர். இப்பாம்பு

ஒன்றே படம் எடுத்தாடும். விஷப் பாம்பு கடித்தால் பிழைப்பது அரிதெனினும் நல்லபாம்பின் விஷத்தை மட்டும் மந்திரத்தாலும், மூலிகைகளாலும் நீக்கலாம்.

12. விஷப்பாம்பு தீண்டினால் பின்வருமாறு உடனே சிகிச்சை செய்யவேண்டும். கடிவாய்க்குமேல் உடனே கெட்டியான கயிற்றால் இறுகக் கட்டி இரத்தத்தைப் பிதுக்கி, விஷத்தை வெளியில் எடுக்க முயல வேண்டும். விஷம் கறுப்பாய் இருக்கும். பிதுக்கியும் இரத்தம் சரியாக வெளிவராவிடில் கடிவாயில் கத்தியால் இம்மாதிரி + கீறி இரத்தத்தை நன்கு வடிக்க வேண்டும். இந்த இரத்தத்துடன் உட்சென்ற விஷம் வெளியில் வந்துவிடும்.

13. இதுவுமல்லாமல், இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கக் கூடிய 'பொட்டோஷியம் பெர்மாங்கனேட்' என்ற மருந்தைக் கடிவாயின் மீது வைத்துத் தண்ணீரை மருந்தின்மீது விட்டால், விஷத்தை உட்செல்ல விடாமல் வெளியில் இழுத்து விடும்.

14. பாம்பு மனிதர்களுக்கு எவ்விதத்திலும் துன்பத்தைவிளைவிக்கும். ஆதலால், அக்கொடியஜந்துவினுடன் விளையாடுவதுகூடாது. அதுபற்றியே'பாம்பொடுபழகேல்' 'அரவமாட்டேல்' எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

## 12. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

### கம்பர் I.

1. கற்றோர் என்பவர் கல்வியிலே தேர்ச்சி பெற்றவர். கல்வி என்பது வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம், இலக்கணம், இலக்கியம் முதலியவற்றைக் கற்றல் ஆகும். இத்தகைய கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கியவர்களில் கம்பரும் ஒருவர். 'கல்வியிற் பெரியவர் கம்பர்'

என்ற பழமொழியாலேயே இவ்வுண்மை விளங்கும். அவரது சரிதை வருமாறு:—

2. சோழநாட்டில், மாயூரத்திற் கருகில், திருவழுந்தூர் என்ற ஒரு விஷ்ணு 'ஸ்தலம் உண்டு. அத்தலத்தின் ஆலயத்திலுள்ள ஒரு கம்பத்தினடியில், சற்றேறக் குறைய எண்ணூறு வருஷங்களுக்குமுன், அநாதையாய் ஒரு குழந்தை கிடந்தது. அக்கோயிலில் சங்கு ஊதி வரும் உவச்ச குலத்தான் ஒருவன், இக்குழந்தையைஎடுத்துத் தனக்குப் புத்திரன் இல்லாமையால் மிக்க அன்புடன் வளர்த்து வந்தான். இக்குழந்தையே நமது கம்பர். இவர் கம்பத்தினடியிற் கிடந்து கண்டெடுக்கப் பட்டாராதலின், இவரை வளர்த்தோன் இவருக்குக் 'கம்பர்' எனப் பெயரிட்டான் போலும். இவருக்குக் கல்வி கற்கும்வயதுவந்ததும், இவர் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள பெருஞ்செல்வராகியசடையப்ப வள்ளலின் இல்லத்தில் இருந்து வளர்ந்து வரலானார்.

3. சடையப்பவள்ளல் இவரைத் தம் புத்திருடன் பள்ளிக்கனுப்பிக் கல்வி பயிலும்படி செய்தார். கம்பர் அங்குப் பல நூல்களையும் நன்குகற்றுத்தமதுகல்வித்திறத்தாலும், புத்தி நுட்பத்தாலும் தெய்வ அனுக்கிரகம் பெற்றார். இதனால், இவர் இளம்பிராயத்திலேயே கவிபாடும் வல்லமையு முற்றார். இவரது கல்வியின் பெருமையும், கவி பாடும் திறமையும் நாடெங்கும் பரவின.

4. கம்பருக்கு வயதுவந்ததும்,இவருடையபுகழைக் கேள்வியுற்றசோழராசன், இவரைத்தன்னிடம் வரவழைத்துத் தனது சமஸ்தான வித்வான்களில் ஒருவராக நியமித்தான். அவனுடைய சமஸ்தான வித்வான்களிற் சிறந்து விளங்கியவர்கள், கம்பரும், ஒட்டக் கூத்தருமே யாவர்.

5. ஒரு சமயம், சோழராசன் வடமொழியிலுள்ள இராமாயண காவியத்தைத் தமிழில் பாடல்களாகச் செய்

தருளுமாறு இவ்விருவரையும் வேண்டிக் கொண்டான். அவ்வாறே இரு புலவர்களும் செய்து முடித்தனர். கம்பர் பாடிய கவிக்குத் தம் கவி எவ்வளவோ தாழ்ந்திருந்ததைக் கண்ட ஒட்டக்கூத்தர், தாம் பாடி எழுதி வைத்திருந்த ஏடுகளைக் கிழித்து எறிந்து விட்டார்.

6. கம்பர் தமது இராமாயணத்தைப் பற்றித் தமிழ் வித்வான்களிடத்தில் நற்சாட்சிப் பத்திரம் பெறக்கருதி, சிதம்பரத்திலுள்ள தில்லை மூவாயிரவரிடம்சென்றார். அவர்கள் மூவாயிரம் பேரும் ஒருங்கு சேர்ந்து, இவருடைய கவியைக்கேட்டு நற்சாட்சிப் பத்திரம் கொடுப்பதாக வாக்களித்தார்கள். கம்பரும் பல நாட்கள் அங்குக் காத்திருந்தும், அவர்கள் ஒருங்கு கூடும் சமயம் வாய்க்கவில்லை. ஆதலால் இவர்சஞ்சலமுற்று, கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதிக்குச் சென்று குறையிரந்து வருவாராயினர்.

7. ஒருநாள், பெருமாள் கம்பரது கனவிற்றோன்றி, "நாளைத் தில்லை மூவாயிரவரில் ஒருவர் வீட்டில், ஒரு குழந்தை அரவு தீண்டி இறக்கும். அங்கே மூவாயிரவரும் ஒருங்கு கூடுவார்கள். அச்சமயம் நீ பாடிய இராமாயணத்தின் நாகபாசப் படலத்திலுள்ள பாடலைப் படிப்பாயானால், அக்குழந்தை மீண்டும் உயிர்த்தெழும். அப்பொழுது நீ நற்சாட்சிப் பத்திரம் பெற்றுச் செல்லல் எளிதாகும்" என்று சொல்லி மறைந்தார்.

8. அவ்வாறே, மறுநாட் காலையில் ஒரு அந்தணர் வீட்டில் குழந்தை ஒன்று அரவு கடித்திறந்தது. மூவாயிரவரும் ஒன்று கூடினர். அங்கே கம்பர் சென்று, ஏதும் தெரியாதவர் போல் 'ஐயன்மீர்! இன்று தான் தாங்கள் ஒருங்கு கூடியதைக் கண்டேன். எனது கவியைக்கேட்டுக் கையொப்பம் அருள வேண்டும்' என்று வேண்டினர்.

அவர்கள் தாமிருந்த பரிதாபநிலைமையை அறிவித்தார்கள். அதற்குக் கம்பர், 'சுவாமிகாள்! இறந்த குழந்தை மீண்டும் ஈஸ்வரகிருபையால்எழும். வருந்தவேண்டாம்' என்று தேற்றினார். இதைக்கேட்ட அந்தணர், ஆச்சரியமுற்று, 'ஐயா! தாம் கூறியவாறு, குழந்தை மீண்டும் உயிர்பெற்று எழுந்திருக்குமானால், நாங்கள் அக்கணமே உமது கவியைக் கேட்டுக் கையொப்பம் தருவோம்' என உறுதிகூறினர்.

9. உடனே கம்பர், இராமாயணஏட்டைஅவிழ்த்து, நாகபாசப் படலத்திலுள்ள சில பாடல்களைப் படித்தார். இறந்த குழந்தை உயிர்பெற்றெழுந்தது. கூடி இருந்தோர் அனைவரும் மிக்க ஆச்சரியமுற்றனர்; பின்னர் இவரது பாடல்களைஎல்லாம்கேட்டு, மிக்கஆனந்தமடைந்து, 'இவரது தெய்வத் தன்மையையும் கவித்திறமையையும் அறியாது, இவ்வளவு காலம் தாழ்த்து விட்டோமே' என்று வருந்தித் தம்மை மன்னிக்குமாறு பன்முறைவேண்டி, நற்சாட்சிப் பத்திரம் அளித்து அனுப்பினர்.

10. பின்னர், பிற அரும்பெரும் புலவர்களிடமும் கம்பர் சென்று நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றார்; முடிவில் ஸ்ரீரங்கம் அடைந்து, அங்கே ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீமந் நாதமுனிகள் தலைமைவீற்றிருக்கக்கூடியசபையில், இராமாயண காவியத்தை அரங்கேற்றினார். இவரது புலமைத்திறத்தையும், கவியின் சொல் வன்மையையும் பொருளமைதியையும் அறிந்த அம்முனிகள் 'இக்காவியமே இகபரசாதனங்களுக்குஇன்றியமையாதது' எனப்புகழ்ந்து இவருக்கு ஏராளமான சன்மானமளித்து, 'கவிச் சக்கரவர்த்தி' எனப் பட்டமும் கொடுத்து அனுப்பினர். அது முதல் கம்பர் பாடிய இராமாயண காவியம் தமிழ்நாடெங்கும் பரவிற்று. கல்வித் திறமுடைய புலவர் பலரும் கவியின் சுவையை நன்கு உணர்ந்து களிப்புறுவாராயினர்.

## 13. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

### கம்பர் II.

1. ஒருநாள் சோழராசன் தனது சபாமண்டபத்தில் வேற்றரசன் ஒருவனோடு பேசிக்கொண்டிருந்தான். அச்சமயம் கம்பர், தாம்பெற்ற விருதுகள் யாவும் அணிந்து இராச சபைக்குச் சென்றார். கம்பர்வருகையைக் கண்ட சோழன் தன் பெருமை விளங்கப் 'புலவீர்! நீர் அணிந்துள்ள விருதுகள் யாவும் யார் அளித்தவை?' என்று வினவினான்.

2. அரசன் கருத்தை அறிந்த கம்பர், 'அரசே! அவை எமது தாயாகிய கலைமகள் கடாட்சத்தால் பெற்றவை' எனக் கூறினர். அரசன் அப்பொழுது தன்னை மதியாது கூறியதற்காகக் கம்பர்மீது அடங்காச் சினங்கொண்டான். சிலநாட்கள் சென்றதும் அவன் 'புலவீர்! நீர் அடைந்துள்ள விருது முதலிய பொருள்கள் யாவும் என்னிடம் பெற்றவை அல்லவா? அன்று யான்கேட்டபோது 'கலைமகள் கடாட்சத்தால் பெற்றேன்' என்று கழறினீரே? உமக்கு நன்றி இல்லையே? உமது கர்வ மிகுதியை என்னென்பேன்! இப்பொழுதே என்னிடம் பெற்ற எல்லாப் பொருள்களையும் ஒப்பித்துவிட்டு, எனது நாட்டை விட்டகன்று, நீர் கூறிய அக்கலை மகள் கடாட்சத்தாலேயே அவற்றைப் பெற்றுக்கொள்ளும்' என்றான்.

3. "அரசே! 'மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில், மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் மன்னனுக்குத் தன்தேசமல்லாற் சிறப்பில்லை, கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதைஉணர்ந்திருந்தும்இவ்வாறுரைத்தீர். நீரோ புவியரசன், நாமோ கவியரசர். உம்மை உமது நாட்டுக் குடிகள் மட்டும் போற்றுவர். எம்மையோ எந்நாட்டரசரும்போற்றுவர்எம்மைப்போன்றபுலவர்கள்

உம்மைப்போன்ற அரசர்கள் சபையிலிருப்பதால் அவ்வரசர்களுக்கே பெருமை. நாம் போய்விட்டால் நமது பெருமையும்போய்விடும். எம் திறமையைப் பாரும்; உம்மிலும் பெரிய ஓர் அரசன் எமக்குத் தொண்டு செய்வதை நீர் விரைவிற் காண்பீர்; பெற்றுக்கொள்ளும் உமது விருதுகளை'' எனக்கூறி, அவற்றை அரசனிடம்கொடுத்துவிட்டுக் கம்பர் பாண்டிநாடு நோக்கிப் புறப்பட்டார்.

4. பாண்டி நாடடைந்ததும் கம்பர், ஒரு பிரபுவினிடம் சென்று, தாம் கம்பருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கும் வேலையில் இருந்ததாகவும், தமக்கு ஏதாவது வேலைதர வேண்டுமென்றும் வேண்டினர். அப்பிரபு, அவரைப் பாண்டியராசனிடம் அழைத்துப்போய்த் தாம்பூலம் மடித்துக்கொடுக்கும் வேலையில் அமர்த்தினர்.

5. பாண்டியராச சபையில், வித்வான்கள் ஒரு சமயம் கம்பராமாயணம் படித்து, உரைசொல்லி வருவதை அங்கிருந்த கம்பர் கேட்டுச் சிற்சில சமயங்களில் முகத்தைச் சுளித்துத் தமக்குள்ள அருவருப்பைக் காட்டினர். இதைக் கவனித்த அரசனும் சபையோரும் வியப்புற்றுக் கம்பரை அவரது முகச்சுளிப்பிற்குக் காரணம் கேட்டனர்.

6. கம்பர், 'ஆங்குள்ள வித்வான்கள் கூறிய உரைகள் சரியன்று' எனக் காரணம், கூறி அவர்கள் குற்றமாய்ப் பொருள் கூறிய கவிகளுக் கெல்லாம் சரியான பொருள் கூறினர். அரசனும், ஆச்சரியமுற்று, அவரது வரலாற்றை அவர் வாய் மூலமாகவே உணர்ந்து, அவரை மிகப்புகழ்ந்து மரியாதைசெய்தனர். பின்னர் அரசன், கம்பரைப்பார்த்து 'என் அறியாமையால் உம்மைத் தாம்பூலம் கொடுக்கும் வேலையாளாக வைத்திருந்தேன். இப்பிழை தீர நான் உமக்கு அத்தொழிலைச் செய்தே தீரவேண்டும்' என்றான்.

7. கம்பர், அவனது அன்பை வியந்து 'அரசே! என்பால் உமக்குள்ள அன்பால் இவ்வாறு கூறினீர்! இது பொருத்தமன்று. ஆயினும், உமது உள்ளன்போடு கூடிய விருப்பு, ஒரு காலத்தில் ஒரு காரணம் பற்றி நிறைவேறவும் கூடும். அச்சமயம் வரும்பொழுது தெரிவிக்கிறேன்' என்று கூறி அரசனைத் திருப்திசெய்தார். பின்னர்த் தினந்தோறும் அரசன் களிப்புறும் வண்ணம், இராமாயணப் பிரசங்கம் செய்து, அங்கே இனிது வாழ்ந்து வந்தார்.

8. இஃதிவ்வாறாகச் சோழராசன், கம்பரின் பிரிவாற்றாமையால் வருந்தி, அவர் பாண்டியநாட்டிலிருப்பதறிந்து, அவரை அழைத்து வரும்படி ஏவலாளர்களை அனுப்பினான். பழமை மறவாத கம்பர், சோழன் தமக்குச் செய்த அவமரியாதையைப் பாராட்டாமல், பாண்டியனிடம் விடை பெற்று, அவனளித்த விருதுகளுடனும் பரிவாரங்களுடனும் சோழதேசம் வந்து சேர்ந்தார். சோழன் அவரைக் கண்டதும் தம் பிழைகளை மன்னிக்குமாறு வேண்டினான். அதுமுதல் இருவரும் மிக்க நண்புடன் வாழ்ந்துவரலாயினர்.

9. சிலநாட் சென்ற பின்னர், ஒரு சமயம் சோழன், வேடிக்கையாய்ப் 'புலவீர்! உமது சபதம் யாதாயிற்று? உமக்குத் தொண்டு செய்யவரும் பேரரசன் எங்கே?' எனப் பரிகசித்துக் கேட்டான். கம்பர், சிறிதும் பின் வாங்காமல் 'அரசே! 'இன்றைக்கு' எட்டாம் நாள் காண்பிக்கிறோம்' என்று கூறி. உடனே பாண்டியனுக்கு நிருபம் விடுத்தார்.

10. குறித்த நாளில் இராச:சபையில் எல்லோரும் வீற்றிருந்த பொழுது, கம்பருக்கருகில் வேற்றாள் ஒருவன் அவருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்ததையும், மடித்துக் கொடுத்த அதைக் கம்பர் வாயிற் போட்டுக் கொள்ளாது, கை விரல்களில் இடுக்கிக் கொண்டதையும், சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் அவனைச் சாடை காட்டி அவ்

விடம் விட்டு அகலும்படி செய்ததையும், அரசன் முதலியோர் கவனித்தனர். அவன் சென்றதும் அரசன் கம்பரைப் பார்த்து, 'உமக்கு வெற்றிலே மடித்துக் கொடுத்தது யார்? நீர் ஏன் அதை உண்ணுது கையில் வைத்துக்கொண்டிருக்கிறீர்? ஏதோ சைகை செய்து, அவனை உடனே அனுப்பிவிடக் காரணம் என்ன?' என்று வினவினுன்.

11. கம்பர் புன் சிரிப்புடன் சோழனை நோக்கி, "அரசே! வந்தவர் பாண்டிமா மன்னர். அற்பர்களுக்கு வாழ்வுவந்தாலன்றோ அர்த்தராத்திரியில்குடைபிடிப்பார்? உம்மிலும் பெருமை தங்கிய ஓர் அரசன் எம்மிடத்து அன்பு மிகுதியால் தொண்டுபுரிய உடன்பட்ட சமயத்தில், யாம் எமது நிலைமையைமறந்துசெருக்குறல்அழகாகுமோ? வந்தவரோ உமது மாற்றரசரும் வேற்றரசருமாவார். நிராயுதபாணியாய் வந்தவர். இவற்றை உணர்ந்து உம்மால் ஏதேனும் தீங்கு நேரிடக்கூடும் என்று அஞ்சியே அவரை அனுப்பிவிட்டேன்" என்று மறுமொழி உரைத்தார்.

12. அரசன்வியப்பும்விசனமும்வெட்கமுமடைந்து, "கல்வியின் பெருமையே பெருமை, கொற்றவரினும் கற்றவரே சிறப்புடையவர். அவர்களுக்கே எக்காரியமும் கைகூடும்" என்று உணர்ந்து, கம்பரிடத்தில் மிக்க அன்புடையவனுகி முன்னிலும் பன்மடங்கு மரியாதைகாட்டிவரலானுன்.

---

## 14. பருந்து.

1. தெருக்களில் செத்துக் கிடக்கும் எலி, மூஞ்சூறு முதலியவைகளைத் தூக்கிச் செல்வதற்கு அநேகம் பறவைகள் வட்டமிட்டுப் பறந்துவருவதைப் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு வரும் பறவைகளில் மிகப் பருமனும், அதிக வலிமையுமுள்ளவை பருந்தும், கருடனுமாகும்.

2. இவ்விரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. உயரத்தில் சற்றேறக்குறைய ஒரு அடி இருக்கும். நீளத்தில் இரண்டு அடி இருக்கும். பருந்து; கறுப்பும், சிவப்பும், கலந்த நிறமுள்ளதா யிருக்கும். கருடன் உடல் முழுதும் சிவப்பு நிறமாயும், கழுத்து வெண்மையாயு மிருக்கும.



3. பருந்துகள், அநேகமாய் எல்லாத்தேசங்களிலும் காணப்படும். இவை மரக்கிளைகளின் இடைகளிலும், பாறையின் பிளவுகளிலும் கூடுகட்டி வசிக்கும். இவற்றின் கூடுகள் குச்சிகளினலே கட்டப்பட்டாலும், உட்புறம் பெரும்பாலும் கந்தைகளினலும் துரும்புகளினலும் செய்யப்பட்டு, மெத்தென்று இருக்கும்.

4. ஐரோப்பாகண்டத்தில், அநேகஇடங்களில் செந்நிறமான பருந்துகளே அதிகமாய்க் காணப்படும். ஆபிரிகா கண்டத்திலுள்ள பருந்துகள், கருநிறமாயிருக்கும். இதன் அலகுகள், மிக்க கறுப்பாயிருக்கும். அமெரிக்கா தேசத்திலுள்ள பருந்துகளின், இறக்கை மங்கலான அநேக வர்ணங் கலந்ததாயும் வால், நீண்டு பிளவுபட்டதாயும் இருக்கும். இதன் நிறம், தலையிலிருந்து கழுத்து வரை சுத்த

வெள்ளையாயிருக்கும். இதன் அலகு, சற்று நீல நிறமாகவும், செம்புறைக்கல்லின் நிறமாகவு மிருக்கும். பாதங்கள் நீலங்கலந்த வெளுப்பா யிருக்கும். ஏப்பிரல் அல்லது மே மாதங்களில் பெண் பருந்துகள், மூன்று நான்கு முட்டைகள் இடும். நமது தேசத்தில் காணப்படும் பருந்துகளோ; சற்று வெளுத்தகறுப்புநிறமுடையன. இவை ஜனவரிமாத முதல் ஏப்பிரல் மாதத்திற்குள் ஒரே தடவை, இரண்டு முட்டைகள் மாத்திர மிடுகின்றன.

5. பருந்துகள், மாமிசம் தின்னும் பறவைகள். இவற்றின் அலகுகளின் மேல்பாகம் கூராக நீண்டு வளைந்திருக்கிறது. கண்களின் கருவிழிகள் பெரிதாயிருப்பதால், அதிக தூரத்திலுள்ள சிறிய பொருள்களையும், இவை நுட்பமாய்க் கண்டு பிடிக்கும். இவற்றின் கழுத்து, பருத்து உறுதியாயும் இருக்கும். அவ்வாறிருப்பதால் இவை, தம் அலகுகளால் உணவுகளைக் கௌவிக்கொண்டு, சலிக்காமற் பறந்து செல்லும். இறக்கைகள் நீண்டும், வால் நுனி பிளவுபட்டும் இருக்கின்றன. கால்களின் முன்புறம் மூன்று விரல்களும், பின்புறம் ஒரு விரலுமாக; நான்கு விரல்கள் அமைந்துள்ளன. நகங்கள், புலியின் நகங்களைப்போல நீண்டும், மிகக் கூர்மையாயும் வளைந்து மிருக்கும்.

6. பருந்துகள், ஆகாயத்தில் உயரமாய்ப் பறக்கும். கருடனோ, பருந்தைக் காட்டிலும் அதிக உயரம் பறக்கும். இவை ஆகாயத்தை நோக்கிச் செல்லும்பொழுதுசெங்குத்தாய்ச் செல்லாமல் வட்டமிட்டே பறந்து செல்லும். பறக்கும்பொழுது இவை, பூமியை நாலாதிசைகளிலும் நோக்கி, இரையைத் தேடிச்செல்லும்; இரை தேடுவதில் காக்கையைப் போலவே தைரியமும், கூர்மையான புத்தியுமுள்ளவை; இரையைக்கண்டுவிட்டால், சரேலென்று கீழே பாய்ந்துவந்து, அதனைக் கால்களாற் பற்றிக்கொண்டு உய

ரப் பறந்துவிடும். இவை உண்ணும் இரைகளில், ஏதேனும் ஒன்றை நாம் எறிந்தோமானால், அது கீழே விழுமுன் பாய்ந்து கவ்விச் செல்லும். சிறுபிள்ளைகள் கையில் தின் பண்டங்கள் வைத்திருப்பதைக் கண்டால், வெடுக்கென்று பறித்துக்கொண்டு போய்விடும். நாய்கள், ஆகாரம் கவ்விச் செல்வதைக்கண்டால், அவற்றுடன் சண்டையிட்டு, அவை வாயிற் கவ்வியுள்ள ஆகாரத்தைப் பறித்துக் கொண்டு போய்விடும். வீட்டு வாசல்களில் கோழிகளைப் பின்பற்றித்திரியும் குஞ்சுகளைக் கண்டுவிட்டால், உடனே பாய்ந்து வந்து பற்றிக்கொண்டு பறந்துவிடும். செம்படவர் மீன் பிடிக்கு மிடங்களில் ஆகாயத்தில் வட்டமிடும் கருடன்களையும் பருந்துகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். செம்படவர் சற்று அஜாக்கிரதையாக இருந்தால், இவை அவர்கள் பிடிக்கும் மீன்களைக் கவர்ந்து சென்று விடும்,

7. இவைகள் ஆறுகளில் மிதந்து வரும் ஆகாரங்களைக் கண்டுவிட்டால், அவற்றைச் செந்தூக்காய்த் தூக்கிச் சென்றுவிடும்; குடியானவன் நிலத்தை உழும்பொழுது, நண்டு நத்தைகளைப் பிடிப்பதற்கு அவ்விடத்திலும் வட்டமிட்டுத் திரியும். அன்றியும், உயிருள்ள பூச்சி புழுக்களையும், பறவைகளையும், தன்னால் பிடிக்கக்கூடிய நாற்கால் பிராணிகளையும் இவை பிடித்துத் தின்றுவிடும். இறந்துபோன பூச்சி, புழுக்களையும், எலி, சுண்டெலி முதலிய பல பிராணிகளையும் இவை தின்று, காற்றைச் சுத்தப்படுத்துகின்றன. ஆதலால் காக்கையைப் போலவே இவற்றையும் 'ஆகாயத்தோட்டி' எனச் சொல்லலாம். சிலர் வேட்டையாடுவதற்கு இராஜாளியைப் பழக்குவது போல் பருந்துகளையும் பழக்குகிறார்கள்.

4. கருடனை இந்துக்கள் மிகப் பக்தியுடன் கொண்டாடுகிறார்கள். மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணு பக

வானுக்கு இது வாகனமெனப் பாராட்டப் படுகிறது. சூரியன் ஒளிக்குக் கருடன் சிறிதும் பயப்படாது. பூமியிலிருந்து 8000 அடி உயரம்வரை ஆகாயத்தில் பறந்துசெல்வது இதன் திறமையை விளக்கும். இது எவ்வளவு ஆச்சரியம்! இப்பறவையின் அழகைக் கவனியுங்கள். இதன் கம்பீரத் தோற்றமும் குளிர்ந்த செந்நிறமும், கழுத்தின் வெண்ணிறமும், கருடனுக்கு அழகைஉண்டாக்குகின்றன.

---

## 15. விதையும், விதை முளைத்தலும்.

1. பிள்ளைகளே! தாவரத்தின் ஒவ்வொரு பாகங்களைப்பற்றியும், நான்காம்பாடப்புத்தகத்தில் வாசித்திருக்கிறீர்கள். தாவரத்தின் விருத்திக்கு அதன் பாகங்களில் ஒன்ருயுள்ள விதைகளே ஆதாரமாயிருக்கின்றன. அவ்விதைகள், நன்ருய் முற்றினபழத்திலிருந்து கிடைக்கின்றன.

2. விதைகள், 'ஒற்றைப் பருப்பு விதை, என்றும், 'இரட்டைப் பருப்பு விதை' என்றும், இரு வகைப்படும். நெல், சோளம், கம்பு, கோதுமை, தென்னை இவற்றின் விதைபோன்ற விதைகளே ஒற்றைப்பருப்புள்ள விதைகள். அவரை மொச்சை, ஆமணக்கு, பட்டாணி, மா, புளி இவற்றின் விதைபோன்ற விதைகளே இரட்டைப் பருப்புள்ள விதைகள். இவ்விதைகள் ஒவ்வொன்றிலும் தாவரங்களின் பாகங்களாகிய வேர், தண்டு, இலை இவைகளின் தனித்தனியான சத்துக்கள் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாதவாறு அமைந்துள்ளன.

3. விதை முளைத்தலென்ருல், விதைகளில் மறைந்திருக்கும் பாகங்களான வேர், தண்டு இலைகள் ஆகிய இவை வெளிக்கிளம்பி, நமது கண்ணுக்குப் புலப்படுவது. முளைக்கக்கூடிய விதைகள் கனமுள்ளனவாகவும், பருத்தும், நன்ருய் முதிர்ந்தும், மிகப் பழமையில்லாமலும்

பக்குவமாய் உலர்ந்துமிருக்கவேண்டும். அவ்வாறில்லாவிட்டால், முளைகள் நன்றாகக் கிளம்பா. கிளம்பினாலும் அதிலிருந்து வளரும் செடியாவது, மரமாவது செழித்து வளராது; தக்க பலனையும் தரமாட்டாது.


4. விதையைப் பூமியில் நட்டோமானால் சூரிய உஷ்ணம், காற்று, தண்ணீர் இவற்றின் உதவியால் விதைக்குள்ளிருக்கும் முளையானது சுறுசுறுப்பை அடைகிறது. அம்முளை, தன்னை மூடிக்கொண்டிருக்கும் பருப்பினிடமிருந்து, உணவை ஏற்றுக்கொண்டு, பெருத்து வளர்கிறது. பின்னர் விதைக்குள் இடம் போதாமையால் விதையின் தோலைப் பிளந்து வெளிக்கிளம்புகிறது. முளைக்கு இரண்டு பாகங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று, மேல் நோக்கிவளரும். அதுவே தாவரத்தின் தண்டு. ஒன்று கீழ் நோக்கிப் பூமிக்குள் செல்லும். அதுவே தாவரத்தின் வேர் எனப்படும்.

5. பொதுவாய், மேற்கூறியவாறு பூமியிலிருந்து விதைகள் வெளிக்கிளம்பினாலும், ஒற்றைப்பருப்புவிதைகள் வளர்வதிலும், இரட்டைப்பருப்பு விதைகள் வளர்வதிலும் வித்தியாசமுண்டு. எவ்வாறெனில், ஒற்றைப்பருப்புள்ள விதையில், முளை வெளிக்கிளம்புவதற்கு முன், அதற்கு வேண்டிய உணவு, பருப்பிற் சிறிதளவுதானிருக்கும். ஆகையால், இவ்விதையிலிருந்து முளை வெளிக்கிளம்புவதற்கு முன்னாலேயே, வேர்ப்பாகம் பூமியை நோக்கித்தோலைப் பிளந்துகொண்டு கீழே செல்லுகிறது. செல்லும் வேரானது ஒற்றையாய்ப்பெருத்துவளராமல், பல சிறு சிறு கிளைவேர்களாகப் பிரிந்து பூமிக்குள் பரவுகிறது. இவ்வேர்கள் முளைக்குவேண்டிய உணவைப் பூமியிலிருந்து கிரகித்து உதவுகிறது. இதன் உதவியால் முளை, கூர்மையாகமேல்நோக்கிக்கிளம்புகிறது.

6. இரட்டைப்பருப்புள்ள விதைகளில்முளை மேலே கிளம்புவதற்குவேண்டிய ஆகாரம் தகுந்த அளவாய் இருக்

கிறது. ஆகையால், வேர் பூமிக்குள் செல்ல ஆரம்பிக்கும் போதே, முளையும் மேலே கிளம்பிவிடும். இவ்விருவகை விதைகளும், உணவுகளை உட்கொள்வதிலும் முளைப்பதிலும், செடிகளாகவும் மரங்களாகவும் வளர்வதிலும், ஏற்படும் மாறுபாடுகளைப் பற்றி இங்கே ஆராய்வோம்.

7. இப்பொழுது இரட்டைப் பருப்பு விதை, முளைக்கும்விதத்தைப்பற்றிக் கவனிப்போம். மொச்சை விதையை எடுத்துக்கொள்வோம் இதைநாம் பூமியில் நட்டோமானல் இது வேர் விடுவதையும், இதிலிருந்து முளை கிளம்புவதையும் பார்க்கமுடியாதல்லவா? அவற்றை நாம்பார்க்கும்படியாய், ஒரு கண்ணுடி டம்ளரை எடுத்துக்கொள்வோம். மை ஒற்றும் காகிதத்தை ஒரு சுருளாகச் சுருட்டி, டம்ளரின் உட்புறத்தில் ஒட்டினுற்போல வைப்போம். பிறகு கொஞ்சம் தண்ணீர் விட்டு விதையை மை ஒற்றும் காகிதத்திற்கும், கண்ணுடிக்கும் இடையில் வைத்துவிடுவோம். கொஞ்சம் இருட்டான இடத்தில் சொற்பக் காற்றும் உஷ்ணமும் படும்படி டம்ளரை வைத்துவிட்டு, ஈரம் காய்ந்துபோகாமலிருக்க அடிக்கடி தண்ணீர் விட்டுக்கொண்டிருப்போம்.



8. சில நேரம் கழித்துப் பார்த்தால் படத்தில் காட்டியபடி, விதையிலிருந்து வேர், முளை இவை கிளம்பி இருப்பதைக் காணலாம். மொச்சை விதையை நடுவதற்கு முன், முதல் நாள் கொஞ்சம் தண்ணீரில் ஊறப்போட்டு,

மறு நாள் எடுத்துப் பார்த்தால், முளை கிளம்பு மிடத்தில் ஒரு தழும்பு இருப்பதைப் பார்க்கலாம். 'இந்தத் தழும்பு, விதையின் இரட்டைப் பருப்புகள் சேர்ந்திருக்கும் இடத்தில் காணப்படுகிற வெள்ளையான கோட்டின் முனையில் தான் உண்டாகும். இவ்வெள்ளைக் கோட்டின் சத்து, முளையாகவும், வேராகவும் கிளம்புகிறது. நன்றாக ஊறின விதையில், தோல் பிளவுபட ஆரம்பிக்கிறது. தோலில் வெளித்தோல் உறுதியாகவும், உள்தோல் மென்மையாகவு மிருக்கும். உள்ளிருக்கும் பருப்பு, இரண்டு பிளவா யிருக்கிறது. இவைகளுக்குக் 'கதுப்புக்கள்' என்று பெயர். இரண்டு கதுப்புக்களும் ஒரு இடத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

9. விதை முளைப்பதற்கு, முக்கியமாய்த் தண்ணீரும், தக்க உஷ்ணமும் காற்றும் வேண்டும். விதையை நட்டவுடன், முதல் முதல், முளை, தண்ணீரின் உதவியால் பருப்புக்களிலுள்ள உணவை உண்டு, கிளம்ப ஆரம்பிக்கிறது. முளையின் தண்டு, எப்பொழுதும் சூரிய வெளிச்சம் வரும் பக்கத்தையே நோக்கி வளரும். வேர்ப்பாகம், பூமியை நோக்கித்தான் போகும். ஒரு வாரத்தில் முளை கிளம்பித் தண்டுவிட்டுத் தலைவளர்ந்து பூமிக்குவெளியிற் காணப்படும். பின்னும் இரண்டொரு தினத்தில் தலைநிமிர்ந்து, கதுப்புக்களைப் பற்றிக்கொண்டிருக்கிறபாகமானது, வேருக்குச் செங்குத்தாக வருகிறது. தண்டானது மேல்நோக்கி வளர்ந்து கொண்டு போகப்போகப் பக்கத்தில் ஒவ்வொரு கணுக்களிலும் இலைகள் உண்டாகிச் செடி வளர்கிறது. முதல் முதல் பருப்பின் கதுப்புக்களை அடுத்துத் தண்டிலிருந்து இருபுறமும் இரண்டு இலைகள் முளைத்திருப்பதைப் பார்க்கலாம். அவை கதுப்பின்மேல் படுத்தாற்போ லிருக்கும். மேலே போகப்போக இலைகள் மும்மூன்றாய் இருக்கும்.

## 16. நட்பின் பெருமை.

1. நட்பு என்பது உறவினரல்லாத இருவரிடம் காணப்படும் அன்பு. சேர்ந்து வசிப்பதாலும், கூடிப் பழகுவதாலும், ஒத்த உணர்ச்சியாலும் இந்நட்பு உண்டாகும். எக்காலத்தும் நல்லோர் நட்பினால் நன்மையும், தீயோர் நட்பினால் தீமையும் உண்டாகும். உத்தம நண்பர் ஒருநாட் பழகியபோதிலும், தம்முள் ஒருவர்க்குறும் சுக துக்கங்களை மற்றவர்க்கும் உரியனவாகவே பாவிப்பார்கள். இத்தகைய நட்பின் பெருமைக்குச் சான்றாக விளங்கியவர்கள் குசேலரும், கண்ணபிரானும் ஆவார்.

2. உத்தர மதுரையின் அருகில் அவந்தி என்ற ஒரு நகரம் உண்டு. அதைச் சார்ந்த ஒரு குன்றில் சாந்தீபினி என்ற மகரிஷி வசித்துவந்தார். அவரிடம் சுதாமா என்னும் அந்தணச்சிறுவர் ஒருவர் கல்வி பயின்று வந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே அடக்கம், பொறுமை, கருணை, திருப்தி, சத்தியம் என்னும் அருமைக் குணங்கள் ஒருங்கே வாய்ந்தவர். திருமாலின் திருவடிகளையே தமது உள்ளத்திற் கொண்டவர். யாருடனும் இனிய சொற்களை வழங்குவார். இவரும், உத்தரமதுரையி லிருந்த கண்ணபிரானும், இளமையில் ஒரு சாலை மாணவராகி இணைபிரியா நட்புப் பூண்டிருந்தனர்.

3. பின்னர் இவர், சுசீலை என்ற ஒரு பெண்ணை மணந்து இல்லற வாழ்வில் இருந்துவந்தார். இவள் மாசிலாக்குலத்துதித்தவள்; கணவன்சொற்கடவாதவள்; சாந்தமும், கற்பும் ஓர் உருவெடுத்தவள். இவரோ மிக்க ஏழை, ஆதலால் காட்டிற் சென்று, அங்கே உதிர்ந்து கிடக்கும் புல்லரிசியைப் பொறுக்கி வருவார். அதை இவர் மனைவி, அன்புடன் ஏற்றுக் குற்றிப் பாகஞ்செய்து, அதிதிகளுக்கும், கணவனுக்கும் இட்டு மீந்ததைப் புசிப்பாள்.

4. நாளடைவில் சுசீலை, இருபத்தேழு குழந்தைகளைப் பெற்றாள். அதனால் இவரது வறுமைநோய் அதிகரித்தது. இவர் வறுமைப்பிணியால் உடல் மெலிவுற்றார். இவருடைய உடை கந்தையாகவே இருந்ததால் இவருக்குக் 'குசேலர்' என்ற பெயர் வந்தது. எவ்வளவு துன்பம் வந்தபோதிலும் குசேலர், அதனைப் பொருட்படுத்தாது பரந்தாமனையே சிந்தித்துக்கொண்டிருந்தார். சுசீலையும் எவ்வளவோ கஷ்டத்திற் குள்ளாகியும் கணவனிடத்தில் சிறிதும் வெறுப்பு அடைந்திலள். உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலில்லை. உண்ணவோ உணவுக்கும் வழியில்லை. படுக்கவோ பழம் பாய்க்கும் கதியில்லை. பாரில் நல்லவர்பாற் சென்று பிச்சைதான் எடுக்கவோ மனங்கொள்ள வில்லை. 'வறுமை என்னும் இத்துயர்க் கடலைக் கடப்பது எவ்வா'றென, அவள் பலநாள் சிந்தித்து ஒருநாள் சமயம் பார்த்து, மனம் துணிந்து நாயகனிடம் வந்து கூறுவாள்,

5. "சுவாமி! உள்ளபடியே நமக்கும் நம் மக்களுக்கும் பொன் வேண்டாம்; பூஷணம் வேண்டாம். வயிறார உண்ண உணவாவது வேண்டாமா? யாதவர் குலத்திற் றோன்றி, இப்பொழுது துவாரகையில் அரசர்க்கரசனாய் விளங்குங்கண்ணபிரான், தங்களுடனே ஒரேபாடசாலையில் கற்றவராமே? தாங்களிருவரும் இணைபிரியாத நேசர்களாமே? அவரிடம் சென்றாவது, நமது குறைகளைத் தெரிவித்து, நம் வறுமைத் துன்பத்தைக் களையக் கருதலாகாதா?" என்று சொல்லிக் கண்ணீர் சொரிந்தாள்.

6. 'ஏற்பது இகழ்ச்சி' என்ற முதுமொழியை மறவாத குசேலர், பொருள் படைத்தார் படும் பாடுகளை எல்லாம், தம் மனைவிக்கு எடுத்துக்கூறிக் 'கண்ணபிரானிடம் இக் கருத்துடன் செல்லுதல் தகாது' என மறுத்தார். மீண்டும் மீண்டும் தம் மனைவி வற்புறுத்தியதால், அவர்

ஒருவாறு இணங்கிப் 'பெண்ணே! பெரியோர்கள், அரசர், தெய்வம், குழந்தை இவர்களைக் காணச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லலாகாதே! அதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்து பிறகு என்னிடம் வா!' என்றார்.



7. சுசீலை, குசேலர் கொண்டுவரும் புல்லரிசியில், தினமும் சிறிது சிறிதாய்ச் சேர்த்துவைத்து, ஒரு நாள் அதனை அவலாக இடித்து, அதைக் குசேலரது ஆடையில் துவாரமில்லாத ஒரு பக்கத்தைத் தேடி முடிந்து கொடுத்தாள். குசேலர், அதைப்பெற்றுத் துவாரகையைநோக்கிப் புறப்பட்டார். வழியில் கல்லிலும் முள்ளிலும் நடந்து, மழை, வெயில், காற்று, பனி முதலியவற்றால் அவரடைந்த அவஸ்தைகளுக்கு அளவில்லை. பல நாள் பசியால் வருந்தி நடந்து துவாரகையை அடைந்தார். அங்கே கண்ணனது மாளிகையை அணுகித் தமது வருகையைக் கண்ணபிரானிடம் தெரிவிக்குமாறு, வாயில் காப்போரை வேண்டினர்.

வாயில் காப்போரிற் சிலர், இவரை ஏளனம் செய்தனர். அவர்களில் ஒருவன் மாத்திரம் இவர்பால் இரக்கமுற்று, இவர் வருகையைக் கண்ணபிரானிடம் தெரிவித்தான்.

8. கண்ணபிரான் உடனே எழுந்துவந்து, குசேலரைப் பார்த்து, உடல்பூரித்து, இறுகத் தழுவி, உபசரணை புரிந்து, அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். பின்னர் அந்தப்புரத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய், நீராட்டுவித்துப் பட்டாடை சாத்தி, அறுசுவையோடு உணவளித்து, மஞ்சத்தில் உட்கார வைத்துத் தாம்பூலாதிகள்கொடுத்து, யோக க்ஷேமங்களை விசாரிக்கலானார்.

9. 'அண்ணா! ஊரில் மழைஉண்டா? யாவரும் க்ஷேமமா? தங்களுக்கு எத்தனை மைந்தர்கள்? அவர்கள் கல்வி பயின்று வருகின்றார்களா?' என ஆவலோடு வினவினார். பின்புஇவர்கள்இருவரும் பாலியத்தில் கல்வி பயிலுங் காலத்தில் இவர்கள்விளையாடிய விளையாட்டுக்களைப்பற்றிப் பலவாறு பேசிக்கொண் டிருந்தனர்.

10. குசேலர், அதன் பின்னரும் தாம் கருதிவந்த விஷயத்தைக் கூறவே இல்லை. கண்ணபிரான் அறியாத விஷயம் என்ன இருக்கிறது? அவர் குசேலரை நோக்கி, 'அண்ணா இத்தனை நாள் கழித்து என்னைப் பார்க்கவந்தீர்களே! எனக்கு என்ன கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டார். குசேலர், கொண்டுவந்த அவலைக் கொடுப்பதற்கு வெட்கமுற்று வாளா விருந்தனர்.

11. கண்ணபிரான், குசேலர் கொண்டுவந்த அவலைத் தாமே எடுத்து, அதில் ஒரு பிடி வாயிலிட்டுச் சுவைத்து மென்று தின்றார். 'இந்தஅவல் மிக்க இனிமையுடையதாய் இருக்கிறது; இதுவரை இத்துணை அருமையான அவலை நான் உண்டதே இல்லை' என்று புகழ்ந்து, தமது உள்

என்பைக்காட்டி, அவர் குசேலருக்குச் சகல சம்பத்தும் பெருகவேண்டுமென்று நினைத்தார். அப்பொழுதே குசேலரது சிறியகுடிசை பெரிய மாடமாளிகையாக மாறிற்று. அங்கிருந்த மண்கலமெல்லாம் பொன்கலமாயின. சகல செல்வங்களும் அங்கே நிறைந்து விளங்கின.

12. இவ் விஷயம் யாதும் அறியாத குசேலர், மாயனது மாயா விநோதத்தில் உள்ளமும் தேகமும்ஒருங்கே பூரித்துநின்றார். ஆதலின் தாம் வந்த காரியத்தையே இவர் மறந்து, சின்னாள் அங்கேயே தங்கியிருந்தார்; பின்னர் தம் ஊருக்குப் புறப்படக் கண்ணபிரானிடம் விடை வேண்டினர். கண்ணபிரானும் கோட்டை வாயில்வரை வந்து இவரை வழியனுப்பினர். குசேலர், தம் நகர் நோக்கிச் செல்லும்போது, கண்ணன் காட்டியநட்பைஎண்ணி எண்ணிவியந்துகொண்டே வழிநடந்துதம் ஊர்சேர்ந்தார். வீட்டின் வாயிலை அடைந்ததும் அங்கே இவரது குடிசை, குபேரனதுமாளிகைபோல்தோன்றியது. அதைக்குசேலர் கண்டு ஆச்சரியமுற்று, 'என்ன! நாம்திசைதப்பிவந்துவிட்டோமோ? அல்லது, கண்ணபிரான் திருவுளச் செயலில் ஒன்றோ இது!' என நினைத்துத் திகைத்து நின்றனர்.

13. இவ்விதம் இவர் நிற்பதைக் கண்ட மனைவி, விரைந்து ஓடிவந்து, கொழுநனை வணங்கி,உள்ளே அழைத்துச் சென்றாள். பிள்ளைகளும் பேரன்புடன் வந்துஅவரைச் சூழ்ந்தனர். குசேலர் மாளிகையையும், அதனுள் இருந்த அரிய பண்டங்களையும் கண்டு மேன்மேலும் ஆச்சரியமுற்றார்; தாம் ஒன்றும் கேளாதிருந்தும், தம் எண்ணத்தை அறிந்து, இவ்வளவு அரிய செயல்களைச் செய்தருளிய கண்ணபிரானது திருவிளையாடலை அவர் நினைந்து, நினைந்து, உள்ளுருகி, ஆனந்தக்கடலில் ஆழ்ந்திருந்தார்.

## 17 நட்பின் பெருமை பாட்டு.

சேந்தின்மா நக ரந்தனில் என்ற;பாடலின் சந்தம்.

அவந்தி மாநக ரென்னுந் தலத்தினில்
அந்தண ராமொரு பாலர்-பெயர்
ஆம் சுதாமா வென்னுஞ் சீலர்-அவர்
அங்கிருந்த சாந்தீபராகிய அரியரிஷியிடம்சிஷ்யராய்ப்
படக்க மாதிய நற்குண நற்செய்கை [பயின்
அன்புதயைஇவற் றோடே-வாழ்ந்தார்
ஆய்ந்து புகழ்ந்திடும் நாடே (1)

வடமதுரையில் யாதவர் வம்சத்தில்
வந்து தித்த கண்ண னோடு-இவர்
மாணப்படித்தனர் நீடு-மிக்க
வாய்மைதயைபொறையாவுமுணர்ந்தொருதாய்வயிற்றினரோனே
வைத்தனர் நட்பு வாழ்ந்தனர் ஓர்சாலை [னும்படி
மாணவ ராகவே கூடி-நல்ல
மாமறை மெய்ப்பொருள் நாடி (2)

கல்வி யாதிய ஆய்ந்து முடிந்ததும்
கண்ணபிரான் தம்மூர் சென்றார்-இவர்
கற்றதற்குத் தக நின்றார்-சில
காலஞ்சென்றசு சீலையென்றதோர்காரிகைதனை யேமணந்
காதலாயிரு பத்தேழு மைந்தரைக் [துமெய்க்
கண்ணியமாய்ப்பெற்றுவாழ்ந்தார்-பல
காலும்வறுமையில் ஆழ்ந்தார் (3)

பசிதணிந்திடப் புல்லரிசியினைப்
பண்ணைகள் தோறுஞ்சென் றெடுத்தும்-வந்து
பாவைசுசீலை பாற் கொடுத்தும்-அதைப்

ஏகமாக்கிவந்தோர்க்களித்துப்பின்பாலரோடிருந் தேயருந்துவர்
பகரில் ஆடையோர் கந்தையே ஆதலால்
பாரில் குசேல ரென்பாரே - இவர்
பக்தி மிகும் பெரியோரே (4)

இந்தவா றிரு பத்தேழு மக்களோ
டேற்ற சுசீலையும் மெலிந்து - மிக
ஏங்கிக் கவலையே மலிந்து - உண்ணற்
கேதுமற்றவ ளானபோதிலும்மாதுமெத்த மனம்பொறுத்
எம்பிரான் செய லென்றே யவனடி [தனள்
எண்ணித் துணிந்து மென்மேலே - சதா
இன்னலடைந்ததி னாலே (5)

தருணங்கண் டொரு நாள் தன் கணவரைச்
சார்ந்து பணிந்துமே நின்று-"கண்ணன்
தங்கள் சினேகித ரென்று - கேள்வி
சாமிநீர்திரு மாதவன்பதி சார்ந்திடில் அவ ரேதுமீகுவர்
தனயர் தம்பசி தீரஉண் பிக்கலாம்
தயவுசெய் வீ" ரென்றே யோடி - கந்தை
தன்னி லவல் கொஞ்சந் தேடி (6)

முடிந்து தந்தனள் கொண்டவர் பாதையில்
முள்ளிலுங் கல்லிலுஞ் சோர்ந்து - மெல்ல
மூதூர் துவாரகை சார்ந்து-போற்றும்
மூவரில் ஒரு மூர்த்தியாயந்த மூவருக்கொரு மூலமாகிய
முகுந்தனையங்கு கண்டபோதேயவர்
முன்வந் தழைத்துமே சென்றார்-பின்னர்
முகமன் பல கூறி நின்றார் (7)

இத்தனை நாள்க டந்துவந் தீரெனக்
கென்கொணர்ந்தீ ரெனத் தாங்கி - கந்தை
யின்முடிப்பைக் கையில் வாங்கி - அவிழ்த்

தின்பமாகவிருக்குதேயவலென்றொருபிடிவாய்மடுத்துடன்
ஏற்றசெல்வம் பெருகவென் றெண்ணினார்
எல்லாம் நிறைந்தன வீட்டில்-இவை
ஏது மறியாரந் நாட்டில் (8)

இரண்டொரு தினம் தங்கி யிருந்துபின்
ஏகவிடைபெற்று வந்தார் - தம
தில்லத்தைக் கண்டு வியந்தார் - அந்த

இறைவன் திருவிளை யாடலிதென இனிதுநலமுறமேன்மை
இல்லறம்புரிந் தேநீடு வாழ்ந்தனர் (பெற்றுமே
ஈகையறம் புரிந் தார்கள் - போற்றி
எல்லோரும் மேபுகழ்ந் தார்கள் (9)


நட்பினோர் தன்மை துன்பங் களை தலெங்
நாளும் வறுமையிற் செம்மை - பெறல்
நல்லறமாமிந்த உண்மை - தனை

நாமறிந்திதுபோல்நடந்திடத்தாமறிந்துமேலோர்மொழி
நன்று நன்று மேல் கற்கை நன்றுதலால் (ந்தனர்
நாட்டமுடன் படிப் போமே - பல
நன்மை யிதனி லுண் டாமே (10)

---

## 18. முள்ளம் பன்றி.

1. விலங்கினங்களில் முதுகு எலும்புள்ளவை என்ற ஒரு பிரிவு உண்டு. அப்பிரிவினுள், குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும் ஒரு வகுப்பு உண்டு. அத்தகைய வகுப்புக்களில், பூமியைக்குடைந்துபொந்துக்களில்வசிப்பவற்றை ஒர்வகை எனப் பிரித்திருக்கிறார்கள். எலி, முயல், முள்ளம்பன்றி போன்றவை இவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றுள்முள்ளம்பன்றியைப்பற்றிஇங்கேகவனிப்போம்



2. மேலே உள்ள படத்தைப்பார், இதுதான் முள்ளம் பன்றி. இது எலி முயல்களைப் போலவே வறண்ட பூமியில் குழிதோண்டி வசிக்கும். இதன் உடம்பு முழுதும் குச்சிபோன்ற இறகுகள் அடர்ந்துள்ளன. ஆதலால் இதன் உடம்பு, நமது கண்ணுக்குப் புலப்படாமலே இருக்கிறது. இதன் தலையும், நான்கு கால்களும் மட்டும் நமக்குத் தெரிகின்றன. இதன் பாகங்கள் ஒவ்வொன்றையும்ஆராய்வோம்

3. இதன் உயரம் சுமார் ஒரு அடி இருக்கும். நீளம் இரண்டரையடிமுதல் மூன்று அடிவரை இருக்கும். இதன் முகம் எலியின் முகத்தை ஒத்திருக்கிறது. நமது தேசத்திலிருக்கும் முள்ளம் பன்றிகளுக்கு, மூக்கில் மயிர் உண்டு. மூக்கின் எலும்பு புடைப்பாகக் காணப்படும். இதன் மூக்குத் துவாரங்கள் பெரியவையாய் இருக்கும்.

4. மற்ற மிருகங்களுக்கு இருப்பதுபோலவே இதற்கும் பற்கள் உண்டு. ஆயினும் முன்பற்கள், மேல்வாயில் இரண்டும், கீழ்வாயில் இரண்டுமாக நான்கு பற்கள், ஊசிபோல் கூர்மையாய் நீண்டிருக்கும். கடைவாய்ப் பற்கள் இரண்டே உண்டு. அதனால், முன்வாயிலிருந்து பின்வாய்வரை, இதன் கன்னங்கள் குழிந்துதோன்றும். இதன் தலைமயிர் அடர்ந்தும், பின்புறம் சரிந்தும்காணப்படும். காதுகளிரண்டும், எலிக்கு இருப்பதுபோலவே விரிந்திருக்கும்.

5. கழுத்து, பருத்துத் தலை முழுதும்உடம்பினுடன் சேர்ந்திருக்கும். தேகத்தில் மயிருக்குப்பதிலாக, இறகுகள் போல அடர்ந்திருக்கும் முட்கள், ஒவ்வொன்றும் ஒரு அடி

நீளமாகவும் நுனி கூர்மையாகவும், இடை பருத்தும், அடி சிறுத்து மிருக்கும். அம்முட்களின் மீது, கறுப்பும்வெளுப் புமான நிறங்கள் மாறிமாறி உள்ளன.

6. இதன் கால்கள், குட்டையாயும் ஒரே அளவாயு மிருக்கும். ஒவ்வொரு காலிலும் ஐந்து விரல்களுண்டு. விரல்களின் நகங்கள், கூர்மையாகவும் வளைந்துமிருக்கும். இதன் வால்,குட்டையானது.வால்முழுவதிலும்உடம்பிலிருப்பது போலவே, முட்கள் அடர்ந்திருக்கின்றன. ஆனால் அம்முட்கள், உடம்பின் மீதுள்ள முட்களைப் போல் நீளமாயிரா. வாலிலுள்ள முட்கள் குழாய்போலிருக்கும். அதனால் முள்ளம் பன்றி, வாலை ஆட்டும்போது, காய்ந்த பனையோலையில் உண்டாவதுபோலச் சலசலவென்ற சத்தம் உண்டாகும்.

7. நம் நாட்டிலுள்ள முள்ளம்பன்றிகள் சாதாரணமாகக் கறுப்பு நிறமாகவே இருக்கும். இது பகல் முழுதும் பொந்தில் பதுங்கியிருந்து, இரவில்இரைதேட வெளியிற் புறப்படும். காய் கிழங்கு, மரப்பட்டைகள் இவைகளே இவற்றின் முக்கிய உணவாகும். பயிரிட்டுள்ள நிலங்களில் முள்ளம் பன்றிகள் புகுந்தால், பயிர்களைநாசம்செய்தும், காய்கறிச் செடிகளை அறுத்தும், அவைகளைத் தின்றும், கெடுத்துவிட்டுப் போய்விடும்.

8. இது தடவைக்கு இரண்டு முதல் நான்கு குட்டிகள் வரை ஈனும். அக்குட்டிகள் பிறக்கும் பொழுதே திடசரீரத்துடனும், திறந்த கண்களுடனும் பலத்த முதுகெலும்புடனும் பிறக்கும். தாய்ப்பன்றியானது, குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்க்கும்.

9. முள்ளம் பன்றிகள், சாந்தமாயிருக்கும் போது, அவற்றின் தேகத்திலுள்ள முட்கள், தேகத்தோடு தேகமாய்ப் படிந்திருக்கும். கோபமுண்டாகும் போதும், எக்காரணத்தினாலாவது பயமுண்டாகும் போதும், அம்முட்

களை அவை செங்குத்தாய் நிறுத்தித் தமது பின்னங் கால்களிரண்டையும் கோபத்துடன் பூமியில் அடித்தும், வாலை ஆட்டி முட்களால் சத்தமிட்டும், எதிரியின் வரவைப் பின்புறம் திரும்பி எதிர்பார்க்கும். எதிரி நெருங்கிவிட்டால், பின்னால் ஓடி முட்களால் எதிர்த்துத் தாக்கும்.

10. இது சாதுவானபிராணி, இதற்குமுக்கிய சத்துரு பாம்பு. பாம்பைக் கண்டுவிட்டால் அதனுடன் போராடி அதன்மீது புரண்டு முட்களால் குத்திக் கொன்று விடும். நாய்கள் மோப்பத்தால் இது இருக்கு மிடத்தைக் கண்டு பிடித்துக் காட்டிவிடும், வேட்டையாடுபவர்கள், இதன் முட்களுக்காகவே இதை வேட்டையாடிப் பிடிக்கிறார்கள். சிறுத்தைப்புலி, இதன் தலையில் ஒரே அடியாய் அடித்து இதைக் கொன்று விடும்.

11. இதன் முட்களினால், பெட்டிகளும் கூடைகளும் செய்கிறார்கள். அவற்றை எழுதுகோலாகவும், தலைமயிரின் சிக்கைநீக்குங்கருவியாகவும்பயன்படுத்துகிறார்கள். இதன் மாமிசத்தைச் சிலர் உணவாகவும் உபயோகிக்கிறார்கள்.

---

## 19. நமது இராஜதானியின் நிலங்களும், அவற்றைப் பண்படுத்தலும். 1

1. நமது இராஜதானியிலுள்ள நிலங்கள் பலவகைப் படும். அவை, கரிசல் நிலம், செவ்வல் நிலம், சுக்கான் நிலம், உவர் நிலம், மணற்பாங்கான நிலம் முதலியனவாம்.

2. கரிசல் நிலம்:—இது கறுப்பு நிறமுள்ளதா யிருக்கும். இந்த நிலம் கோடைகாலங்களில் வெடித்து, மாரிகாலங்களில் கால்களில் ஒட்டிக்கொள்ளுமாறு பிசுபிசுப்பா யிருக்கும். இது தண்ணீரை அதிகம் இழுத்துக் கொள்ளும் தன்மையுள்ளது. நமது ராஜதானியில் கடப்பை, பெல்லாரி

அநந்தப்பூர் கர்நூல், கிருஷ்ணா, கோதாவரி, நெல்லூர், திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், வடஆற்காடு, தஞ்சையின் தென்பாகம், திருச்சியின் கீழ்ப்பாகம், கோயம்புத்தூர் முதலிய இந்த ஜில்லாக்களில், கரிசல் நிலம் மிகுதியாக உள்ளன. இந்நிலங்களில், பருத்தி, சோளம் முதலியன நன்றாய் வளரும். கோதுமை, அவுரி கொத்துக்கடலை, கொட்டைமுத்துச் செடி இவைகளையும் பயிரிடுகிறார்கள்.

3. செவ்வல் நிலம்—இது சிகப்பு நிறமுள்ளது; செந்நிறமான பாறைகள் பொடியாகி, இம்மண் ஏற்பட்டதாகத் தெரிகிறது. இந்நிலம் ஆகாயத்திலுள்ள நீரைக் கிரகிக்கும். இவ்விராஜதானியில் மேடுள்ள பாகம் யாவும் அனேகமாய்ச் செம்மண்ணாகவே இருக்கிறது. இந்நிலங்களில் புன்செய்த் தானியங்கள் யாவும் நன்றாய் வளரும். நீர்க்குறைவில்லாமலிருந்தால் இதில் நெற்பயிரையும் உண்டாக்கலாம்.

4. சுக்கான் நிலம்:—இது கரிசல் நிலங்களுக்குக்கீழே எவ்விடத்திலு மிருக்கும், சில பிரதேசங்களில் மேற்பூமியிலும் காணப்படும். ஆனால் இதில் பயிர் பச்சைகள் விளையா.

5. உவர் நிலம்:—இந்நிலம் உப்புப் பூத்து, மேலாக அடை அடையாகவும் வெளுப்பாகவு மிருக்கும். இந்நிலத்தில் பயிர் பச்சைகள் உண்டாகா. என்றாலும், நீர்வளம் பொருந்தி இருந்தால் கீரை, புகையிலை முதலிய பயிர்கள் சாகுபடி செய்யலாம். இந்நிலம் நமது இராஜதானியில் எல்லா இடங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் காணப்படும்.

6. மணற்பாங்கான நிலங்கள்:—கிழக்கு ஜில்லாக்களில் சமுத்திரக் கரையை அடுத்து இந்நிலங்கள் விசேஷமாய் உள்ளன. இவற்றின் மணல் ஆறுகளிலுள்ள சதங்கை மணல்போலிருக்கும். இந்நிலங்களில் சவுக்கு, தென்னை, பனை ஈந்து இவைகளே விசேஷமாய்ப் பயிராகின்றன.

7. மேற்கூறிய நிலங்களைத் தவிர வேறு இருவகை நிலங்களும் ஆங்காங்கு, சிற்சில இடங்களில் கொஞ்சம் கொஞ்சம் இருக்கின்றன. அவை 'அடைமண்நிலம், சதுப்பு நிலம்' என்பனவாம். ஆறு கால்வாய்களை அடுத்து வண்டல் ஏறிப் படிந்த ஒரு வகை நிலம் உண்டு. இதற்கு அடைமண் நிலம் எனப் பெயர். இந்த நிலத்தில் எல்லாப் பயிர்களும் நன்றாய் வளரும். எக்காலத்திலும் ஈரமைப்பு மாறாதிருக்கும் ஒருவகை நிலம் உண்டு. அந்நிலத்திற்குச் சதுப்பு நிலம் எனப் பெயர். பெரும்பாலும் மலைப்பிரதேசங்களிலுள்ள பள்ளத்தாக்குகளே இவ்வாறிருக்கும்.

8. பூமியை, அதில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு ஏற்றவாறு மூவகையாகப் பிரிக்கலாம். அதிக ஜலத்தை விரும்பும் நெல், கோதுமைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு 'நன்செய்' என்று பெயர்.

9. அதிக ஜலத்தை விரும்பாத, பருத்தி, கம்பு, மொச்சை, துவரை, அவரை, இவைகளைப் போன்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலங்களுக்குப் 'புன்செய்' என்று பெயர். புன்செய்ப் பயிரை மழைத் தண்ணீரினாலும் கிணற்றுத் தண்ணீரினாலும் பயிர் செய்யலாம்.

10. கிணறு, சிறுகுளம், குட்டைகள் வெட்டி, அதிலிருந்து தண்ணீரை இறைத்துப் பயிரிடும் வேலி சூழ்ந்த நிலங்களுக்குத் தோட்டங்கள் என்று பெயர்.

11. நமது இராஜதானியில் உள்ள பயிரிடப்படும் பூமிகளில் சுமார் 100-க்கு 15 பாகம் நன்செய்யாகவும், 80 பாகம் புன்செய்யாகவும், இரண்டே பாகம் தோட்டங்களாகவும். பாக்கியுள்ள மூன்று பாகங்கள், தரிசான நிலங்களாகவும், மேய்ச்சலுக்குள்ள நிலங்களாகவும் இருக்கின்றன.


## 20. நமது இராஜதானியின் நிலங்களும் அவற்றைப் பண்படுத்தலும் II.

1. இனி இந்நிலங்களைச் சீர்திருத்திப் பண்படுத்திப் பயிர் உண்டாக்கும் விதத்தைக்கவனிப்போம். நமது இராஜதானியில் சுமார் 100க்கு 80பாகம்நீர்வசதி இல்லாமையால் புன்செய் நிலங்களாகவும், அநேக நிலங்கள், கற்றாழை, நாகதாளி, புல்பூண்டு முதலியன அடர்ந்து, எவ்விதச்சாகுபடிக்கும் தகுதியற்றதாகவும் இருக்கின்றன. இவ்வாறுள்ள நிலங்களைப்புதிதாகச்சாகுபடிக்குக்கொண்டுவரஎத்தனித்தால், முதல் முதல் இக்கற்றாழைகளை அழித்துப் பூமியை, மேடு பள்ளமில்லாமல் சமமாக வெட்டித்திருத்த வேண்டும். ஜலவசதி இருந்தால் நன்செய்ச் சாகுபடிக்கு ஏற்றதாகக் கொண்டுவரலாம். ஜலவசதி இல்லை என்றால் மழையின் ஆதரவைக்கொண்டு புன்செய்ச் சாகுபடிதான் செய்யவேண்டும்,

2. பயிரிடும் பயிருக்குத் தக்கவாறு, பூமியில் சிறிய அளவாயேனும் பெரிய அளவாயேனும் பாகம் செய்து, வரப்புகள் கட்டி, வயல் வயல்களாகத் தடுக்க வேண்டும். முன் அழித்துள்ள கற்றாழைகளையும் சப்பாத்திகளையும் வயல்களுக்கு உரமாகவும் உபயோகிக்கலாம். இல்லாவிடில் அவைகளை உலர்த்திநெருப்புவைத்தும்கொளுத்திவிடலாம் மலைப்பாங்கான பூமியாயிருந்தால், அவைகளை வெட்டிச்சீர்திருத்தும்போது, கல்லு முள்ளுகளைப் பொறுக்கி எடுத்துவிடவேண்டும். இவ்வாறு சீர்திருத்தப்பட்ட பூமியைச்சாகுபடி செய்யும் பயிருக்குத் தக்கவாறு பண்படுத்தவேண்டும்.

3. பூமியைப் 'பண்படுத்துவது': என்றால் பூமியை உழுது நீரும் காற்றும் நன்றாய் இறங்குமாறு புழுதியாக்குவதே. பூமியில் முளைத்திருக்கும் புல்பூண்டுகளை வெட்டி எறிந்துவிட்டு, வயல்களில் நீரைக்கட்டி, மண்ணை மிருது

வாக்கவேண்டும். நன்செய்ப்பயிர் சாகுபடி செய்யவேண்டுமானல், பூமியைநன்ருய் உழுது, அதிகஜலம்கட்டி, மண்ணை மிகவும் மிருதுவாக்கவேண்டியது அவசியம். புன்செய்ப் பயிர்ச்சாகுபடிக்கோ இவ்வளவுபிரயாசைவேண்டியதில்லை. ஒருதரம் இரண்டு தரம் உழுதுவிட்டுக் கொஞ்சம் ஈரமிருக்கும்போதே விதையை விதைத்துவிடலாம். விதைத்த பயிர், தானகவே வெளிக்கிளம்பி விருத்தியடையும். ஆனல் அடிக்கடி களைகளை மட்டும் எடுத்து வர வேண்டும்.



4. பூமியை உழுவதற்கு ஏற்ற கருவி கலப்பை. நம் நாட்டிலுள்ளவர்கள். அநேக காலமாக உழுவதற்கு, ஒரே மாதிரியான கலப்பையைஉபயோகித்துவருகிருர்கள். இக் கலப்பையை 'நாட்டுக் கலப்பை' என்று சொல்லுகிருர்கள். இக்கலப்பை நிலத்தை ஆழமாக உழுவதற்கு ஏற்றதன்று. ஆதலால் நிலம் உழுவோர் நிலத்தைப் பல தடவை உழ வேண்டி இருக்கிறது.

5. கலப்பை சரியானதாய் இருக்குமானல், ஒருதடவை அல்லது இரண்டு தடவைஉழுதால் போதும். இரண்டு தடவை உழுவதிலேயே கலப்பைகள் பூமிக்குள் நன்ருக இறங்கி, மண்ணைக் கீழும் மேலுமாகப் புரட்டி, விரைவில் புழுதியாக்கும். இதனல் நிலத்தில் முளைத்துள்ள புல்பூண்டுகள் எல்லாம் அழிந்து போவதுடன், பயிர்களுக்குக் கெடுதி செய்யும் பூச்சி புழுக்களும் இறந்து போகின்றன. பயிர்களும் நன்ருய் வளர்ந்து அதிகப் பலனைத்தரும்.

6. தற்காலம் சீமையிலிருந்து ஒருவிதமான கலப்பைகள் வந்திருக்கின்றன. அவைகளை உபயோகப்படுத்தினால் உழவர்களுக்கு உழைப்பும் செலவும் சுருங்கும்.

7. நன்செய் நிலத்தில் தண்ணீர் கட்டி உழுது, பின்பு பரம்பு அடிக்க வேண்டும். அதனால் மிதமாயுள்ள புல் பூண்டுகளும் கரைந்து சமமாய்விடும்.



## 21. சங்கராச்சாரியார்.

1. உலகத்திலுள்ள தேசங்களில் சீரும் சிறப்பும் வாய்ந்தது நமது தாய் நாடாகிய இந்தியாவே. இதுவே வீரர்க்கும், கற்புடைமங்கையர்க்கும், கல்விமான்களுக்கும் உறைவிடமான உத்தம பூமி. இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் காரணம், இகபர சாதனங்களை அறிந்துணர்ந்து அவற்றை அனைவருக்கும் போதிக்கின்ற ஞானாசிரியர்கள், அவதரித்து வருவதேயாகும். இவ்வகை ஆசிரியர்களில், ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளும் சிறந்து விளங்கியவர்.

2. இம்மகான் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்குமுன், திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள காலடி என்னும் கிராமத்தில் அவதரித்தார். இவருடைய பெற்ரோர் சிறந்தசிவபக்தியுள்ளவர்கள். இவரது தந்தையின் பெயர் சிவஸ்வாமி. தாயின் பெயர் ஆரியம்மாள். இவர் பிறந்த மூன்ருவதுஆண்டில் இவரது தந்தை காலஞ்சென்ருர்.

3. இவரது பிறவியில் தெய்வத்தன்மைபொருந்திய சிலஅற்புதங்கள் இவரிடம் காணப்பட்டன. இவர் குழந்தையாய் இருக்கும்காலத்தில் ஒருநாகம் இவருடன் விளையாடி, எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே. விபூதி உருத்திராக்கமாக மாறி, இவரது தேகத்தில் சிவசின்னங்களாக விளங்கியது. ஆதலால் இவருக்குச் சங்கரர் எனப் பெயரிட்டதாகத் தெரிகிறது.

4. இவருக்கு ஏழாம்வயதில் உபநயனஞ்செய்தார்கள். அது முதல் இவர் வேத வேதாந்தங்களை நன்கு பயின்று, இளவயதிலிருந்தே உலகப்பற்றற்றவராய்விளங்கினார். சந்நியாசி ஆச்சிரமமே மிகச்சிறந்ததெனவும், அதுவே மோக்ஷத்திற்குமுக்கியசாதனமெனவும், அறிந்தார். தாம் துறவியாவதற்கு அடிக்கடி தாயாரிடம் உத்திரவுகேட்டும், அவர் கொடாததினுல் கவலையுற்று வருந்தினுர்.

5. ஒரு சமயம் நதியில் நீராடும்போது, ஒரு முதலை இவர்காலைப்பற்றிக்கொண்டது. இச்செய்தியறிந்த தாயார் ஓடிவந்து மைந்தனைப் பார்த்து மனம் வருந்தினுர் அச்சமயம், துறவறம் பூண்டாலொழியத் தாம் உயிர் தப்பமுடியாதென்று இவர் தாயாரிடம் தெரிவித்தார். தாயாரும் அதற்கு உடனே இசைந்தார்.

6. முதலை அக்கணமே இவரை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டது. விடுபட்டதும் இவர் சந்நியாசம் பெறுவதற்குத் தக்க ஒரு குருவைத்தேடிப் புறப்பட்டார். முதலில்

நருமதா நதிதீரத்தில் கோவிந்த யோகிகள் என்ற யதீஸ்வரரிடம் சிஷ்யராய் அமர்ந்து சந்நியாசம் பெற்றார். பிறகு இவர் குருவின் கட்டளைப்படி காசிநகர் சென்று வாசித்து வருங்கால், அங்கே இவருக்கு அதிக சிஷ்யர்கள் ஏற்பட்டனர். அவர்களுக்குள் சிறந்தவர் பத்மபாதர் என்பவர்.

7. காசியில் இவர் பல சாஸ்திர வியாக்கியானங்களையும், தோத்திரச் செய்யுள்களையும் இயற்றினார். பின்னர், வேதாந்தக் கொள்கைகளை நாடெங்கும் பரவச் செய்யப் புறப்பட்டார். பிரயாகை என்ற க்ஷேத்திரத்தில் மாறுவேடம் பூண்டு, பௌத்த மதக் கொள்கைகளை நன்கு ஆராய்ந்து அவற்றைக் கண்டனம் செய்ய ஆரம்பித்தார்.

8. இச் சமயம் இவர் தாய் இறக்கும் தறுவாயிலிருப்பதாகத் தெரிந்து காலடிக்குச் சென்றார். இவரைக் கண்ட பின் பரமபதம் அடைந்த தாயாருக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களை முடித்துப் பின்னர், தென் தேசத்தில் ஆங்காங்கு உள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக் காஞ்சிபுரத்தில் காமகோடிபீடம் என்ற ஒரு மடத்தை ஸ்தாபித்தார். இது தான் இப்பொழுது கும்பகோணத்திலிருக்கிறது.

9. குமரிலபட்டரின் சிஷ்யரான மண்டன மிஸ்ரர் என்னும் மஹா வித்வானைத் தமது சிஷ்யனுக்கி, அவருக்குச் சுரேசுவராச்சாரியார் என்ற பெயரிட்டார். பின்னர் அஸ்தாமலகர் என்பவரும் சிஷ்யராய்ச் சேர்ந்தார். அப்பால் துங்கபத்திரா நதிதீரத்தை அடைந்து, அங்கே சிருங்ககிரி என்னுமிடத்தில் ஒரு மடத்தை ஸ்தாபித்தார். அம்மடத்திற்குச் 'சாரதா பீடம்' என்று பெயர். அதற்குச் சுரேசுவராச்சாரியாரை அதிபதியாக ஏற்படுத்தினர்.

10. அது சமயம், பௌத்தர்களே எங்கும் பரவி இருந்தனர். அவர்கள் கொள்கைகள் எல்லாம் கண்டனம் செய்து, சீர்திருத்தி, ஜெகநாத ஸ்தலத்தில் வந்து,

கோவர்த்தனம் என்னும் மடத்தை ஸ்தாபித்தார்; அதற்கு அஸ்தாமலகரைத் தலைவராக்கினார். வடக்கே சஞ்சாரம் செய்து, துவாரகையை அடைந்து அங்கே ஒரு மடத்தை ஏற்படுத்தி, அதற்குப் பத்மபாதரை அதிபதியாக்கினார். அப்பால், காஸ்மீர் தேசம் சென்று சர்வக்ஞயபீடம் என்ற ஒரு மடத்தை உண்டு பண்ணினார். பத்ரிகாஸ்ரமம் சென்று அங்கு ஒரு மடத்தை ஸ்தாபித்தார். அதற்குத் தோடகர் என்பவரை மடாதிபதியாக நியமித்தார்.

11. இவரது நான்கு சிஷ்யர்களும் தலைமை வகித்து வரும் மடங்களில், அத்வைத போதனை நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பின்னர் முப்பத்திரண்டாம் வயதில், கேதாரமென்னு மிடத்தில் இவர் சித்தி அடைந்தார். தம் ஜீவிய காலத்தில் தேச முழுதும் சஞ்சரித்து, ஆங்காங்கு இந்துமதத்தினரையும், அதன் பெருமையையும் நிலைநாட்டிய இப்புண்ணிய புருடர் சரிதை, எக்காலத்தும் யாவராலும் படிக்கத் தக்கது.

## 22. காய்ச்சல்.

1. நமது சரீரம் பலவித நோய்களால் அடிக்கடி துன்புறுவதை, நாம் பார்க்கிறோம். நோயில்லாத மனிதர் எவரும் இல்லையென்றே சொல்லலாம். ஏற்ற உணவு காற்று இவற்றை உட்கொள்ளாததாலும், நல்ல தண்ணீரைப் பருகாததாலும் பலவித நோய்கள் உண்டாகின்றன.

2. அத்தகைய நோய்களில் 'சுரம், என்பது ஒன்று. இது மனிதர்களை அதிகத் துன்புறுத்தாதது. சொற்ப காரணத்தினாலே உண்டாவது. சில நாட்கள் மட்டும் துன்பத்தையுண்டாக்குவது. இச் சுரத்தில் பலவிதம் இருப்பினும் 'சாதாரண சுரம்' என்றும், 'வேறு நோய்களைப் பற்றி வரும் சுரம்' என்றும் இருவகையாகப் பிரிக்கலாம்.

சாதாரண சுரம் என்பது, ஆகார வித்தியாசத்தினுலும், சீதோஷ்ண மாறுபாட்டினுலும், தண்ணீர் வேறுபாட்டினுலும், வெயில் மழைகளில் அலைந்து திரிவதினுலும் ஏற்படக்கூடியது. இச்சுரத்திற்கு அடையாளங்கள் பலவுள. அவை, தலைவலி, நாவறட்சி, தாகம், சிற்சில சமயங்களில் உண்டாகும் வாந்தி முதலியனவாம்.

4. காய்ச்சலுள்ளதேகத்தின் உஷ்ணத்தை அடிக்கடி பார்த்தால், அது மேலும்மேலும் அதிகப்பட்டுக்கொண்டு வருவதைக் காணலாம். இச்சூடு ஒரு சமயம் கையால் தொடவும் முடியாதபடி அதிகரிக்கக் கூடும். இவ்வகைச் சுரம் சுமார் 3 முதல் 8 நாள்வரையேயிலைத்திருக்கும். சிற்சில சமயம் இரண்டு மூன்றுவாரங்கள் நீடித்திருப்பதுமுண்டு.

5. இச்சுரம் அநேகமாய் ஜன நெருக்கமுள்ளநகரங்களிலேயே காண்கிறது. பட்டணங்களில் ஜனநெருக்கத்தினுல் நல்ல தண்ணீரும் நல்லகாற்றும் ஜனங்களுக்கு வேண்டியவரை அகப்படாததினுலேயே, இத்தகைய சுரங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன.

6. இவ்வித சாதாரண சுரங்களுக்குக் கோயினு என்னும் மருந்தையே உபயோகிக்கிருர்கள். சுரத்தையுடையவன், ஒருவேலையும் செய்யாமல் படுக்கையிலேயே படுத்து இருக்கவேண்டும். கெட்டியான ஆகாரங்களை உபயோகிக்கலாகாது. ஜலம்போற் கரைந்துள்ள ஆகாரமே தகுதியானது. சுரம் கண்டபோது எவ்வித ஆகாரமும் சுவையாயிராது. தலைவலியைச் சரியான பற்றுப்போட்டு நீக்கிவிடலாம். ஜலதோஷத்துடன் சம்பந்தப்பட்ட காய்ச்சலுக்குச் சாம்பிராணிப் புகை பிடித்தால், தலையிலுள்ள நீர்எல்லாம் இறங்கிவிடும். இச்சுரங்கள் இரண்டு மூன்று தினங்கள் மட்டுமே இருப்பவைகளாதலால், அச்சமயம் ஆகாரமே உட்கொள்ளாமல் இருந்தால் விரைவில் குணமாய்விடும்.

7. சுரம் வந்ததும் அவசரப்பட்டுப் பேதிக்கு மருந்து சாப்பிடலாகாது. சுரத்தின் தன்மையைநன்ருய்த்தெரிந்து, அஜீரணத்தினுலாவது, வயிற்றின் மந்தத்தினுலாவது ஏற்பட்ட சுரமாயிருந்தால், பேதிக்குச் சாப்பிடுவது உசிதம்.

8. சிலசமயம், நமது சரீரத்தில் வெளிப்படையாகத் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே அடங்கியிருக்கும் ஒரு விதக் காய்ச்சலும் உண்டு. இக்காய்ச்சல் கண்டால் சரீரத்தின்மீது அதிகசூடு தோன்ருது. ஆனுல் நாளுக்குநாள் பலவீனமும், தேக இளைப்பும்; பின்னர்ப் பித்தபேதியும், ஏற்படலாம். இத்தகைய சுரம் கண்டோர், தாம் இருக்குமிடத்தை விட்டு, வேறு நல்ல காற்றுள்ள இடங்களுக்குச் சென்று வசிப்பின் சில தினங்களில் குணம் அடைவர். இதற்குக் கடற்கரை வாசமே கைகண்ட மருந்து.

9. சுரங்கள் எல்லாவற்றிலும் மிகக் கடுமையானது மலேச்சுரம். நமது தேகத்திலுள்ள இரத்தத்தில் கலக்கும் ஒருவகைப் புழுக்களின் செய்கையால் இச்சுரம் உண்டாகிறது. இச்சுரம் பரவுதற்குக் காரணம், கொசுக்கள் என்றே சொல்லலாம். கொசுக்கள் முதல்முதல் மலேச்சுர சம்பந்தமான கிருமிகளை ஆகாரத்தோடு உட்கொள்ளுகின்றன. அத்தகைய கொசுக்கள் நம்மைக் கடிக்கும்போது அக்கிருமிகள் நமது இரத்தத்தில் சேர்ந்துவிடுகின்றன.

10. இதை 'மலேக்காய்ச்சல்' என்பதற்கு ஒரு காரணம் உண்டு. மலேகளிலுள்ள சதுப்புநிலத்தில் ஊறிக்கிடக்கும் அழுக்குநீரில் ஏராளமாய் ஒருவிதக் கிருமிகள் உண்டாகின்றன. அக்கிருமிகளே கொசுக்களின் மூலம் நமது சரீரத்தில் புகுந்து சுரத்தை உண்டாக்குகின்றன. இச்சுரம் உண்டானபின் அடிக்கடி விட்டுவிட்டுத் தவருமல் வந்துகொண்டே இருக்கும். இச்சுரம் வரும்போது குளிருடன் வரும், விடும்போது வியர்வையுடன் விடும்.


11. இதனால் தேகத்திலுள்ள இரத்தம் குறைவுபட்டுத் தேகமுழுதும் வெளுத்துப்போகும். சரீரத்திற்குள்ளிருக்கும் ஈரல்பெருத்துவிடும். குடலில் கறுப்புமைபோல் ஒன்றுஉண்டாகி அதை அடைக்கும். இத்தகைய கொடிய நோய்க்குச் சிகிச்சை செய்வது தக்க வைத்தியர்களாலேயாகும். இதற்குக் கொடுக்கத்தக்கமருந்து கோயினுஒன்றுதான். இந்தச் சுரத்தில் ஆகாராதிகளைப் பற்றிக் கவனிக்கவேண்டும். இலகுவாய் ஜீரணிக்காத பதார்த்தங்களைப் புசிக்கவேகூடாது. எலுமிச்சம்பழச்சாறும், குளிர்ந்தஜலமும், தேத்தண்ணீரும், இச்சுரத்தில் வருந்துவோர் ஆசைப்பட்டுக்குடிப்பார்கள். இவற்றால்கெடுதலில்லை. நன்மைபயக்கும்.

12. இன்னும் சுரத்தில் அநேக வகைகள் உண்டு. அவை, டைபாய்டு, டிங்கு, இன்புளுவென்ஸா முதலியனவாம். இவ்வித நோய்கள், வந்தபின் நீக்குவதைக் காட்டிலும், இவை வராமல் தடுத்து, நமது தேகத்தைப் பாதுகாப்பதே நமது கடமை. வெயில், பனி, மழை, காற்று இவைகளில் அதிகநேரம் அலைந்து திரியாமலும், சரியான வேளைகளில் தாமதமன்றிச் செரிக்கக்கூடிய உணவுகளைச் சாப்பிட்டும், தேகத்தைச் சுத்தமாக வைத்தும், நல்ல நித்திரை புரிந்தும், நல்ல காற்றைச் சுவாசித்தும் வருவோமானால், கொடியநோய்கள்ஒன்றும் நமதுதேகத்தை அணுகா.

---

## 23. ஐக்கிய நாணய சங்கம்.

1. தஞ்சைஜில்லாவில் மஞ்சம்பட்டி என்றகிராமத்திலிருந்து இராமன்என்ற குடியானவன், ஒருசமயம் மதுரை ஜில்லாவிலுள்ள உசிலம்பட்டி என்ற கிராமத்திற்கு வந்திருந்தான். அங்கே தன் உறவினனாகிய கோபாலனுடைய வயல்களும் எருதுகளும் செழித்திருப்பதைக் கண்டான்.



2. இராமன்.—கோபாலா! உன் நிலத்தில் பயிர்கள் மிகவும் செழித்தும், உன் எருதுகள் கொழுத்தும் இருக்கின்றனவே! என்ன காரணம்?

3. கோபாலன்:—இராமா! உனக்குத் தெரியாதா? நமது மாட்சிமை தங்கிய கவர்ன்மெண்டார் ஆதரவின் கீழ் எங்கள் கிராமத்தில் ஒரு ஐக்கிய நாணய சங்கம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு நன்மையும் அச் சங்கத்தின் உதவியாலே தான்.

4. இரா:—நண்ப! ஐக்கிய நாணய சங்கம் என்றால் என்ன? அதனால் என்ன உதவி கிடைக்கிறது?

5. கோ:-இச்சங்கத்தைப்பற்றிஉனக்குத்தெரியாதா? கிராமத்தார்களுக்குள்ஒற்றுமைவளரவும்,விவசாயிகளுக்கு வேண்டும்போது சொற்பவட்டிக்குக் கடன் கொடுக்கவும், அக்கடன்களை மகசூல் காலத்தில் வரும்படிக்குத் தக்கவாறு, சிறிதுசிறிதாய் வாங்கி உதவி புரியவும், ஏற்பட்டிருக்கும் சங்கத்துக்கு 'ஐக்கிய நாணய சங்கம்' என்று பெயர்.

6. இரா:—இந்தக்கடன்கள் எல்லாம் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படுகின்றனவா?

7. கோபா:—அல்ல, அல்ல, பெரிய நகரங்களில் 'ஜில்லா பாங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம்' என்று கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் நகர வாசங்களிலுள்ள தனவந்தர்களும், மற்றவர்களும் பணத்தைச் சேர்த்து வைப்பதற்காகச் சொற்ப வட்டிக்குப் போட்டு வைப்பார்கள். அத்தொகையிலிருந்து கிராமங்களிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களுக்கு அனுப்பி, நம்மைப்போன்ற குடியானவர்களுக்குச் சகாயமான வட்டிக்குக் கொடுத்து உதவி செய்கிறார்கள்.

8. இரா:—என்ன ஆதரவின்பேரில்கடன்கொடுத்து வருகிறார்கள்? என்ன வட்டிக்குக் கொடுக்கிறார்கள்? கிராமத்திலுள்ள எல்லோருக்கும் கொடுக்கிறார்களா?

9. கோபா:—சில அடமானத்தின்பேரிலும், தகுந்த தனவான்களின் ஜாமீன் பேரிலும், நம்முடைய சொத்துக்கும், நாணயத்துக்கும் தக்கவாறு கடன் கொடுத்து வருகிறார்கள். வட்டியும் 100 ரூபாய்க்கு 0—12—0 வீதம் தான். ஆனால் கடன் வாங்குவோர் அந்தச் சங்கத்தின் அங்கத்தினராகச் சேரவேண்டும். மேலும் அச் சங்கத்தில் வாங்கும் கடனுக்குப் பத்திரச்செலவும் ரிஜிஸ்தர் கட்டணமும் கிடையாது.

10. இரா:—இவ்வளவு சகாயம் செய்து வருகிறார்களா? இதெல்லாம் எனக்குத் தெரியாதே! நான் எங்களூர் முதலாளியிடம் நூற்றுக்கு 2 வட்டிவீதம் கடன் வாங்கி இருந்தேன். அவர் வட்டிக்கு வட்டிபோட்டுக் கணக்கை மொத்தம் கட்டிக்கொண்டு கருதறுப்புக்காலத்தில் வந்து விடுவார். உழுதபாடுபட்டுக்கண்டமுதல், அவர்கடனுக்கே காணாது. இப்படி வருடமெல்லாம் உழைத்து, உழைத்து

அவருக்குக் கொடுத்ததைத்தான் கண்டேன். இதனல் என் மனமும் வெறுத்து இந்த வருடம் உழவுவேலையையும் நிறுத்திவிட்டு உழுகிற காலத்தில் ஊர்வழியே திரிகிறேன்.

11. கோபா:—இராமா! ஐக்கிய நாணய சங்கத்தால் ஏற்படும் நன்மைகள் ஏராளமாய் இருக்கின்றன. சொல்லுகிறேன் கேள். நமது விவசாயத்துக்கு வேண்டிய பொருள் உதவி செய்வதோடு, மீன் உரம், கொழிஞ்சி முதலிய எருக்களை மொத்தமாகக் குறைந்த விலைக்குவாங்கிச் சகாயமாய்க் கொடுத்துவருகிறார்கள். வீட்டு உபயோகத்திற்குவேண்டிய சகலவித சாமான்களும் சகாயமாகவரவழைத்துச்சொற்ப லாபம் வைத்துத்தருகிறார்கள். உயர்தரமானகலப்பைகள், வாங்கிவைத்து, நமக்கு வாடகைக்குக் கொடுக்கிறார்கள். நாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைக்கும் ஒரு அணு முதற்கொண்டு, எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும் வாங்கி, டிபாஸிட்டாகச் சேர்த்து அதற்கும் நமக்கு வட்டிகொடுக்கிறார்கள். இவை மட்டுமா, இன்னும் கேள்.

12. நாம் தனவந்தர்களிடம் வட்டிக்கு வாங்கினல் அத் தொகையை ஒரே தடவையில் கொடுத்தால்தான் வாங்குவார்கள். அல்லாவிடில் வட்டிக்கு வட்டி சேர்த்துக் கோர்ட்டில் வியாச்சியம் வேறு செய்து ஜீவனத்தையே கெடுத்துச் சொத்தையும் எடுத்துக்கொள்வார்கள். அப்படியெல்லாம் அல்லாமல் நாம் எவ்வளவு பெரிய தொகை கடன் வாங்கி யிருந்தாலும் சரி; நம்மிடம் எவ்வளவு சிறிய தொகை சேர்ந்தாலும் நாம் கொடுக்கும்போ தெல்லாம் சிறிது சிறிதாகவும் வாங்கிக்கொள்வார்கள். அதற்கும் வட்டி கழித்துக்கொள்வார்கள். அன்றியும் நமது மகசூல்களைப் பத்திரமாய் வாங்கி வைத்து, நல்ல லாபத்திற்கு விற்றுக் கொடுப்பார்கள். இவையல்லாமல் கிராமத்தில் அடிக்கடி கூட்டங்கள்கூடிப் பேசுவார்கள். அதனல் விவ

சாயிகளுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு, விவசாயம் விருத்தியாவதற்கு மிக்க அனுகூலமாயிருக்கிறது.

13. இரா:—கோபாலா! இன்று உன்னைக் கண்டதால் இந்த லாபகரமான சங்கதியைத் தெரிந்து கொண்டேன். இம்மாதிரியான சங்கம் எங்கள் கிராமத்திலும் ஏற்படுத்த வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

14. கோபா:—உங்கள் ஊரிலுள்ள முக்கியமான கனவான்கள் சேர்ந்து, ஜில்லாக் கூட்டுறவுச் சங்கம் அஸிஸ்டெண்ட் ரிஜிஸ்ட்ரார் அவர்களுக்கு மனுச் செய்து கொண்டால், அவர் கூட்டுறவுச் சங்கங்களின் இன்ஸ்பெக்டர் மூலம் விசாரித்தறிந்து, உங்களூரில் ஐக்கிய நாணய சங்கம் ஏற்படுத்துவார்.

15. இரா:—கோபாலா! இந்தச் சங்கம் எந்தக்கால முதல் ஏற்பட்டது? இதில் கவர்ன்மெண்டார் ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டிய காரணம் என்ன?

16. கோபா:—இராமா! இச்சங்கம் 1912-வருடத்திலிருந்து நடைபெற்று வருகிறது. "விவசாயம் செய்து பிழைக்கும் ஏழைக்குடியானவர்கள், உழவு, உரம், தசை கூலி முதலியவைகளுக்குத் தகுந்த பொருள் இல்லாமல், கண்டபடி கடன் வாங்கியும், நிலங்களுக்குச் சரியான உரம் முதலியன போடாமலும், தாங்கள் கெட்டுப்போவதோடு, நிலங்களையும் கெடுத்துவிடுகிறார்கள்" என்பதை அறிந்த நமது துரைத்தனத்தார் 'இம்மாதிரியான சங்கம் ஏற்படுத்தி விவசாயிகளுக்கு உதவி செய்தால், அவர்கள் முன்னேற்றமடைவார்கள்' என்ற நன்னோக்கத்தோடு செய்து வருகிறார்கள். இப்பெருந்தகையாளர் செய்த பேருதவிக்கு நாம் என்றும் நன்றி கூறுவோமாக. இச்சங்க சம்பந்தமான இன்னும் அநேக விஷயங்கள் 'இராஜாங்க முறை நூல்' என்ற புத்தகத்தில் நன்கு தெரிந்து கொள்ளலாம்.



## 24. பாண்டித்துரைத் தேவரும், மதுரைத் தமிழ்ச் சங்கமும்.

1. தமிழ்ப் பாஷையைத் தாய்ப் பாஷையாகக் கொண்ட பாண்டிய மன்னர்கள், அப்பாஷையையும், அதனைக் கற்றுத் தேர்ந்த புலவரையும் பல நூற்றாண்டுகளாகச் சீராட்டிப் பாராட்டிப் போற்றி வந்தனர். அவர்கள் காலத்திலேயே மூன்று தமிழ்ச் சங்கங்கள் வெவ்வேறு காலங்களில் ஏற்பட்டிருந்தன.

2. அச்சங்கங்களில் இருந்த புலவர்கள், பல நூல்களை இயற்றியும், ஆராய்ச்சி செய்தும், ஏனைய நூல்களை ஆதரித்தும் வந்தனர். கடைச் சங்கம் இப்போதுள்ள மதுரையில் சுமார் ஆயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்

இருந்ததாகத் தெரிகிறது. அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், தமிழையும், தமிழ்ப் புலவர்களையும் முறையாக ஆதரிப்பாரில்லாமையால், இப்பாஷை மிகத் தாழ்ந்த நிலைமையை அடைந்திருந்தது. அக்குறைகளை நீக்கித் தமிழை முன்னிருந்த நிலைமைக்குக் கொண்டு வர முயன்று மதுரையில் புதிதாய்த் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தியவர் பாண்டித்துரைத் தேவர்.

3. இவருக்கு உக்கிரபாண்டியன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவரது தந்தை, தமிழில் மிக்க அபிமானமுடையவராதலால், கடைச்சங்கத்தைக் கடைசியில் பரிபாலித்துக் கீர்த்திபெற்று விளங்கிய உக்கிரபாண்டியன் என்னும் அரசன் பெயரையே, இவருக்கு இட்டனர் போலும்.

4. இவர் இராமநாதபுர சமஸ்தான சேதுபதிகளின் குலத்தைச் சேர்ந்தவர்; பிரபல ஜமீன்தாரும், அருந்தமிழ்ப் புலவருமாகிய பொன்னுசாமித் தேவரவர்களின் மூன்றாவது புதல்வர். இவர் கி. பி. 1864-ம் வருடம் பிறந்தார். இவர் இளவயதிலேயே தமிழ்மொழியில் மிக்க பிரியமும் தேர்ச்சியும் உடையவராய் இருந்தார்.

5. சேது சமஸ்தான வித்வானாக இருந்த ஸ்ரீமான் முத்துசாமி ஐயங்காரிடம் இவர் கல்வி கற்றார். தமது பதினான்காம் வயதிற்குள் இலக்கண, இலக்கிய நூல்களிலும் சைவசித்தாந்தசாஸ்திரங்களிலும் தேர்ச்சியுற்றுப் பிரசங்கம் புரிவதில் பெரும் புகழ் பெற்றார். அக்காலத்திலேயே கம்பராமாயணத்தில் சொற்சுவை பொருட்சுவை தோன்ற இவர் செய்த பிரசங்கங்கள், கற்றோர்க்கும் மற்றோர்க்கும் களிப்பை உண்டாக்கும்.

6. இவ்வாறு, தமிழறிவும் தமிழபிமானமும்வாய்ந்த இவர், போற்றுவாரில்லாது தாழ்ந்த நிலைமையிலிருந்து வந்த தமிழ்ப் பாஷை, தக்க வழியில் முன்னேற்றமடைந்து

வளர முயன்றார் என்றேமல்லவா? அதற்கேற்ப இவரிடம் கல்வியோடு புகழும் செல்வாக்கும் இருந்தன. முன்பு தமிழ்ச்சங்கம் இருந்து வந்த மதுரையில், 1901-ஆ மே-மாசம் 24-ம் தேதி, தமிழ்ச் சங்கத்தைப் புதிதாய் ஸ்தாபித்து, அதன் அக்கிராசனாதிபதியாய் இருந்து, அதைச் செவ்வனே நடத்தி வந்தார்.

7. சங்கத்திற்கு வேண்டிய பொருள்கள் தாமீந்தது மன்றித் தமது நண்பர்பலரிடமிருந்தும் பெற்று, அது எக்காலத்தும் நிலைபெற்று நடக்குமாறு செய்து வைத்தார். இத் தமிழ்ச் சங்கத்தை நிலைநிறுத்துவதற்கு விசேஷ உதவி செய்தோர், பாஸ்கர சேதுபதியும், புதுக்கோட்டை மன்னருமாவர்.

8. இச்சங்கத்தில் நமது தமிழ் நாட்டிலுள்ள பல பெரும் புலவர்களும், பிரபுக்களும், அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கிறார்கள். இதில் வருடந்தோறும் 'பிரவேசம், பாலபண்டிதம்,பண்டிதம்' எனமூன்று பரீக்ஷைகள்நடத்தி வருகிறார்கள். இப்பரீக்ஷையில் தேறுவோர்க்கு நற்சாட்சிப் பத்திரங்களும், பொற்பதக்கங்களும் அவர்கள் தேர்ச்சிக்குத் தக்கவாறு கொடுத்து வருகிறார்கள். இச்சங்கத்தில் பரிசு பெற்றோர், தமிழிற் சிறந்த பண்டிதராய் ஆங்காங்கு விளங்குகின்றனர்.

---

## 25. பாண்டித்துரைத் தேவரும், மதுரைத் தமிழ்ச் சங்கமும். II.

1. இச்சங்கத்தில் தமிழபிவிருத்திக்காக நான்குகாரியங்கள் நடைபெற்று வருகின்றன, அவை வருமாறு:—

2. செந்தமிழ்க் கலாசாலை:—இதில் பல மாணவர்களுக்கு அன்னமளிக்கப்பட்டும், தக்க புலவர்களால் தமிழ்

கற்பிக்கப்பட்டும் வருகின்றன. இதில் பயின்று தேர்ந்தவர் பலர், நம் தமிழ்நாடு முழுவதும் ஆங்கில கலாசாலைகளிலும் நாட்டுக்கோட்டையார் நகரத்துக் கலாசாலைகளிலும் தமிழாசிரியராய் விளங்கி வருகின்றனர்.

3. பாண்டியன்புத்தகசாலை:—இதில்பல நூற்றாண்டுகளாக வெளிவராது மறைந்து கிடந்த பல ஏட்டுப் பிரதிகளும்; பல பாஷைகளிலும் அச்சிட்டுள்ள புத்தகங்களும் உண்டு. சில தினசரிப்பத்திரிகைகளும் இதற்குக் கிடைத்து வருகின்றன. இப்புத்தகசாலையில் யாவரும் குறித்த நேரத்தில போய் எதையும் எடுத்துப் பொருட் செலவின்றிப் படிக்கலாம்.

4. தமிழ்ச்சங்கம் அச்சுயந்திரசாலை:-இதில் முற்கூறிய ஏட்டுப் பிரதிகளிலுள்ள விஷயங்கள், தக்க பண்டிதர்களால் ஆராய்ச்சி செய்யப்பெற்றுச் செந்தமிழ்ப் பத்திரிகை மூலமாகவும், தனிப்புத்தகங்களாகவும் வெளிவருகின்றன. அன்றியும் வேறு அரிய பெரிய தமிழ் நூல்களும், தக்க ஆராச்சியுடன் பிழையின்றி அச்சிட்டு வெளியாகின்றன.

5. செந்தமிழ்:—இப்பத்திரிகை, பல பண்டிதர்களைக் கொண்டு ஆராய்ந்து எழுதப்பட்ட அரிய விஷயங்களோடு இச்சங்கத்தினின்றும் மாதந்தோறும் வெளியாகித் தமிழ் நாடெங்கும் உலாவி வருகின்றது.

6. இப்பெரிய காரியத்தை நிலைநிறுத்திய இவர், தனக்குச் சாவகாசம் வாய்ந்த காலங்களில், சில புத்தகங்களைத் தொகுத்தும், இயற்றியு மிருக்கிறார். அவற்றில் 'பன்னூல் திரட்டு, சைவமஞ்சரி, துதிமஞ்சரி' என்பன இவரால் தொகுக்கப் பெற்றவை. இவற்றால் இவர் தமிழ் நூல்கள் பலவற்றிலும் ஆராய்ச்சி உள்ளவர் என்பது நன்கு விளங்கும். இவரியற்றிய சிவஞான சுவாமிகள் இரட்டை

மணி மாலையும், முருகக் கடவுள் மீது காவடிச் சிந்தும் இராஜ இராஜேஸ்வரி பதிகமும், வேறு தனிச் செய்யுட்களும் இவரது கவிபாடும் திறமையைத் தெள்ளிதிற் காட்டும். அன்றியும் இவரது பொருளுதவியால் வெளிவந்த இலக்கண இலக்கிய நூல்கள் எண்ணிறந்தன.

7. இவர் காலத்தில் இராமநாதபுரத்தில், மூன்றுவது பாரம் வரை ஆங்கில பாடசாலை ஒன்று ஏற்படுத்தியிருந்தார். அது இப்போது இராமநாதபுரம் இராஜா அவர்களால் உயர்தரகலாசாலையாக நடத்தப்பெற்று வருகிறது.

8. இவர் வாழ்நாட்களில் எப்பொழுதும்பலதமிழ்ப் புலவர், இவரைச் சூழ்ந்துகொண்டேயிருப்பார். கொடையிற் பாரி என்று யாவரும் புகழும் வண்ணம், தம்மை அடைந்த புலவர் பலர்க்கும், தம்மிடத்துள்ளதை இல்லை என்னது கொடுத்துக் களிப்புறச் செய்தனர். ஜாலவேடிக்கை செய்வதிலும் இவர் மிகச் சாமர்த்தியம் வாய்ந்தவர்.

9. இவர் பாஷாபிமானத்திலன்றித்தேசாபிமானத்திலும் சிறந்துவிளங்கினர். 1910-ஆ மே-மீ மதுரையில் கூடிய சென்னை மாகாணக் கூட்டம் கூடுவதற்குப் பொருளுதவி செய்ததோடு, அதன் வரவேற்புச் சபையின் தலைவராகவு மிருந்து, இராஜதானியின் பல பாகங்களிலிருந்து வரும் பிரதிநிதிகளை உபசரித்தார். இவர் 'சாந்தம், பொறுமை, சிவபக்தி, ஜீவகாருண்யம்நிறைந்தவர்' என்பது படத்திலுள்ள இவரது முகத்தில் நன்கு விளங்கும்.

10. இவ்வாறு தமது வாழ்நாள் முழுமையும் தமிழுக்காகவே பெரும்பாலும் உழைத்துத் தமது எண்ணத்தை நிறைவேற்றிவிளங்கியஇவர், 1911-ஆ டிசம்பர்-மீ 11உ இராமநாதபுரத்தில் தமது சோமசுந்தர விலாசம் என்ற மாளிகையில் மண்ணுலகத்தை நீத்து, விண்ணுலகமடைந்தார். என்றாலும் "தோன்றில் புகழொடு தோன்றுக"

என்னும் ஆன்றோர் வாக்கிற் கிணங்கத் தோன்றிய இவர், இன்றும் புகழுடம்பு பெற்று விளங்குகின்றார்.

11. இவர் நிலைநிறுத்திய தமிழ்ச்சங்கம்இப்பொழுது இராமநாதபுரம் மகாராஜா ஸ்ரீமான் இராஜஇராஜேஸ்வர முத்துராமலிங்கசேதுபதி யவர்களின் தலைமை ஆதரவிலும், மதுரைஉயர்தரநீதிமன்றத்துவியாயவாதியும், தமிழ்ப் பெரும் புலவருமாகிய ஸ்ரீமான் டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்களது நன்முயற்சியிலும்சிறந்து விளங்குகின்றது.

---

## 26. தசைநார்.

1. முன் பாடப் புத்தகத்தில், 'நமது தேகத்துள், எலும்புகளின் மீது தசை நார்கள் மூடி இருக்கின்றன' என்று கூறியிருப்பதைப் படித்திருப்பீர்கள். இத் தசை நார்கள் தோலுக்கும், எலும்புக்கும் இடையே உள்ளவை. இது மிருதுவாயும், சிவப்பு நிறமாயு மிருக்கும். இத்தசை நார்களின் அமைப்பும், அவற்றின் தொழில்கள் என்ன என்பதையும் ஆராய்வோம்.

2. இவை அடுக்கடுக்காய் அநேக இழைகள் ஒன்றாய்ச் சேர்ந்து ஜவ்வால் கட்டப்பட்டு, நமது சரீரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. தசை நார்கள், நமது செயலுக்கு 'அடங்கியவை,' 'அடங்காதவை' என இருவகைப் படும். கைகால்களை நீட்டிமடக்குதல், நாக்கை மடக்கி நீட்டுதல், கண் இமை கொட்டுதல் இவை போன்றவை, நமது செயலுக்கு அடக்கிச் செய்யும் தசை நார்களின் காரியங்கள். நமதுசரீரத்தினுள்ளிருக்கும் இரைப்பை,குடல்,இருதயம் போன்ற அவயவங்களிலுள்ள தசைநார்கள் நமது செயலுக்கு அடங்காதவை.

3. பொதுவாக இவ்விருவகைத் தசைநார்களுக்கும் சுருங்கி நீளும் தன்மை ஏற்பட்டிருக்கிறது. ரப்பர் என்ற

ஒரு வஸ்துவை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதற்கும், இம்மாதிரி ஏதோ ஒரு குணமிருக்கிற தல்லவா? உண்மையில் அதன் குணம் வேறு; தசைநாரின் குணம் வேறு. ரப்பரைப்பிடித்து இழுத்தோமானால் நீண்டும், விட்டுவிட்டால் சுருங்கியும் விடும். அதாவது பழைய உருவத்தையே அடையும். தசை நாரோ அமுக்கினால் சுருங்கும். விட்டு விடுவோமானால், நீண்டு பழைய நிலைமைக்கு வந்துவிடும்.

4. உதாரணமாக, நமது புஜத்திலுள்ள தசைநார் அடையும் பேதங்களை நமது புஜத்தை மடக்கியும் நீட்டியும் கவனிப்போம். இத்தசைநாரின் ஒரு நுனி தோட்பட்டை எலும்பிலும். மற்றொரு நுனி, நமது முன்கை எலும்பிலும் கட்டப்பட் டிருக்கின்றன. நாம் கையை மடக்கும் போது புஜத்திலுள்ள தசைநார் சுருங்குவதனால் மத்தியில் பருத்துத் தெரிகிறது. தடவிப் பார்த்தால், கல்லைப் போலக் கெட்டியாகவும், அழுத்தமாகவும் காணப் படுகிறது. மடக்கிய கையைப் பழையபடி நீட்டினோமானால், தசைநார் முன்னிருந்த நிலைமைக்கு வந்துவிடுகிறது. அப்பொழுது தசைநாரில் கையை மடக்கிய சமயத்தில் அடைந்திருந்த பருமனும் கடினமும் காணப்படுவதில்லை.



5. இத் தசைநார்களின் வழியே இரத்தக் குழாய்களும் நரம்புகளும் ஊடுருவிச் செல்கின்றன. இந்நரம்புகளின் உதவியால் தசைநார்கள் சுருங்குகின்றன.

6. தசைநார்களில்லாமல் நாம் நிற்கவாவது, நடக்கவாவது எவ்வித வேலையும் செய்யவாவது, உடம்பை வளைத்துத்திருப்பவாவது சிறிதும் முடியாது. நமது தேகத்திலுள்ள தசைநார்களின் உறுதியும், பலமும், அவைகள், செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்திருக்கின்றன. நமது தேகத்தில் சுமார் 600 தசைநார்கள் இருக்கின்றன. நாம் செய்யும் எல்லா வேலைகளும் இத் தசை நார்களின் தொழில்களாகவே இருக்கின்றன.

7. இந்தத் தசைநார்களை, எளிதில் கிழிக்கவாவது, அறுக்கவாவது முடியாது. நாம் செய்யும் பலவித தேகப் பயிற்சியால், தசைநார்களில் இரத்தம் நன்கு பரவி வலுவடைந்து, நமதுதேகம் திடப்படுகிறது. இக்காரணம்பற்றியே பாடசாலைகளில் ட்ரில், கவாத்து, கஸரத்து, கால் பந்து விளையாட்டு முதலிய பலவித தேகப் பயிற்சிகளை விளையாட்டுகளாக நடத்திக் கற்பித்து வருகிறார்கள்.

---

## 27. திருமலை நாயக்கரும், மதுரை நகரமும்.

1. நமது இந்தியா தேசத்தின் தென்பாக மாகிய தமிழ்நாடு, முற்காலத்தில் 'சேரநாடு, சோழநாடு பாண்டியநாடு' எனமூன்று பிரிவாகப்பிரித்திருந்தது. பாண்டிய ராஜ்யத்திற்குத் தலைநகராக விளங்கியது மதுரைமாநகரம்.

2. இம்மதுரைமாநகர் ஜனத்தொகையிலும் நாகரிகத்திலும், நமது இராஜதானியின் தலைநகராகிய சென்னபட்டணத்திற்கு இரண்டாவதாகச் சிறப்புற்று விளங்குகிறது.

3. மதுரைமாநகரில் சிறப்புற்று விளங்கும் கண்காட்சிக்கு உரிய கட்டிடங்கள், பாண்டியர்களுக்குப் பின்னர் ஆண்டு வந்த நாயக்க மன்னர்களால் ஏற்பட்டவை. நாயக்க மன்னர்களில் கீர்த்தியிலும் செய்கையிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியவர் திருமலைநாயக்கர். இவர் கி. பி. 1584-ஆல் பிறந்தவர். இவர் முத்துகிருஷ்ணப்ப நாயக்க மன்னரின் இரண்டாவது புதல்வர். இவர் மதுரைக்கு வந்த விபரம் பின்வருமாறு கூறப்படுகிறது.

4. தம் முன்னோரைப்போல் திருச்சியிலேயே வசித்து வந்த இவர், ஒரு சமயம் காசநோயால் வருந்திக் கொண்டிருந்தார். அச்சமயம் மதுரையில் நடந்த உற்சவத்திற்கு இவர் புறப்பட்டார்; திண்டுக்கல் வரவும் காச நோயின் தொந்தரவு அதிகமானதால் அங்கே தங்கினார். அன்றிரவு இவரது சொற்பனத்தில் மீனாக்ஷியம்மை தோன்றி, 'நீ மதுரையிலேயே வசித்து வந்தால், நோய் விலகிவிடும்' எனக் கூறி மறைந்தார். அவ்வாறே இவர் மதுரையில் வந்து தங்கினார். நோயும் அறவே நீங்கியது.




5. பின்னர் இவர் மதுரையையே ராஜதானியாகக்கொண்டு, தம்மைக்காப்பாற்றியருளிய மீனாக்ஷியம்மை ஆலயத்தைச் சிறப்புறச் செய்தார்; மதுரையிலேயே தாம் வசிப்பதற்குப் பெரிய ஒரு அரண்மனை அமைத்துக்கொண்டார்; நகரை அலங்கரித்தார்; குடிகளுக்குப் பல நன்மைகளைச் செய்து அரசுபுரிந்து வந்தார். அக்காலத்தில் இவர் நாட்டின் வருட வருமானம் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகம்.


6. ஒரு சமயம் மைசூர் அரசன், திருமலை நாயக்கர் மீது படை எடுத்து வந்து, மதுரையை நெருங்கியபொழுது

நாயக்கர் ஒன்றும் செய்ய முடியாமல் தத்தளித்துச் சேதுபதியை உதவி புரியுமாறு வேண்டினர். சேதுபதி உடனே வந்து மைசூர் அரசனை ஓட்டி, நாயக்கருக்குப் பேருதவி புரிந்தார். இந்தநன்றியைமறவாத நாயக்கர், சேதுபதிக்குத் தம்மிடமிருந்த அழகிய தந்தப்பல்லக்கையும், திருச்சுழியல் திருப்பூவணம், பள்ளிமடம் என்றஇடங்களையும்பரிசளித்து திருமலைசேதுபதி என்றபட்டத்தையும் தந்து அனுப்பினர்.

7. இவர் தம் நாட்டில் மட்டுமேயன்றிப் பிறவிடங்களிலும் பல நன்மைகள் புரிந்துளார். பல புண்ணிய க்ஷேத்திரங்களில், அநேக ஆலயக் கட்டிடத் திருப்பணிகளும் செய்துள்ளார். மதுரையில் இவரால் நிருமிக்கப்பட்ட கட்டிடங்கள் மிக அற்புதமானவை. அவை, புதுமண்டபம், இராயகோபுரம், மஹால், தமுக்கம், மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் ஆலயத்தின் சிற்சில பகுதிகள் முதலியனவாம். அவற்றைப் பற்றிக் கவனிப்போம்.




8. ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம்:—இது நகரின் நடு நாயகமாயும், சமசதுரமாயும் உள்ளது. இக்கோயிலின் நான்கு புறத்துமுள்ள. ஆகாயமளாவிய கோபுரங்களில் செய்யப்பெற்றசித்திரப் பதுமைகளும், கோயிலின் உள்ளேயுள்ள தூண்களில்செதுக்கப் பெற்ற பெரிய உருவச் சிலைகளும் அருமையாயும் பார்ப்பவர் கண்களைக் கவரத் தக்கனவாயும்இருக்கின்றன. நாயக்கர் இவ்வாலயத்தில் மாதம் தோறும் தவறாமல்



நடைபெறுமாறு அநேக உற்சவங்களை ஏற்படுத்தினர். அவற்றிற்காக அநேக கிராமங்களையும், மானியங்களையும் விட்டிருக்கின்றார். இங்கு நடைபெறும் உற்சவங்களிற் பல இவராலேயே ஏற்படுத்தப்பட்டவை.

9. புதுமண்டபம்—இது மேற்கூறிய கோயிலுக்குக் கிழக்கிலுள்ளது. இது 105 கஜம் நீளமும், 33 கஜ அகலமுமுள்ள நீண்டசதுரவடிவமாயிருக்கிறது. இம்மண்டபத்தில்




நான்கு வரிசைத் தூண்களுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் இராமாயணம், பாரதம், திருவிளையாடற் புராண சம்பந்தமான உருவங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. முகப்பாயுள்ள தூண்களில் பெரும் பெரும் உருவச் சிலைகள் உள்ளன. நடுப்பத்தியில் இருபுறங்களிலுமுள்ள தூண்களில், திருமலை நாயக்கர் முதல் அவருக்கு முன் ஆண்டுவந்த பத்து நாயக்க மன்னர்களின் உருவச்சிலைகளைக் காணலாம். இம்மண்டபம், திருமலை நாயக்கரால் 20 லக்ஷம் பொன் செலவில் 22 வருடங்களில் கட்டி முடிக்கப்பட்டது. இம்மண்டபத்தில் வைகாசிமாதம் வசந்த உற்சவமும், மார்கழிமாதம் எண்ணெய்க் காப்பு உற்சவமும், ஆவணி மாதம் அங்கம் வெட்டும் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன. இதில், தற்காலம் புத்தகக் கடைகளும் பிறவும் இருக்கின்றன.


10. இராயகோபுரம்:—இது புதுமண்டபத்திற்குக் கிழக்கிலுள்ளது; முற்றுப்பெறாத ஒரு கற்கோபுரம். இக்கோபுரத்தின், மத்தியில் நான்கு நிலைக்கற்கள் பூமிக்குமேல் 50, 60 அடி உயரமுள்ளன். பூமியின் கீழ் எத்தனை அடி இருக்குமோ தெரியவில்லை. இக்கோபுரம் முடிவு பெற்

திருக்குமானால் உலகத்திலுள்ள கட்டிடங்கள் எல்லாவற்றிலும் இது மிகச் சிறந்து விளங்கக் கூடியதாயிருக்கும்.

11. மஹால்:-இது இந்நகரின் தென்கிழக்குப் பாகத்திலுள்ளது. திருமலைநாயக்கர் கட்டிடங்களில் இதுவே பெரிதும் சிறப்புமுள்ளது. இப்போதுள்ள மஹால் நாயக்கர் காலத்தில் கட்டியிருந்த அரண்மனையின் நான்கில் ஒரு பாகம் என்று கூறுகிறார்கள். இது உத்திரங்களில்லாமலும், மரவேலைப்பாடில்லாமலும், முழுதும் செங்கலாலும், சுண்ணாம்பாலுமே கட்டப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் மத்தியில் 250 அடி நீளமும், 150 அடி அகலமுமுள்ள திறந்தமுற்றமொன்று இருக்கிறது. அதைச்சுற்றிலும் மிக அழகு வாய்ந்த மேடைகள் இருக்கின்றன. அம்மேடைகளிலுள்ள தூண்கள் 40 அடி உயரமாயும், 15 அடி சுற்றளவுள்ளதாயும், பார்க்க அருமையாயுமுள்ளன; இம்மாளிகையின் சிறப்பைப் பார்த்தால் மிக்க வியப்புண்டாகும். இப்பொழுது இதில் துரைத்தனத்தார் அநேக க்சேரிகளை வைத்து நடத்தி வருகிறார்கள்.



12. தெப்பக்குளம்:—இது இந்நகரின் கிழக்கே ஏறக்குறைய இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு பெரிய நீர்வாவி. இது 950 அடி நீளமும், அதே அகலமுமுள்ள முழுச் சதுரமாயிருக்கிறது. இக்குளத்தின் நடுவில் ஒரு நீராழி மண்டபம் உளது. அதில் ஒரு கோவிலும், ஐந்து சிறிய கோபுரங்களும் உள்ளன. அக்கோவிலைச் சுற்றிலும்



மா, பலா, தென்னைகள் அடர்ந்த சோலை இருக்கிறது. திருமலை நாயக்கர் பிறந்த தினமாகிய தைப்பூச நக்ஷத்திரத்தன்று, மீனாட்க்ஷி சுந்தரேஸ்வரானுக்கு வருடந்தோறும் இதில் தெப்பத்திருவிழா நடந்து வருகிறது. அச்சமயம் இலக்ஷக்கணக்கான பல விளக்குகளுடனும், மத்தாப்புகளுடனும் விளங்கும் தெப்பமும், குளமும், கோவிலும், பார்ப்பவர் உள்ளத்தைக் களிக்கச் செய்யும்.

13. தமுக்கம்:—இது, வைகையாற்றின் வடகரையிலுள்ள ஒரு சிறந்த கட்டிடம். கோடைகாலத்தில் திருமலை நாயக்கர் இதில் தங்கி யிருப்பது வழக்கமாம். தற்காலம் மதுரை ஜில்லா கலெக்டர் இதில் வசித்து வருகிறார்.

14. பிறநாட்டிலிருந்து வருவோரால் பேராவலுடன் பார்க்கத்தக்க இத்தகைய சிறந்த கட்டிடங்கள் கட்டிய திருமலை நாயக்கர் புகழுடன் வாழ்ந்து 1659-ம் வருடம் பிப்ரவரி-ீ தமது எழுபத்தைந்தாம் வயதில் இம்மண்ணுலகை நீத்து, விண்ணுலகை அடைந்து, இன்றும் அழியாப் புகழுடம்போடு விளங்குகின்றார். இவரால் சிறப்பிக்கப்பட்ட மதுரைமா நகரும் சிறந்து விளங்குகின்றது.

TB 031 N

8619

## 28. திணை, பால், எண், இடம், வேற்றுமை.

1. பெயர்ச் சொற்களைப்பற்றி முன்பாடப் புத்தகத்தில் படித்திருப்பீர்கள். அச்சொற்கள் வாக்கியங்களில் பயன்படும் பொழுது, அவற்றிற்குரிய பாகுபாடு சில உள்ளன. அவை, திணை, பால், எண், இடம், வேற்றுமை எனப்படும். அவற்றைப்பற்றி இங்கே கவனிப்போம்.

2. திணை என்றால் குலம் என்று பொருள்படும். திணை என்பதை 'உயர்திணை எனவும், அஃறிணை' எனவும் அல்—திணை) இருவகையாகப் பிரித்திருக்கின்றார்கள்.

3. உயர்திணை என்பது, மனிதர்களுக்குள்ள பெயர்களையும், தேவர்களுக்குள்ள பெயர்களையும் குறிக்கும். அஃறிணை என்பது மனிதர்களும், தேவர்களும் இல்லாத ஜீவராசிகளையும், உயிரில்லாத சகல பொருள்களையும் குறிக்கும்.

4. உதாரணமாக 'இராமன், சீதை, கோபாலன், குமரன், இந்திரன், வருணன், என்பன உயர்திணைப் பெயர்களாம்.

5. ஆடு, மாடு, கோழி, குதிரை, காகம், பாம்பு, மலை, மரம், செடி, இலை, கல், மண் இவை போன்றன அஃறிணைப் பெயர்களாம்.

6. திணைகளுக்குரிய பெயர்களை ஐந்து வகையாகப் பகுத்திருக்கிறார்கள். அவற்றிற்குப் பால் என்று பெயர். அவை 'ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்' என்பனவாம்.

7. இவற்றுள் ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பன மூன்றும் உயர்திணைக்கு உரியவை.

8, ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய இரண்டும் அஃறிணைக்கு உரியவை.

9. உயர்திணையில், ஆணைக் குறிக்கும் பெயர்களுக்கு ஆண்பால் என்று பெயர். உதாரணம்-இராமன், கோபாலன், கந்தன்.

10. உயர்திணையில், பெண்ணைக் குறிக்கும் பெயர்களுக்குப் பெண்பால் என்று பெயர். உதாரணம்-சீதை, கோமதி, பார்வதி.

11. உயர்திணையில், பலரைக் குறிப்பதற்குப் பலர்பால் என்றுபெயர். உதாரணம்-தேவர், மனிதர், சிறுவர் (ஆண் பன்மை) பெண்கள், மங்கையர் (பெண் பன்மை)

12. அஃறிணையில் ஒன்றின் பெயரைக்குறிப்பதற்கு ஒன்றன்பால் என்று பெயர். உதாரணம் - பசு, கோழி, குதிரை, மரம், செடி, மலை.

13. அஃறிணையில் பல பொருளைக் காட்டுவது பலவின்பால் எனப்படும். உதாரணம்- பசுக்கள், கோழிகள், குதிரைகள், மரங்கள், செடிகள், மலைகள்.

14. எண் என்ற பதத்திற்கு 'அளவு' என்று பொருள். எண் இருவகைப்படும். ஒருபொருளைக் குறிப்பதற்கு ஒருமை என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பதற்குப் பன்மை என்றும் பெயர்.

15. ஒருமைக்கு உதாரணம்-மனிதன், யானை, பூனை, வீடு, கடை,

16. பன்மைக்கு உதாரணம் - மனிதர்கள், யானைகள், பூனைகள், வீடுகள், கடைகள்.

17, முன் கூறியபால்களில் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் மூன்றும் ஒருமையைக் குறிக்கும், பலர்பால் பலவின்பாலாகிய இரண்டும் பன்மையைக் குறிக்கும்.

18. இடம் என்பது 'தன்மை, முன்னிலை, படர்க்கை' என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

19. தன்மை என்பது, தன்னையேகுறிக்கும் சொல்; உதாரணம் நான். முன்னிலைஎன்பது, எதிரில்நிற்போனைக் குறிக்கும் சொல்; உதாரணம்- நீ. படர்க்கை என்பதுதன்மையும் முன்னிலையும் அல்லாதசொல்; உதாரணம்-அவன். நானும் நீயும், அவனோடு மதுரைக்குப்போவோம்' என்ற, வாக்கியத்தில் 'நான்' என்பது தன்மை, 'நீ' என்பது முன்னிலை. 'அவன்' படர்க்கை. இவ்வாறு இடத்தைக் குறிக்கும் பெயர்கள் ஒருமையாயும் பன்மையாயும் வரும்.

20. வேற்றுமை என்பது பெயர்ச் சொற்கள் சில உருபுகளை அடைந்து தமது தன்மையை மாற்றிக்கொள் வதேயாகும். அவ்வேற்றுமை எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. அது மாறுதல் அடையா மலே இருக்கும்.

21. உதாரணம் கோவிந்தன் படிக்கிறான். குதிரை வந்தது. இவற்றில் கோவிந்தன், குதிரை என்பது முதல் வேற்றுமை.

22. ஐ என்பது இரண்டாம் வேற்றுமையின் உருபு. உதாரணம் புத்தகத்தைவிரித்தான். மரத்தைவெட்டினான்.

23. ஆல், ஆன், ஓடு, உடன் என்பன மூன்றாம்வேற் றுமையின் உருபுகளாம். உதாரணம்-தடியால் அடித்தான். வாளால் வெட்டினான். வண்டியோடு ஓடினான். தந்தை யுடன் வந்தான்.

24. கு என்பது நான்காம் வேற்றுமையின் உருபு. உதாரணம்-கோவிலுக்குப் போனான். வீட்டுக்கு வந்தான்.

25. இல், இன், நின்று, இருந்து, என்பவை ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள். உதாரணம்-கல்வியில் பெரிய வன். ஊரின் நீங்கினான். மலையினின்று இறங்கினான். ஊரி லிருந்து வந்தான்.

26. அது, உடைய என்பன ஆறாம் வேற்றுமையின் உருபுகள். உதாரணம்-எனதுபுத்தகம், அவனுடையபலகை.

27. இல்,இடம்,கண்-முதலியன ஏழாம் வேற்றுமை யின் உருபுகளாம். உதாரணம்-காதில் கடுக்கன். அவனிடம் கொடுத்தான். ராமன் சபையின் கண் சென்றான்.

28. ஏ, ஆ, என்பன எட்டாம் வேற்றுமையின் உரு புகளாம். உதாரணம்-மகனே வா சுப்பா போ.

## 29, மாகாண அரசாட்சி.

1. ஒரு நாள் மாணிக்கம் தன் தகப்பனுரைப் பார்த்து, "அப்பா! இன்று நகரத்தின் வீதிகளைச் சுத்தி செய்து, தோரணம் முதலானவைகளைக் கட்டி, அலங்காரஞ்செய்கிறுர்களே; என்ன விசேடம்?" என்று கேட்டான். அதற்கு அவர் 'நாளை இங்குக் கவர்னர் விஜயம் செய்யப்போகிறுர்' என்று சொன்னுர். கவர்னர் என்றுல் யார்? அவரைப்பற்றித் தயவு செய்து சொல்லுங்கள்" என்று கேட்டான் மாணிக்கம்.

2. தகப்பனுர்:-மகனே! பல தாலூக்காக்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா என்பது உனக்குத் தெரியும் அல்லவா? அதுபோல அநேக ஜில்லாக்கள் சேர்ந்தது ஒரு மாகாணமாகும். மாகாணத்தை 'இராஜதானி' என்றும் சொல்லலாம். ஒரு ஜில்லாவை மேல்பார்த்து ஆங்கில அரசாட்சியை நடத்துபவர் கலெக்டர் என்பதும் உனக்குத் தெரியும். அதுபோலவே இராஜதானியாகிய மாகாணத்தில் அரசாட்சியை நடத்துபவர் கவர்னர்.

3. மா;—கவர்னரை நியமிப்பவர் யார்?

4. தக:—இங்கிலாந்தில் பெரிய குடும்பஸ்தராகவும், இராஜாங்கவிஷயத்தில் தேர்ச்சி பெற்றவராகவுமுள்ள ஒருவரைக் கவர்னராக நமது சக்கரவர்த்தியவர்களே நியமித்து அனுப்புகிறுர்கள். இப்படி ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை கவர்னரைப் புதிதாக நியமித்து அனுப்புவார்கள்.

மா:—இவர் எவ்வாறு மாகாண அரசாட்சியை நடத்திவருகிறுர்?

6. தக:—இவர் அரசாட்சியை நடத்துவதில் இவருக்குஉதவிபுரிவதற்காகஇரண்டுசபைகள்ஏற்பட்டுள்ளன.

அவை 'மேல் விசாரணை சபை, சட்ட நிரூபண சபை' என்பனவாம். மேல் விசாரணை சபையில் நான்கு பேர் அங்கத்தினர். இந்நால்வரும் கவர்னரால் சிபார்சு செய்யப்பட்டு, சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்டவர்கள். இந்நால்வரில் இருவர், நமது இராஜதானியிலேயே ஜில்லாக் கலெக்டராயிருந்த ஆங்கிலேயர்கள். மற்ற இருவர், நமது ராஜதானியிலுள்ள கவரவந்தங்கிய கனவான்கள். இவர்கள் மெம்பரானபின் ஐந்து வருடம் வரை அப்பதவியிலிருந்து வேலைபார்த்து வருவார்கள்.

7. மா:—இச்சபையின் அங்கத்தினர் நான்கு பேர் தானா? இவர்கள் பார்த்துவரும் வேலை என்ன?

8. தக.—இச்சபையில் சட்டசபை மெம்பர்களில் இருந்து கவர்னரால்தெரிந்தெடுக்கப்பட்ட 'மந்திரி' என்ற மூன்று மெம்பர்களும் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏழுபேர்களுடன் கவர்னரும் சேர்ந்து மாகாண அரசாட்சியை நடத்துவார்கள். இவர்கள் எட்டுப் பேர்களும் இராஜதானியிலுள்ள சகல வேலைகளையும் பல இலாகாக்களாகப் பிரித்து, ஒவ்வொரு மெம்பரும் ஒன்று அல்லது இரண்டு இலாகாக்களை மேற்பார்த்து வருகிறார்கள்.

9 கவர்னர், தமது அதிகாரத்திலேயே சுதேச அரசாங்கத்தின் விஷயங்களைக்கவனிக்கும் இலாகா, இராணுவ இலாகா, இவைகளை வைத்திருக்கிறார். ஆங்கிலேய மெம்பர்களில் ஒருவர், போலீஸ் இலாகாவைப் பார்த்து வருகிறார். மற்றமூவர்களில் ஒவ்வொருவரும், வருமானஇலாகாக்களையும், நியாய இலாகாக்களையும், பார்த்து வருகிறார்கள்.

10. சட்டசபையிலிருந்து நியமிக்கப்பட்ட 'மந்திரிகள்' மூன்று பேர்களும், கீழே குறிக்கப்பட்ட ஆறு வித இலாகாக்களைக்கவனித்துவருகிறார்கள். அவை;1 லோக்கல்

போர்டும் முனிசிபாலிட்டியும். 2. படிப்பு. 3. சுகாதாரம். 4. விவசாயம், 5. ரஸ்தாவும். 6. பாலமும். உப்புங்களும் முதலியன.


11. இச்சபை வாரத்திற்கு ஒரு முறைகூடுவதுவழக்கம். இச்சபையில் கவர்னர் தலைமை வகிப்பார். ஒவ்வொரு மெம்பரும் அவரவர்களுக்குரிய இலாகாவின் வேலையைப் பார்த்து வந்தாலும், சட்டப்படி அவர்களால் பிறப்பிக்கப்படும் உத்தரவு ஒவ்வொன்றும் இச்சபையின் அனுமதியின் பேரில் கவர்னரே கொடுத்ததாகக் கருதப்படும்.

12. மா:—அப்பா! இவையெல்லாம்தெரிந்துகொண்டேன். சட்டசபையைப் பற்றியும் சொல்லுங்கள்.

13. தக:—சட்டசபைக்கு மெம்பர்கள் 127 பேர். இவர்களில் 98 பேர் இராஜதானியிலுள்ள ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள். மீதமுள்ள 29 பேர்களும் சர்க்காரால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள்ஜனங்களுக்குள்ள குறைகளை எடுத்துரைத்து, அவற்றைநிவர்த்திக்கச் சட்டங்களை ஏற்படுத்தியும், மாகாணவரவுசெலவுகணக்குகளைக்கவனித்தும் வருகிறார்கள். இந்த மெம்பர்கள் மூன்று வருஷத்திற்கு ஒருமுறை தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

14. இந்த மெம்பர்களுக்குச் சிரமமில்லாமல் காரியங்கள் விரைவில் முடிவு பெறுவதற்கு இச்சபையிலுள்ள மெம்பர்களில் சிலர், தனித்தனிக் கமிட்டிகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். தனிக்கமிட்டியார் ஒவ்வொரு விஷயங்களையும் நன்கு ஆலோசித்துப் பின்னர் முழுச் சபையின் அங்கீகாரத்திற்கு அனுப்புகிறார்கள்.

16. இச்சபை கூடச்செய்வதும், நடவடிக்கைகளை ஒழுங்காகநடத்துவதும், இவர்களின் அபிப்பிராயத்தைத் தாக்கல் செய்வதுமான வேலையைச் செய்துவர ஓர் அதிகாரியுண்டு. அவருக்குப் 'பிரசிடெண்டு' என்று பெயர்.




## 30. சாரணச்சிறுவர்.

1. நாம் நாளடைவில் புதிது புதிதான பலவிஷயங்களைப் பார்க்கின்றோம். நாம்பார்க்கும் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ந்து அறியவேண்டியது நமது கடமை. நம்மில் பெரும்பான்மையோர்க்கு அத்தகைய உணர்ச்சி உண்டாவதில்லை. ஏனெனில் அவற்றின் தன்மை நமக்குப் புலப்படாமையால், அவை உபயோகமற்றவை என்று கருதி விட்டுவிடுகிறோம். அவ்வாறு செய்வது சரியன்று. நாம் பாடசாலையிற் பயிலும் கல்வியிலும், பழகும்பழக்கங்கள் பலவற்றுள்ளும் சாலச்சிறந்த பழக்கம் ஒன்றுளது; அதனை இங்கே கவனிப்போம்.

2. நகரங்களிலுள்ள பாடசாலை மாணவர்களிற்சிலர் பச்சைநிறமான தலைப்பாகையும், காக்கிநிறமான சட்டையும், செராயும் அணிந்து. கையில் ஓர் நீண்ட மூங்கிற் கோலைப்பிடித்துக்கொண்டு, விசேஷகூட்டம்நிறைந்துள்ள சில இடங்களில் மிகச் சுறுசுறுப்புடன், தம் தலைவர்இடும்

கட்டளைக்குக் கீழ்படிந்து நடப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவர்கள் யார்? என்ன செய்கிறார்கள்? அதனால் என்ன பயன் அடைகிறார்கள் என்பது தெரியுமா?

3. அவருக்குச் 'சாரணச்சிறுவர்' என்றும், 'பாலிய சேவகர்' என்றும் பெயர். அவர்களில் பலபேர்கள் ஒன்று சேர்ந்து ஒருசங்கத்தினர் ஆகிறார்கள். அச்சங்கத்திற்குச் 'சாரண இயக்கம்' என்றுபெயர். இவ்வியக்கத்தில் சேர்ந்தவர்களில் 6வயது முதல் 11வயது வரை உள்ளவர்களை ஓர் அணியாகவும், 11 வயதிற்குமேல் 18 வயதிற்குட்பட்டவர்களை ஒரு அணியாகவும் பிரித்திருக்கிறார்கள். சேர்ந்தவர்கள் வயதிற்குத் தக்கவாறு பின் கூறப்படும் நற்பழக்கங்களில் பழக்கப்படுகிறார்கள்.

4. இவ்வியக்கத்தில் சேர்ந்ததும் சில உறுதிமொழிகள் தரவேண்டும். அச்சமயம் அவர்கள் தம் கைச்சிறு விரலின் மீது கட்டைவிரலை வைத்துஅழுத்தி மற்றமூன்று விரல்களினால் படத்தில் காட்டியவாறு, சலாம் செய்து கொண்டு, கூறுவார்கள். அவ்வுறுதி மொழிகளாவன:— (1) என்னால் கூடியவரை கடவுளுக்கும், அரசனுக்கும், பெற்றோர்களுக்கும், பெரியோர்களுக்கும் என்னுடைய கடமைகளைச் செய்வேன். (2) எப்பொழுதும்பிறருக்கு உதவி புரியத்தயாராக இருப்பேன். (3) சாரணச்சட்டத்திற்கு அடங்கி நடப்பேன்' என்பனவாம். சலாம்செய்யும் போது காட்டும் மூன்று விரல்களும், இம்மூன்று உறுதி மொழிகளுக்கும் அறிகுறியாகும். சாரணச் சட்டத்தில் அடங்கிய விதிகள் பத்து வகையாம். அவை:—

(1) (சாரணவாலிபனுடையகௌரவம்) மேற்கூறிய உறுதிமொழிப் பிரகாரம் சொன்னசொல் தவறாமல் தன் கடமையைச் செய்து முடித்தல், உண்மையே பேசுதல் முதலியநல்வழிகளை எப்பொழுதும் அனுசரித்து நடத்தல்

(2) (இராஜபக்தி) நமது அரசரால் நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைத் தெரிந்து கொள்ளலும், இராஜ விஸ்வாசியாயிருந்து, பிறருக்குப் போதித்தலும்.

(3) (பிறருக்கு உதவிபுரிய உபயோக முள்ளவனாக இருத்தல்) இதற்குத்தேகபலமுள்ளவனாக இருக்கவேண்டியதவசியம். பலமில்லாதவர்களாகவாவது, வியாதியஸ்தர்களாகவாவது இருந்தால் எவருக்கும் நன்மை செய்ய முடியாது ஆதலால் பலவிதமான விளையாட்டு, கசரத்து முதலிய தேகாப்பியாசங்கள் செய்து, தேக பலத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். தண்ணீரில் நன்றாய் நீந்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். இது கற்றால் தான் ஜலத்தில் விழுந்து விட்டவர்களைத் தூக்கி உதவி செய்ய முடியும் காயப்பட்டவர்கள், நெருப்பில் அகப்பட்டவர்கள், வியாதியஸ்தர்கள் முதலியவர்களுக்குத் தற்கால சாந்திக்கான சிகிச்சை செய்யவும் தெரியவேண்டும். கைத்தொழிலும் கற்றுக்கொள்வது நலம்.

(4) (எல்லோரிடத்திலும் சிநேகம்) மத பேதம், ஜாதிபேதம், ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமே இல்லாமல் எல்லோரிடத்திலும் அன்பும், சினேகமும் உடையவனாக இருத்தல்.

(5) (மரியாதை) சிறியவர், பெரியவர் என்றும், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றும் நினையாமல் யாரிடத்தும் மரியாதை காட்டல்.

(6) (பிராணிகளிடத்தன்பு) ஜீவ ஜெந்துக்களைப் பிடித்து அடித்துத் தொந்தரவு செய்யாமலும், கொல்லாமலும் அவைகளின் உயிரைத்தன்னுயிர் போல் பாவித்து அன்போடிருத்தல்.

(7) (கீழ்ப்படிந்து நடத்தல்) பெற்றோர் தன் சங்கத் தலைவர், உபாத்தியாயர் முதலியவர்கள் இடும் கட்டளைக்குச் சிறிதுந் தவறாது அவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல்.

(8) (முகமலர்ச்சியோடிருத்தல்) எவ்வித கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும், சிறிதும் வருத்தமடையாமல், எப்பொழுதும் அமைதியுடனும் கலக்கமின்றியும் இருத்தல்.

(9) (செட்டாக இருத்தல்) பொருள்களை வீண் செலவு செய்யாமல், அவசியமான அளவு செலவு செய்து, மீந்ததைச் சேர்த்து வைத்தல்.

(10) (திரிகரணசுத்தி) நினைப்பு, பேச்சு, செய்கை ஆகிய இவற்றில் வித்தியாசமில்லாமல் நடத்தல் முதலியனவாம்.

இன்னும் இவைபோன்ற பல சன்மார்க்கங்களைப் பாடசாலையில் ஓய்வு நேரங்களில் தலைவர் போதிக்கின்ற படியால் மாணவர் ஒவ்வொருவரும் இவற்றை நன்கு கவனித்து, இம்முறைகளைப்பின்பற்றி நடக்கவேண்டும். இங்ஙனம் செய்யின் அவர்களுக்குத் தேகபலம் மனோதிடம், பரோபகாரம் தேசாபிமானம், தன்னடக்கம், யுக்தி, சமயோசிதபுத்தி, முதலிய அரிய குணங்கள் நாளடைவில் விருத்தியாகும். அதனால் அவர்கள் மேன்மையான பதவியைப் பெற்றுத் தமக்கும் தம்முடைய பெற்றோர்களுக்கும், தேசத்திற்கும் நல்ல புகழை அளிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வித இயக்கம் தேச முன்னேற்றத்திற்கு ஏற்றது. ஆதலால் நம் நாட்டிலுள்ள உங்களைப்போன்ற ஒவ்வொருவரும் மேற்சொன்னவைகளை அனுசரித்து முன் வருவீர்களானல், நம் நாடு பெரும் பாக்கியத்தை அடையும்.

இவ்வியக்கத்தைச் சுமார் 17 வருடங்களுக்கு முன் ஏற்படுத்தி வைத்த 'ஸர்' ராபர்ட் பேடன் பவல் என்பவர்களுக்கும் இதை ஆதரித்துவரும் நமது மாட்சிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரவர்களுக்கும் உவேல்ஸ் இளவரசரவர்களுக்கும் இறைவன் திருவருள் புரிவானாக.

## 31. பெரியோரைப் பழியேல்.

முன் காலத்தில் கௌட தேசத்தைப் பரிபாலித்து வந்த 'சர்வார்த்தசித்தி' என்ற மன்னவனுக்குப் பட்டமகிஷியினிடத்து, 'நவநந்தர்கள்' என்ற ஒன்பது மைந்தரும், பிரிய பத்தினியாகிய முராதேவியினிடத்து 'மௌரியன்' என்ற ஒரு மைந்தனும் பிறந்தனர். சர்வார்த்த சித்திக்குப் பின்னர் நவநந்தர்கள் பட்டம் வகித்து வந்தனர். அக்காலத்தில் மௌரியனுக்குச் சந்திரகுப்தன் முதலிய நூறு புத்திரர்களிருந்தனர். அவர்கள் உயிருடனிருந்தால் பின்னர்த் தங்களுக்குக் கெடுதி வருமென நவநந்தர்கள் பயந்து, அவர்களைச் சிறையிலிட்டு, ஆகாரமளிக்காமல் கொல்லும்படி செய்தனர். அவர்களில் சந்திரகுப்தன் ஒருவனே மீந்தான். அவனைச் சிறையினின்று விடுவித்துச் சத்திரங்களை மேற்பார்த்து வரும்படி நவநந்தர்கள் கட்டளை இட்டனர். சந்திரகுப்தனும் அவ்வாறேபார்த்துவந்தான்.

இடம்—பாடலிபுரத்திலுள்ள ஒரு வீதி.
காலம்—முற்பகல்.
பாத்திரங்கள்—சாணக்கியர், சந்திரகுப்தன்.

சாணக்கியர்:— [வீதிவழியே நடந்து வருகிறார்.]

சரணகமலாலயத்தை என்ற பாடலின் சந்தம்.

நாழிகையுமாகிறது நல்லபசிவேளையிது
நைமிசாரண்யவனமே செலவேணும்
காலுவிட்டுத் துவண்டைந்தேன் நடப்பதற்கோ முடியவில்லை
நானினியென் செய்வதென்ப தறியேனே

நாழிகை அதிகரிக்கிறது. சூரியன் உச்சிக்கு நெருங்குகிறான். பசியோ தாங்க முடியவில்லை. கை கால் சோர்வு அடைகிறது. நடக்க முடியவில்லையே! நைமிசாரண்யத்திற்குப்போய்ச் சேரவேண்டும். எவ்வாறு செல்வேன்!

[தள்ளாடிக் கொண்டே கீழே கவனியாமல் நடந்து செல்கின்றார். வழியிற் கிடந்த காய்ந்த புற்செடி ஒன்று தடுக்கிக் கீழேவிழுகின்றார். உடனே கோபங்கொண்டு தம்மைத் தடுக்கிய அப்புல்லை வேருடன் தோண்டி எடுத்துக் கையிற் பற்றிக் கொள்கிறார்.]

கள்ளியே இங்குற்ற நல்லதங்காள் என்ற பாடலின் சந்தம்.

அற்பப்புல்லேஏனோ அக்ரமஞ்செய்தாய்
ஆகா ஆகா ஆகா
அட்டிசெய்தே தட்டிவிட்டாய்
ஆனதால் நான் தடு மாறிக்கீழ் வீழ்ந்தேன்
ஆகா ஆகா ஆகா
உன்னாலென் பிரயாணம் - தடை
உற்றதினாலவ மானம் - உன்னைச்
சின்னாபின்னமாய் ஊனம் - உறச்
செய்திடுவேன் பல ஈனம் - வே
ரோடுபிடுங்கி யொடித்துக் கசக்கிப்
போட்டேன் போட்டேன் போட்டேன் (அ)

ஏ அற்பப்புல்லே! உன்னால் என் பிரயாணமும் தடைபட்டதல்லவா? பசியோ தாங்க முடியவில்லை. எனக்கு அன்னமளிப்பார் யார்?

[புல்லைத் துண்டு துண்டாக ஒடித்துக் கசக்கி அப்பால் எறிகிறார். இதைச் சந்திரகுப்தன் பார்க்கிறான்.]

சந்திரகுப்தன்:—

மாதவியோ கண்ணகியோ என்ற பாடலின் சந்தம்.

ஆச்சரியம் ஆச்சரியம் ஆரோ இந்த மாதவர் (ஆ)
ஆரோ இந்த மாதவர் ஆண்மை மிக்க மூதவர் (ஆ)
பேச்சிலிவர் வீரமே பேசுகின்ற தீரமே
பேணியே சரண்புகில் பெறுவேன் நானு தாரமே (ஆ)

(தனக்குள்) என்ன ஆச்சரியம்! மனிதர்கள் இப்படியும் உளரோ? கேவலம் ஒரு புல்! அதன்மீது இவ்வளவு கோபமா! என்ன ஊக்கம்! என்னபிடிவாதம்! இவரல்லவோ என்போன்றவருக்கு உதவி புரியத்தக்கவர். அற்பப் புல்லினிடத்து இவ்வளவு பகைமை பாராட்டி, அதைச் சின்ன பின்னப்படுத்திய இவரே எனது விரோதிகளேயும் வேரறுக்கத் தக்கவராவர். இவரைச் சரணம் அடைவதைத் தவிர வேறு ஒரு உபாயமும் எனக்குத் தோன்றவில்லை. இவரிடம் செல்லுகிறேன். [முனிவர் பக்கத்தில் வருகிருன்]

சோமசுந்தரனே என்ற பாடலின் சந்தம்.

சாமியே சரணம்—பிர
தான-மோன-மான-ஞான (சா)

பூமிமீது தங்கள் சேவை
பொன்பெறும் வேறேதுதேவை
தாமிந்தச் சத்திரத் தின்று
தங்கி யுண்டு சென்ருல் நன்று (சா)

ஐயா! தாங்களோ மிகக் களைப்புற் றிருக்கின்றீர்கள். இக்கொடிய புல்லினல் தாங்கள் சிறிது நேரம் அடைந்த துயரைக் கண்ணுற்றேன். இராஜ பாட்டையாகிய இப் பெரியவீதியிலே இவ்வாறு பாதசாரிகளுக்கு இடர் ஏற்படுமானல், இந்நாட்டின் அரசாட்சியின் சீர்கேட்டைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? நிற்கத் தங்களைப் பார்க்கும்போது, தங்கள் தவப்பெருமை விளங்குகிறது. தங்கள் தேககாந்தியோ வாட்டமுறுகிறது. சற்று நேரம் இச்சத்திரத்தில் உண்டு இளைப்பாறிச் செல்லலாகாதா?

[சாணக்கியரை உபசரித்து சத்திரத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள ஒரு ஆசனத்தி லமர்த்தி, உபசரணை புரிகிருன். முனிவர் களைப்பாறுகிருர்.]

சாணக்கியர்— [சந்திரகுப்தனைப் பார்த்து]

விருத்தம்.

உத்தம குணனேவாழி உன்னை நான் பார்க்கும்போது
மெத்தவும் ராஜ அம்சம் விளங்கிடு கின்றதையா
சத்திர மிதனில் வந்து சார்ந்திருக் கின்ற நீயார்
சித்தமும் மகிழ்வேனப்பா தெரிந்திடச் செப்புவாயே

உத்தமபுருடனே! உன்னைப் பார்க்குமளவில் இராஜ லக்ஷணம் பொருந்தினவனைக் காணப்படுகிறாய். உன் குணமோ மிக்க அருமையானதாய் இருக்கிறது. நீ யார்? இங்கே உனக்கு என்ன வேலை?

சந்திரகுப்தன்—நோண்டிச் சிந்தின் சந்தம்.

ஐயனேஎன் வரலாறு சொல்லுகிறேன்
அன்புடன் நீர் கேட்டருளி ஆதரிப்பீரே
வையமிதை நீதியுடனே அரசாண்டு
வந்திட்டசர் வார்த்தசித்தி பேரனும் யானே
அன்னவர் தம் பட்டமகிஷி ஈன்றெடுத்த
அனிதிசேர் நவநந்தர் ஒன்பது பேர்கள்
மன்னவர் தம் பிரியபத்தினி முராதேவி
மைந்தரான மௌரியன் என்பவர் பெற்ற
மக்களொரு நூறுபேர்களில் யாமொருவன்
மாதவரே என்றன் பெயர் சந்திரகுப்தன்
தக்கதொரு பட்டம்பெற்றபின் நவநந்தர்
தந்திரமா யென்னையுமென் னுடன் பிறந்த
தொண்ணூற்றொன் பதுபேருடன் என் தந்தையையும்
சூதாகச் சிறையில் வைத்துக் கொல்ல முயன்றார்
அன்னமாகா ராதியின்றியும் இருந்தநான்
அத்தனை பேருக்கிடையில் பிழைத்துக்கொண்டேன்

சத்திரத்தில் வேலைசெய்யென்று என்னையவர்
தக்கமணிய காரனுய் வைத்தனரிங்கு
உத்திரவுப்படியேவந்து மிகவருந்தி
உழைத்து வருகிறேன் நான் இன்னுமவர்கள்
தீங்கிழைப்பா ரென்று பயந்தே என் மனது
திடுக்கிடு கிறதெனக் காதரவில்லை
தாங்களே எனக்கொருகதி உற்றதுணை
தஞ்சமாத ரிப்பீரென்று சரண்புகுந்தேன் (ஐய)

சுவாமி! இக்கௌடநாட்டை யாண்டுவந்த சர்வார்த்த சித்தி என்ற மன்னனுடைய பேரன் யான். அம்மன்னனுக்குப் பட்டமகஷியின் புத்திரரான நவநந்தர்கள் இப்பொழுது நாட்டை அரசுபுரிந்து வருகின்றனர். அவருடைய பிரிய பத்தினியான முராதேவியினிடம் என் தகப்பனுை மௌரியன் பிறந்தார். அவரையும், என்னையும், என்னுடன் பிறந்த சகோதரர் 99 பேரையும், இக்கொடிய பாதகர்களான நவநந்தர்கள் சிறையிலிட்டு, ஆகாராதிகள் கொடாமல் துன்புறுத்தினர்கள். அவர்கள் எல்லோரும் இறந்தனர். நான் ஒருவனே மீந்தேன், என்னை இச்சத்திரத்திற்கு மணியகாரனுக நியமித்திருக்கிறுர்கள். இன்னும் எனக்கு ஏதாவது தீங்கிழைப்பார்களோ வெனப் பயப்படுகிறேன். என்னை யாதரிப்பார் யாருமில்லை. தங்களைப் பார்க்குமளவில் எவ்வாற்றுனும் என்னை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன். காப்பாற்றுவீர்களாக. [அவர் பாதத்தில் வீழ்கிறுன்.]

சாணக்கியர்:—

என்ன கேள்வி முறை என்ற பாடலின் சந்தம்.

ஏன் வருந்துகிறுய் உன்
எண்ணம் போல் எல்லாம் இனி முடிந்திடும் (ஏ)
நான் தானே துணை நீ தானேமகிழ் சீர் தானேவரும் (ஏ)

கருப்பையுள்முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
கடவுள் படியிட்டுக் காப்பா ரிதேமெய்க்கும்
காண்பாய் நீ யின்பம்பூண்பாய் ராஜ்ஜியம் மாண்பாய்வந்திடும்(ஏ)

இராஜகுமாரா! ஏன் வருந்துகிறாய்? 'கல்லினுள் தேரைக்கும், கருப்பையுள் முட்டைக்கும், அள்ளி அமுதளிக்கும் ஈசன் ஒருவன் இருக்கிறான்' நீ அஞ்சாதே! உனக்குத் தீங்கிழைக்கக் கருதும் துஷ்டர்கள் எவ்வாறேனும் கெடுவார்கள். 'கெடுவான் கேடு நினைப்பான்' அல்லவா? நீ என்னைச் சரணம் அடைந்ததால் எவ்வித உதவியும் புரிவதற்கு யான் உனக்குக் கடமைப்பட்டவனாவேன். நீ பயப்படவேண்டாம். நான் சென்றுவருகிறேன்.

சங்:— பாதுகையே என்ற பாடலின் சந்தம்.

தவநிதியே தவநிதியே
தங்களொடுவருவேன் மங்களமேபெறுவேன் (தவ)
தவநந்தர்களெனக்கு நலம்புரியாரே
நவிலொணாத்தீங்கிழைத்து நலியவைப்பாரே
கவனமாய்த்தங்கள் பின்னே கானகமடுத்து
காலங்கழித்திடுவேன் கவலையை விடுத்து (தவ)

தவநிதியே! தாங்கள் அவ்வாறு உரைத்தல் தகாது. என்னைக் கைவிட்டுச் செல்லலாகாது. என்னுடன் சிறிது தினங்கள் தங்கியிருந்து, என்னையும் அழைத்துக்கொண்டு, செல்லுங்கள். யானும் கானகத்தில் வசித்து, எனது வாழ்நாட்களைக் கழிக்கிறேன்.

சாண:—குழந்தாய்! அவ்வாறே சிலநாள் இங்குத் தங்கியிருந்து செல்லுகிறேன். இப்பொழுது கங்கைக்குச் சென்று நீராடி வருகிறேன். (கங்கைக்குச் செல்லுகிறார்.)

## 32. இரண்டாங்களம்.

இடம்:—அன்னசத்திரம்.

காலம்:—நடுப்பகல்

பாத்திரங்கள்:—சாணக்கியன்; சந்திரகுப்தன்.
நவநந்தர்கள், சபையோர்கள்.

சாண:—) [நீராடிவந்துசத்திரத்திற்குள் நுழைகிறார்.]

மார்கழிமாதம் என்ற பாடலின் சந்தம்.

அப்பா! என்ன சிரமம் யானிங்கு
ஆற்றில் நீராடி வருமுன்னே
அதிகரித்ததுபசி அமருவேன்
அங்கமும்வியர்த்ததால் இங்குபின்னே
சற்றுநேரங்கழித்துச் தானங்கோ
சாப்பிடலாமதோ ராசனமே
தனியாயிருக்கிறது தக்கவி
சார்ந்ததிலமாலாம் மோசனமே (அ)

அப்பப்பா! என்ன சிரமம்! நீராடிச் சத்திரம் வருவதற்குள் தேகமெல்லாம் வியர்த்துவிட்டது. கண்ணோ இருளடைகிறது. சாப்பாட்டிற்குஎல்லோரும் அமர்ந்திருக்கிறார்களே. நான் உட்காருவதற்கு இடத்தைக் காணோமே; ஆசனம் ஒன்றுமில்லை. இந்த வாயிலண்டையே இதோ இருக்கும் ஆசனத்தைப் போட்டுக்கொண்டு உட்காருகிறேன்.

(பக்கத்திலிருந்த அரசர் ஆசனத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு உட்காருகிறார்.)

வாயில்காப்போன்:-ராஜாக்கவாராங்கோ, உஷார்!உஷார்.

நவநந்தர்கள்:—(நகர்வலம் வரும்பொழுது ஒருவர்க்கொருவர்) நாம் உத்தியான வனத்தைப் பார்த்துவிட்டோம்.

சத்திரத்தில்இப்பொழுதுசாப்பாட்டுவேளையாதலால் அங்குச்சென்று, சற்றுக் கவனிப்போம், வாருங்கள்.

[எல்லோரும் உட்சென்று, பார்த்து வரும்பொழுதுகந்தை புடைத்திய அந்தணரொருவர்பொன்னாசனத்தில்வீற்றிருப்பதைக் கண்டு, கோபத்தோடு ஏவலாளர்களைப்பார்க்கின்றனர்.]

போப்போ எட்டிப்போப்போ என்ற பாடலின் சந்தம்.

யாரோ இவன் யாரோ இந்த
ஆசனத்தில்வந்து கூசாதிருப்பவன் (யா)
தாராளமாயதில் தான்வீற்றிருக்கிறான்
தக்கபடிசிட்சை இக்கணஞ்செய்யுங்கள் (யா)
கேவலன் தரித்திரன் கேடுகெட்ட அற்பன்
கெருவமேதானிங்கோ ருருவமாய்வந்தவன் (யா)

இவன்யார்? அதமன், அற்பன், கேவலன், இவன் தரித்திருக்கும் கந்தைக்கும், உட்கார்ந்திருக்கும் ஆசனத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்? இவனுக்கு அக்கிராசனமா? துடைப்பத்திற்குப் பட்டுக் குஞ்சமா? இவனை இவ்வாறு வீற்றிருக்கும்படி விட்டவர் யார்? நன்றாக நடக்கிறது சத்திரம்! எங்கே சந்திரகுப்தன்? ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? இழுத்துத்தள்ளுங்கள் இவன்கையைப்பற்றி.

காவலர்:-யாரடா இங்கேஉட்கார்ந்திருக்கிறது, எழுந்திரு, எழுந்திரு, என்னடா இன்னும் உட்கார்ந்திருக்கே!
[கையைப்பற்றி இழுத்து விடுகின்றனர்.]

சாண:-கோபத்தினால் முகம் கறுத்துக் கண்கள் சிவந்து, உதடு துடித்து [அரசர்களைப்பார்த்து]

சரி சரி சாமுத்திரி என்ற சந்தம்.

நீதமா-நீதமா நீரென்னை அவமதித்தீர் (நீ)
கிட்டேரஞ் செய்தீர்கள் பட்டேமடிவீர்கள் (நீ)

பாதகம்புரிந்தநீர் படாதபாடுபடும்படி
பாரின்மீதுசெய்கிறேன்யான் பஞ்சைகாள் கெடும்படி
பார்க்கிறேன் உம்மை-பழி-தீர்க்கிறேன் உம்மை-என்னைப்
பற்றித்தள்ளினாற்போல் எற்றிஉதைக்கிறேன் (நீ)
கொஞ்சமும் மதித்திடாது கொடுமையீதுசெய்தீர்கள்
கோபமூளமனதில் கெர்வம்கொண்டே என்னைவைதீர்கள்
கொல்லுவேனும்மை - போரில்-வெல்லுவேனும்மை-நான்
கொன்றேயென் குடுமியை நன்றே முடிக்கிறேன் (நீ)

துன்மார்க்கப் பதர்களே! அக்கிரம அதமர்களே! உங்களுடைய சத்திரத்திற்கு வந்த அதிதியை மதியாது, அவமானப்படுத்தினீர்கள் அதிதி பூசையின்பெருமையை அறியாது அடாது செய்தீர்கள். நீங்கள் விரைவில் படாத பாடு படுவீர்கள். யாரை அதமன், அற்பன், கேவலன்? என்னை எவ்வாறு கையைப்பற்றி இழுத்துவிடச் சொன்னீர்களோ, அதுபோல உங்களையும் சிம்மாசனத்தினின்று இழுத்தெறிந்து கண்டம் கண்டமாய்த் துண்டித்து, உங்கள் சவத்தைக் கயிறுகட்டி யாவருங்காண இழுத்தடிக்கச் செய்கிறேன். அவ்வாறு செய்யும்வரை இப்போதவிழ்த்து விடும் இக்குடுமியை நான் முடிப்பதில்லை. [செல்லுகிறார்.]

பின்னர் சாணக்கியர் தம் சபதப்படியே நவநந்தர்களைப் போரில் கொன்று சந்திரகுப்தனுக்கு முடிசூட்டினார். சந்திரகுப்தன் சாணக்கியரை மந்திரியாகவைத்து அரசுபுரிந்துவந்தான்.

சரி சரி சரி கம்ம என்ற பாடலின் சந்தம்.

தனிமகுடச் சோபனமே சந்தமும் மங்களமே
சந்தோஷம் பொங்கவே தரணி யெங்கணுமே
சந்திர குப்தன் அர சார்ந்துமே வாழ
சாணக்கியமுனி மந்திரிமார் சூழ
தங்கும் புகழ் எங்கும் சுப மங்களமே (தனி)

ஔவையார் அருளிச்செய்த

# வாக்குண்டாம்.

1. நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

3. அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடியிருக்குமாம் கொக்கு.

4. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

5. உற்ற இடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

6. நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்.

7. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி இருப்பதுவும் நன்று.

8. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி இருப்பதுவும் தீது.

9. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை.

10. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமம் செயல்.

11. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

12. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

13. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

14. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

15. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

16. சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தால்பொன்னாகும்என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

17. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழிமுகவாது நானாழி—தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்.

18. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

19. எழுதியவா றேயென் றிரங்கு மடநெஞ்சே
கருதியவா றாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச்சேர்ந்தார்க்குக்காஞ்சிரங்காயீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

20. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோடொப்பாரும்போல்வாரே-விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

21. நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

22. நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

23. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

24. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

## அறப்பளீசுர சதகம்.

வாலிபம் தனில்வித்தை கற்கவேண்டும்
 கற்ற வழியிலே நிற்கவேண்டும்
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும்
 தேடி வளரறம் செய்யவேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண்டும்
 பிரிதல் செய்யா திருக்கவேண்டும்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும்
 கொண்டு தியாகம் கொடுக்கவேண்டும்
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும்
 நாட்டி நன்றாய் நடத்தவேண்டும்
நம்பனிணை யடிபூசை பண்ணவேண்டும்
 பண்ணி னுலுமிகு பக்திவேண்டும்
ஆலமமர் கண்டனே பூதியணி முண்டனே
 அண்ணலே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
 அறப்பளீ சுர தேவனே.

தனக்குவெகு புத்தியுண்டாயினும் வேறொருவர்
 தம்புத்தி கேட்க வேண்டும்
தானதிக சூரனே ஆயினும் கூடவே
 தளசேகரங்கள் வேண்டும்.
கனக்கின்ற வித்துவான் ஆயினும் தன்னிலும்
 கற்றோரை நத்த வேண்டும்
காசினியை ஒருகுடையில் ஆண்டாலும் வாசலிற்
 கருத்துள்ள மந்த்ரி வேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்யன் ஆயினும்
 சுதிகூட்ட ஒருவன் வேண்டும்

சுடர்விளக் காயினும் நன்றாய் விளக்கிடத்
    தூண்டுகோல் ஒன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
    ஐயனே அருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
    அறப்பளீ சுர தேவனே.

## திருப்புகழ்.

(சுவாமி மலை.)

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த தனதான.

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
    தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
    தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனே
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
    கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
    கமழுமண மார் கடப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுர நீள்ச வுக்ய
    சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
    தவிபுரிய வேணு மெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
    அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழனிமலை மீது தித்த
    அழகதிரு வேர கத்தின் முருகோனே

## தாயுமானவர்.

(சுகவாரி.)

அரும்பொனே மணியேயெ னன்பேயெ னன்பான
அறிவேயெ னறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே யென்றென்று பாடினேன்
ஆடினே னாடிநாடி
விரும்பியே கூவினே னுளறினே னலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி யெனவிருகண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலுமனே
இடைவிட்டு நின்ற துண்டோ
என்றுநீ அன்றுநா னுன்னடிமை அல்லவோ
யாதேனு மறியா வெறுந்
துரும்பனே னென்னினுங் கைவிடுத னீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

---

## ஆசாரக்கோவை.

வைகறை யாமம் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை.

---

மதுரை.
13.4.28.

அன்புள்ள நாராயணனுக்கு,

இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடம் எல்லோருடைய க்ஷேமத்தையும் பற்றி அறிய விரும்புகிறேன்.

நீ எழுதிய கடிதம் கிடைத்தது. இவ்வாரத்தில் சித்திரைத் திருவிழா ஆரம்பமாய் விட்டது. பாடசாலை விடுமுறை ஆரம்பித்தவுடன் இங்கே புறப்பட்டு வா.

இவ்வருஷம் பரீக்ஷையில் நீ தேர்ச்சி பெறுவாய் என்று நம்புகிறேன். உனக்கு மேல் வகுப்புக்கு வேண்டிய புத்தகங்கள் யாவும் இவ்வூரில் உள்ள வி.மா. கோபால கிருஷ்ணக் கோன் புத்தகசாலையில் விலை சகாயமாய் வாங்கிக் கொண்டு போகலாம்.

86192

உன் அன்புள்ள நண்பன்
சு. அரங்கராஜன்

## ஜில்லா பூகோள வர்க்கம்.

இவை பசுமலை உயர்தரபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் நே.ரா.சுப்பிரமணியசர்மா அவர்களால் துரைத்தனத்தார் ஏற்படுத்திய புதிய விதிகளை அனுசரித்து எழுதப்பெற்று, தமிழ்நாடுமுழுதும் பாராட்டப்பட்டுவருகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| மதுரை ஜில்லா பூகோள | சாஸ்திரம் | 0 | 5 | 0 |
| இராமநாதபுரம் ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| திருநெல்வேலி ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| திரிச்சிராப்பள்ளி ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| தஞ்சாவூர் ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| சேலம் ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| கோயம்புத்தூர் ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| வட ஆற்காடு ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| தென் ஆற்காடு ஜில்லா | ,, | 0 | 5 | 0 |
| செங்கற்பட்டு ஜில்லா | ,, | 0 | 5 | 0 |

இவற்றுள் அந்தந்த ஜில்லாக்களின் சரித்திரமும் பொதுவாய் அரசியலும் சுருக்கமாக எழுதிச் சேர்க்கப்பெற்றுள்ளன.

இதர ஜில்லாக்களின் பூகோளம் விரைவில் வெளிவரும்.

---

## உப பாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கதையும் பாட்டும் 1, 2 பாகங்கள் | தனித்தனி | 0 | 3 | 0 |
| இராணி மங்கம்மாள் சரித்திரம் | .... | 0 | 1 | 0 |
| திருமலை நாயக்கர் சரித்திரம் | .... | 0 | 2 | 0 |
| ஷை பெரிய புத்தகம் | .... | 0 | 10 | 0 |
| கிருஷ்ணன் தூது வசனம் | .... | 0 | 4 | 0 |
| பெரியார் பெருமை | .... | 0 | 3 | 0 |
| கண்ணன் பாலலீலை | .... | 0 | 6 | 0 |
| இராமாயண சாரசங்கிரகம் | .... | 0 | 6 | 0 |
| பாரத சார சங்கிரகம் | .... | 0 | 6 | 0 |
| பாகவத சாரசங்கிரகம் | .... | 0 | 10 | 0 |
| விராடநகரத்தின் ரகசியம் | .... | 0 | 12 | 0 |
| விநோதக்கதைகள் | .... | 0 | 10 | 0 |
| மாணவர் நீதிக்கதைகள் | .... | 0 | 6 | 0 |
| நல்லொழுக்கபோதம் | .... | 0 | 6 | 0 |

மதுரை புத்தகவியாபாரம்,

# இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியிட்ட தமிழ்ப் புத்தகங்கள்.

**துரைத்தனத்தாரால் அங்கிகரிக்கப் பெற்றன.**

புதிய பாடப் புத்தகங்கள்:— இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனாமுறைக்கிணங்க சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணி சாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப்பெற்றுள்ளன.

| | |
|---|---|
| புதிய முதல் பாடம் | 0—2—0 |
| புதிய இரண்டாம் பாடம் | 0—3—0 |
| புதிய மூன்றாம் பாடம் | 0—3—6 |
| புதிய நான்காம் பாடம் | 0—4—6 |
| புதிய ஐந்தாம் பாடம் | 0—6—0 |

---

## நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

| | | |
|---|---|---|
| உலகநீதி | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| ஆத்திசூடி | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| கொன்றைவேந்தன் | நீதிவாக்கியக்கதைகள் | 0—2—0 |
| வெற்றிவேற்கை | நீதிவாக்கியக்கதைகள் | 0—3—0 |
| மூதுரை | நீதிவாக்கியக்கதைகள் | 0—5—0 |
| நல்வழி | நீதிவாக்கியக்கதைகள் | 0-10—0 |

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணாக்கர்கள் நெட்டுருக்கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங்கொண்டே, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல் பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறு எழுதப்பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவை நற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்போஸிஷன் என்னும் பாஷாஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.